BIBLE TREASURES / Tamil

# பைபிள் புதையல்கள்



ஆன்மீக வாழ்வின் துவக்கம் முதல்
இவ்வுலக வாழ்வின் இறுதி வரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

சுருக்கக் குறிப்புகள்

R.ஸ்டான்லி

# அன்பளிப்பு

______________________________________________

*எவருக்கு ?*

______________________________________________

*எவரிடமிருந்து ?*

______________________________________________

*என்று ?*

______________________________________________

*எதற்கு ?*

______________________________________________

______________________________________________

*என் ஒப்பம்*

# பைபிள்
## புதையல்கள்

*''விண்ணரசைக் குறித்தவைகளில்*
*உபதேசிக்கப்பட்டுத்*
*தேறின வேத போதகன் எவனும்*
*தனது கருவூலத்திலிருந்து*
*புதியவைகளையும் பழையவைகளையும்*
*எடுத்துக் கொடுக்கிற*
*இல்லத் தலைவனுக்கு ஒப்பாயிருக்கிறான்!''*

(மத்தேயு 13:52இல் இயேசு சொன்னது)

***அர்ப்பண வேண்டல்:***

***இந்நூல் அதன் வாசகருக்குக்***
***கொண்டுவரவிருக்கும்***
***ஆசீர்வாதங்களுக்கேற்ப,***
***எனக்காய் ஜெபிக்கிறவர்களுக்கு***
***ஆண்டவர் பலனளிக்க வேண்டுமென்று***
***அவரிடம் கெஞ்சுகிறேன்.***

# பைபிள்
# புதையல்கள்

**R. ஸ்டான்லி,** B.E., M.TECH.,
*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

— தமிழாக்கியவர் —

S. Antony Arputham, M. Benedict, Dorothy Isaac,
Y. Edward, Girija Priyadarshni, Gladys Sugirtharaj,
P. Godfrey, Ida & Ebenezer, R. Jeyaseelan, Kamini Selwyn,
Kohila Ponnusamy, Linetta Sampathkumar, A. Maxwell Samuel,
A. Rajesh, D. Samraj, Stella & Andrew, Suseegaram Solomon,
G. Thinagaran, Vasanthi Regunathan

Evangeline Stanley Jones
13 Church Colony
Vellore 632 006, India
<evangeline@stanleyonbible.com>

**Bible Treasures** (Tamil)

Copyright 2013 R. STANLEY

First Edition : September 2013
Fourth Edition: April 2018

திருமறையின் பழையதும் புதியதுமான மொழியாக்கங்கள்
இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எடுத்தாளப்பட்ட திருவசனங்களின்
வார்த்தைகள், வரிகள், வாக்கியங்கள் யாவும்
சரிவெழுத்தில் (italics) கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூல் ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, கன்னடம்
ஆகிய மொழிகளிலும் உண்டு.

Written permission must be obtained from the Author
for reprinting or translating any part of this book.
Profits, if any, from the sale of this book
go to support literature services and charitable activities.

Printed by
SRM Printers,
Vellore

விலை ரூ. 500/-; அயல்நாடுகளுக்கு US $ 25

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | இந்நூலைப் பற்றி ... | ... | 8 |
| 1. | மனந்திரும்புதல் | ... | 13 |
| 2. | விசுவாசம் | ... | 45 |
| 3. | ஜெபம் | ... | 81 |
| 4. | திருமறைத் தியானம் | ... | 115 |
| 5. | ஆராதனை | ... | 149 |
| 6. | கிறிஸ்தவ ஐக்கியம் | ... | 181 |
| 7. | பரிசுத்தம் | ... | 227 |
| 8. | ஆன்மீக வளர்ச்சி | ... | 271 |
| 9. | ஆன்மீகப் போராட்டம் | ... | 321 |
| 10. | ஆன்மீக வரங்கள் | ... | 355 |
| 11. | கொடுத்தல் | ... | 399 |
| 12. | சிந்தித்தல் | ... | 433 |
| 13. | திட்டமிடுதல் | ... | 463 |
| 14. | வேலை செய்தல் | ... | 497 |
| 15. | திருப்பணி | ... | 533 |
| 16. | பிறர்க்குதவுதல் | ... | 569 |
| 17. | தலைமைத்துவம் | ... | 611 |
| 18. | துக்கித்தல் | ... | 665 |
| 19. | பாடனுபவித்தல் | ... | 709 |
| 20. | மரணம் | ... | 743 |
| | வசன அட்டவணை | ... | 793 |
| | பொருள் அட்டவணை | ... | 817 |
| | நபர்கள் அட்டவணை | ... | 822 |

# இந்நூலைப் பற்றி ...

2008 நவம்பர் முதல் 2013 ஜனவரி வரை ஒளிபரப்பாகிய *''ஆரோக்கிய உபதேசம்''* என்ற எனது வாராந்திர 30-நிமிட ஆங்கிலம்-தமிழ் நிகழ்ச்சியில் நான் பயன்படுத்திய பிரசங்கக் குறிப்புகளின் தொகுப்பே *''பைபிள் புதையல்கள்''* (Bible Treasures) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்நூலாகும். மனந்திரும்புதல் முதல் மரணம் வரை 20 தலைப்புகளில், ஒவ்வொரு தலைப்பிற்கும் 10 பாடங்களெனப் போதித்தேன்.

இந்த 200 பாடங்களையும் ஒவ்வொன்றாய் ஆயத்தப்படுத்தும்போது, ''புதையல்களைத் தேடுவதுபோல்'' திருமறையைச் சிரத்தையெடுத்து ஆராய்ந்ததாலேயே இந்நூலுக்குப் *''பைபிள் புதையல்கள்''* எனப் பெயரிட்டேன் (நீதி 2:4,5). கண்டுபிடித்த ஒவ்வொரு சத்தியமும் எனக்கு அந்தந்தப் பாடத்தில் கூடுதல் தெளிவைத் தந்ததோடு, ''திரளான கொள்ளைப் பொருளைக்'' கண்டுபிடித்தவன்போல் மகிழ்ச்சியால் துள்ளவும் செய்தது (சங் 119:162). தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உலகின் பல பகுதிகளிலிருந்து பார்த்தோரின் சாட்சிகளும் இவ்விதமே இருந்தன. கடவுள் எனக்கு இன்னொரு வாழ்வு தருவாரானால், திருமறையை ஆராய்வதிலேயே இன்னும் கூடுதல் நேரம் செலவிட விரும்புவேன். ஏனெனில், ''கர்த்தாவே, சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன்; உமது கற்பனையோ மகா விஸ்தாரம்'' என்ற திருப்பாடகன் போலவே நானும் சாட்சியிடுவேன் (சங் 119:96).

எனது ஒளிபரப்பைப் பார்த்தவர்களது சாட்சிகள் இவ்வாறாயிருந்தன: ''இப்படியொரு வசனம் வேதத்தில் இருப்பதே எனக்குத் தெரியாதே... இந்த வசனத்தின் சரியான பொருள் இப்பொழுதான் எனக்குப் புரிந்திருக்கிறது ... ஓரங்களை நீங்கள் சமநிலைப்படுத்தும் பாணி எனக்குக் கூடுதல் வெளிச்சம் தருகிறது ... இந்தத் தலைப்பில் இவ்வளவு சத்தியங்கள் வேதத்தில் இருக்கின்றனவா? ... இப்படிப் பல.'' எனது உழைப்பு வீண்போகவில்லை என்பது எனக்குப் பேருக்கம்.

துர்வுபதேச வெள்ளங்களுக்குத் தப்பி, தேவனது வார்த்தையின் ஆரோக்கிய உபதேசத்தை நீங்கள் தழுவிக்கொள்ள உதவுவதே இப்பாடங்களின் நோக்கம். எப்பொழுதும் இருந்ததுபோலவே, கள்ளப் போதகர்தான் நல்ல போதகரைவிட அதிகம். உத்தமமாய் வேதத்தைப் போதிப்பவர்கள் சிறுபான்மையினராகவே இருப்பர் என்பதை மனதிற்கொண்டு, இளம் தீத்துவுக்கு பவுல் அறிவுறுத்தியது: ''நீயோ ஆரோக்கிய உபதேசத்திற்கேற்றவைகளைப் பேசு!'' (தீத் 2:1) அப்போஸ்தலன் முன்னறிவித்ததையும் பாருங்கள்: ''மக்கள் ஆரோக்கிய உபதேசத்தைத் தாங்க மனதில்லாமல்,செவிக்கினியதையே கேட்க விரும்பி, தங்கள் தீய நாட்டங்களுக்கேற்பப் போதகர்களைத் தங்களுக்குத் திரளாய்க் குவித்துக்கொண்டு, சத்தியத்திற்குச் செவிசாய்க்க மறுத்து, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்'' (2 தீமோ

4:3,4). இவ்வித நாட்கள் ஏற்கனவே வந்துவிட்டன அல்லவா? பிரசங்க பீடங்களில் திடமான திருவசனப் போதனையைவிட கதைகளும் சொந்த அனுபவங்களின் அறிக்கைகளுமே அதிகம். தீர்க்கன் ஆமோஸ் முன்னறி வித்தபடி, ''வசனம் கிடையாத பஞ்சம்'' வந்துவிட்டது (ஆமோ 8:11). வேத வாக்கியங்களுக்குப் பதிலாக உணர்ச்சிவச அனுபவங்கள்! கடவுளது சத்தி யங்களுக்குப் பதிலாக மனிதனின் பாரம்பரியங்கள்! (மத் 15:3,6; மாற் 7:8,9).

''கடிந்துகொள்ளுதலும், சீர்திருத்துதலும், படிப்பிக்குதலும்'' இல்லாமல் ஆரோக்கிய ''உபதேசம்'' போதிப்பது சாத்தியமன்று (2 தீமோ 3:16,17). அதாவது, சரியானதைக் கற்குமுன் தவறாய்க் கற்றிருப்பவற்றைக் களைதல் அத்தியாவசியம். ''வெளிச்சம் உண்டாகட்டும்'' என்று மட்டும் சொல்லி நிறுத்தாது, இருளிலிருந்து வெளிச்சம் ''பிரிக்கப்பட'' வேண்டியதிருந்தது (ஆதி 1:3,4). கலப்படமற்ற சத்தியங்கள் நமது இதயங்களுக்குள் இறங்க வேண்டுமானால், தவறாய்க் கற்றிருப்பவை யாவும் இதயங்களிலிருந்து அகற்றப்படவேண்டும். எனவேதான், *''எப்படி ஜெபிக்க**வேண்டும்?''*** என்று போதிப்பதற்கு முன்னதாக *''எப்படி ஜெபிக்க**க்கூடாது?''*** என்று இயேசு மக்களுக்கு விளக்கினார்! தானதர்மம், உபவாசம் போன்றவை பற்றி உப தேசிக்கும்போதும் இதே முறையையே ஆண்டவர் கையாண்டார் (மத் 6:1-7, 16-18). ''கட்டுவதற்கும் நட்டுவதற்கும்'' முன்னதாகப் ''பிடுங்கவும், இடிக் கவும், அழிக்கவும், கவிழ்க்கவும்'' வேண்டுமென்று தீர்க்கன் எரேமியாவைத் தேவன் பணித்தாரல்லவா? (எரே 1:10). பத்து கட்டளைகளில் எட்டு கட்ட ளைகள் என்ன செய்யக்''கூடாது'' என்பவைதானே! (யாத் 20:1-17)

எதிர்மறையாய்த் தோன்றும் இதே பாணியில்தான் இந்நூலிலுள்ள 20 தலைப்புகளையும் போதித்துள்ளேன். *''எப்படி மனந்திரும்பக் கூடாது ... எப்படி ஜெபிக்கக்கூடாது ... எப்படித் தலைமை வகிக்கக்கூடாது ... எப்படி மரணமடையக்கூடாது''* என்றே தலைப்புகள் பெயரிடப்பட்டுள்ளன. ''திருத்துதல்'' உபதேசம் கொடுப்பது இலகுவானதுமல்ல, இனிமை யானதுமல்ல. சில வேளைகளில் நான் ''குறைகூறுவது'' (critical) போல் தோன்றலாம்; ஆனால் எனது நோக்கம் ''கூறுபோடுவது''தான் (analytical)! கற்பதைவிடக் களைவது கடினமானதால், இந்நூலில் தரப்பட்ட சத்தியங்கள் எல்லாருக்கும் பிடிக்கும் என்று சொல்ல முடியாது. ஆனால், ''சத்தியத்தை'' நாம் நேசிக்காவிடில், ''பொய்க்கும் வஞ்சகத்திற்கும்'' பலியாவது திண்ணம் (2 தெச 2:9-11). கடிந்துகொள்ளுதலோடுள்ள உபதேசத்தினால்தான் நாம் ''பூரணம்'' அடைய முடியும் (கொலோ 1:28).

கதைப் புத்தகம் போல் அப்படியே வாசித்துக்கொண்டுபோனால் இந் நூலினால் பெரும்பயன் கிட்டாது. ஒவ்வொரு வரியையும் கச்சிதமாய்ச் சுருக்கியுள்ளோம். ஏறத்தாழ 6000 வசனக் குறிப்புகள் இங்குண்டு. நேரமெடுத்து எல்லா வசனங்களையும் உங்கள் பைபிளில் பார்த்து ஒவ் வொரு வசனத்தின் சூழமைவையும் (Context) சரிவரப் புரிந்துகொள்

ளுங்கள். உங்கள் தியானத்தின்போது உங்களுக்குக் கிடைக்கக்கூடிய கருத்துக்களை ஆங்காங்கே எழுதுவதற்கேதுவாக வரிகளுக்கிடையிலும், ஓரங்களிலும் போதுமான இடைவெளி கொடுத்திருக்கிறேன். எந்தத் தலைப்பை வேண்டுமானாலும் எடுத்துப் படிக்கலாம்; ஆனாலும், தத்துவ ரீதியாகவே இங்கு தலைப்புகள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதால் அதே வரிசையில் நீங்கள் படிப்பது உசிதம். தனித்தோ, உங்கள் வேதபாடக் குழுக்களில் கூடியோ இந்நூலைப் படிக்கலாம். 200 பாடங்களில் ஒவ்வொன்றையும் ஓரளவு சரியாய்ப் படிக்கக் குறைந்தது 2 அல்லது 3 மணிநேரம் பிடிக்கும். வீட்டு வேதக் கலாசாலைபோல் இந்நூல் உங்களுக்கு உதவும். ஒளிபரப்புச் செய்திகளாய் முதலில் கொடுக்கப்பட்ட இப்பாடங்களின் ஒவ்வொரு தலைப்பும் இரட்டை ஒளித்தட்டுகளாகவும், அனைத்தும் சேர்த்து 40 ஒளித்தட்டுக் கோப்பாகவும் கிடைக்கும். இவை ஒலித்தட்டுகளாகவும் உண்டு. (பக்கம் 825இல் விபரங்கள்). இந்நூலையும் ஒளித்தட்டுகளையும் நீங்கள் சேர்த்துப் பயன்படுத்தினால், திருமறையில் வெகுவாய்த் தெளிவு பெறுவீர். இறையியலும் நடைமுறையும் இங்கு இணைந்துள்ளன.

வசன அட்டவணை (Scripture Index), பொருள் அட்டவணை (Subject Index), நபர்கள் அட்டவணை (Character Index) ஆகியவை பக்கங்கள் 793-824இல் தரப்பட்டுள்ளன. பல்வேறு பொருட்கள்மீது ஆராயவும், பிரசங்கம் ஆயத்தம்பண்ணவும் பிரசங்கிமாருக்கும் வேதப்பிரியர் எவருக்கும் இந்த அட்டவணைகள் கைகொடுக்கும். இவ்விதமானதொரு நூலில் எழுத்துப் பிழைகள் இருக்கலாம். உங்கள் திருத்தங்களை வரவேற்கிறேன்.

இந்நூல் முதன்முதலாக ஆங்கிலத்தில் 2013 ஏப்ரலில் வெளிவந்தது. அதற்குக் கிடைத்த அமோக வரவேற்பிற்காய்க் கர்த்தரை மகிமைப்படுத்துகிறேன். உடனே தமிழ்ப் பதிப்பிற்கான ஆயத்தங்கள் துவங்கின. தமிழாக்கிய நண்பர்களின் பெயர்கள் 5ஆம் பக்கத்தில் உண்டு. அவர்களுக்கும், தட்டச் சமைப்பு செய்த சகோதரன் K. குணசேகரனுக்கும், பிழை திருத்தத்தில் உதவிய சகோதரி லினெட்டா சம்பத்குமாருக்கும் அவர்களது தன்னலமற்ற உழைப்பிற்காய் எனது உளமார்ந்த நன்றி கூறுகிறேன். இவர்கள்மீதும் இன்னும் பல்வேறு விதங்களில் உதவியவர்கள் மீதும் இறையருள் இன்னுமதிகமாய் இறங்க வேண்டுகிறேன். தெலுங்கிலும், கன்னடத்திலும், இந்தியிலும் மொழியாக்கப் பணிகள் துவங்கியுள்ளன.

ஏற்கனவே ''வல்லமையுடனும் சாதுரியத்துடனும்'' பிரசங்கித்துவந்த அப்பொல்லோ என்பவன் தேவனது மார்க்கத்தை ''இன்னும் அதிகத் திட்டமாய்'' விளங்கிக்கொள்ள ஆக்கில்லா-பிரிஸ்கில்லாள் தம்பதியர் பேருதவியாயிருந்தனர் (அப் 18:24-28). அவ்விதமே இந்நூல் உங்களுக்கு உதவட்டும் என்பதே எனது ஜெபம்.

செப்டம்பர் 2013 — R. ஸ்டான்லி

# இறைவேண்டல்

*கர்த்தாவே, நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்;*

*உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.*

*உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி*

*என் கண்களைத் திறந்தருளும்.*

*உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்.*

*உத்தம நிதானிப்பையும் அறிவையும்*

*எனக்குப் போதித்தருளும்;*

*உமது கற்பனைகளின்பேரில்*

*விசுவாசமாயிருக்கிறேன்.*

*நான் பிழைத்திருப்பதற்கு*

*உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும்.*

*உமது வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தும்.*

*உமது வார்த்தையின்படி என்னை விடுவித்தருளும்.*

*மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன்*

*மகிழுகிறதுபோல, நான் உமது வார்த்தையின்பேரில்*

*மகிழுகிறேன்.*

*என் ஆத்துமா பிழைத்திருந்து உம்மைத் துதிக்கக்கடவது!*

*ஆமென், ஆமென்!*

(சங்கீதம் 119:12,18,25ஆ,28ஆ,66,116அ,133ஆ,170ஆ,162,175அ)

## நமக்கு மாதிரியாய்த் திகழும்
## ஒரு திருச்சபை

*பெரோயா நகர்வாசிகள்*
*மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு,*
*காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று*
*தினந்தோறும் வேத வாக்கியங்களை*
*ஆராய்ந்துபார்த்ததினால்,*
*தெசலோனிக்கேயில் உள்ளவரைவிட*
*நற்குணசாலிகளாயிருந்தனர்!*

*(அப்போஸ்தலர் 17:11)*

# 1

# மனந்திரும்புதல்

# REPENTANCE

# 1

## எப்படி மனந்திரும்பக்கூடாது?

## HOW NOT TO REPENT

**1**

நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளவே மனந்திரும்பக்கூடாது.

**2**

மார்க்கச் சடங்குகளைச் சார்ந்திருக்கக்கூடாது.

**3**

மனந்திரும்புதலை விசுவாசத்திலிருந்து பிரிக்கக்கூடாது.

**4**

பாவ அறிக்கை பொதுவானதாகவே இருக்கக்கூடாது.

**5**

மற்றவர்களோடு உங்களை ஒப்பிடக்கூடாது.

**6**

பெரிய பாவம் சிறிய பாவம் எனப் பிரித்துப் பேசக்கூடாது.

**7**

செய்யத் தவறியவற்றைச் சாதாரணமாக எண்ணக்கூடாது.

**8**

மனிதரோடு ஒப்புரவாகுதலை அலட்சியப்படுத்தக்கூடாது.

**9**

தேவனது பொறுமையைத் தவறாய்க் கணித்துவிடக்கூடாது.

**10**

மனந்திரும்புதலை எப்போதுமே நிறுத்தக்கூடாது.

# 1 எப்படி மனந்திரும்பக்கூடாது?

## அறிமுகவுரை

■ இப்பொருளின் முக்கியத்துவம்—

திருமறை: துவக்கம் முதல் முடிவு வரை
— அழிவிலிருந்து மீட்பிற்கு
மனந்திரும்பி வருவதற்கான அழைப்பு

திருமறையின் முதற்பக்கங்கள்: ஆதாமிற்கு அழைப்பு (ஆதி 3:9)
இறுதிப் பக்கம்: தாகமாயிருக்கிற எவருக்கும் அழைப்பு (வெளி 22:17)

- ☐ பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்கள் — மோசே முதல் மல்கியா வரை
- ☐ பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கன் — யோவான் (மத் 3:2)
- ☐ இயேசு கிறிஸ்து (மாற் 1:15)
- ☐ 12 சீடர்கள் (மாற் 6:12)
- ☐ பெந்தெகொஸ்தேயன்று பேதுரு (யூதருக்கு) (அப் 2:38)
- ☐ அத்தேனே நகரில் பவுல் (புறவினத்தாருக்கு) (அப் 17:30)

■ மனந்திரும்புதல்தான் *கிறிஸ்துவின் மூலவுபதேசங்களில்* மிகவும் அடிப்படையானது — எபி 6:1

இவ்வுபதேசத்தை அல்லத்தட்டுவது பேராபத்து —
2 யோ 9,10

''மனந்திரும்புதல்'' எனும் உபதேசத்தைத் திரும்பக் கொண்டுவருவது நெடுங்காலம் நாம் காத்து நிற்கும் எழுப்புதலைக் கொண்டுவரும்—
2 நாளா 7:14

■ மனந்திரும்புதல் —

இப்பொருளை நாம் ஆராய ஆராய தேவ அன்பின் அறிவு
நமக்குப் பெருகிக்கொண்டேயிருக்கும் (ரோ 2:4)

அதாவது... அவரது *தயவு*

அவரது *பொறுமை*

அவரது *நீடிய சாந்தம்*

- மனந்திரும்புதல் பாவிகளுக்கு மட்டுமல்ல,
  பரிசுத்தவான்களுக்கும் அவசியம்:

  உ-ம்) 7 சபைகளில் 5 சபைகளுக்கு ...

  *''மனந்திரும்பு; இல்லாவிட்டால் ...''*

  (வெளி 2:5,16,21,22;3:3,19)

துர்ப்பாக்கியமாக,

பாவிகளின் மனந்திரும்புதலே அதிகம் வலியுறுத்தப்படுகிறது;

விசுவாசிகளின் மனந்திரும்புதலோ சொல்லப்படுவதேயில்லை.

எனவே, இருதிறத்தாருக்கும் இச்செய்திகள்.

## எப்படி மனந்திரும்பக்கூடாது?

### 1. நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளவே மனந்திரும்பக்கூடாது.

Do not repent just to escape judgment.

- மனந்திரும்புதலுக்கான முக்கிய காரணம் —

  மத் 3:2 ... ***ஏனென்றால்*** ... *பரலோக இராஜ்யம்,* நரகமல்ல, *சமீபம்!*
  "இராஜ்யம்" = அரசாட்சி, ஆளுகை, கர்த்தத்துவம்

  சரியான பிரதிபலிப்பு: *தங்கள் பாவங்களை அறிக்கையிட்டனர்* (வச 6)
  தவறான பிரதிபலிப்பு: பரிசேயர், சதுசேயர் ... *"ஆனால் ..."* (வச 7,8)

- தவறான நோக்கிற்கு எடுத்துக்காட்டுகள் —

  □ பார்வோன் (யாத் 9:33-35) ... கல்மழை நின்றதும்!
  *"பின்னும் பாவம்செய்து ... இதயத்தைக் கடினப்படுத்தினான்"*

  □ நியாயாதிபதிகளின் காலத்தில் (நியா 2:16-19)
  *"... அவர்கள் வழியைச் சீக்கிரமாய் விட்டு விலகி ..."*

  இதுதான் *"லவுகீக துக்கம்"* (2 கொரி 7:9-11)

  எடுத்துக்காட்டு: பெரும்பாலான இன்றைய மனந்திரும்புதல்கள்

- மனந்திரும்புவதற்குச் சரியான காரணங்கள்—

  **அ) தேவ பயம்**

| | |
|---|---|
| யோசேப்பு | ஆதி 39:9 |
| மருத்துவச்சிகள் | யாத் 1:17 |
| நெகேமியா | நெகே 5:15 |

  துன்மார்க்கத்திற்கு அடிப்படைக் காரணம்—
  சங் 36:1 ... *துன்மார்க்கன் ... தெய்வ பயம் இல்லை ...*

  *அசுசியை* நீக்கிவிட்டு ... *பரிசுத்தமாகுதலைத்* தொடருவோம்—
  *"தேவ பயத்தோடே ..."* 2 கொரி 7:1

  ஒரு கள்ளன் அடுத்தவனிடம் சொன்னது:
  *"நீ தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?"* லூக் 23:40,41

இவ்விதப் பாவவுணர்வும் மனந்திரும்புதலும் இருந்ததால்தான் கடைசி வேளையிலும் நொடிப்பொழுதில் இரட்சிக்கப்பட்டான்.

### ஆ) தேவ அன்பு

2 கொரி 5:14,15 ... என்னே அன்பு! அவர் நமக்காய்ப் பாவமானார்!

:20,21 ... பாவமற்றவர் பாவமானாரே!

மனந்திரும்ப *நெருக்கி ஏவும் அன்பு ...*

வெளி 3:19 ... *"நேசிக்கிறவர்களைக் கடிந்துகொள்கிறேன்"*

என்னை இவ்வளவாய் நேசித்தவரை நான் துக்கப்படுத்துவதெப்படி?

### இ) தேவ வசனம்

☐ செல்வந்தன் ... லாசரு ... 5 சகோதரர்கள்

லூக் 16:29,31 ... *"மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு"*

திருவார்த்தையே முடிவானது!

☐ தேவ வசனத்தின் மூலம்தான் மெய்யான உணர்வு —

சங் 19:7அ ... *"ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது ..."*

:11 ... *"எச்சரிக்கப்படுகிறேன் ... மிகுந்த பலன்"*

வேத **வசனத்தின்** உணர்த்துவிப்புக்கு நாம் அடிபணியும்போது, பரிதபிக்கும் பிரதான ஆசாரியரின் உதவி நமக்குண்டு—

எபி 4:12,13 ... *"வார்த்தை"* (உணர்த்துவிப்பு)

:14-16 *"பிரதான ஆசாரியர் ... கிருபாசனம்"* (உதவி)

## 2. மார்க்கச் சடங்குகளைச் சார்ந்திருக்கக்கூடாது.

Do not depend on religious activities.

■ கிறிஸ்துவின் மூல உபதேசத்தில் முதல் வருவது: எபி 6:1

*''செத்த கிரியைகளிலிருந்து''* மனந்திரும்புதல்

— பாவத்திலிருந்து அல்ல!

இந்நிருபம் யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது.

*''செத்த கிரியைகள்''*

= பழைய ஏற்பாட்டின் சடங்காச்சார மார்க்கம்

எபி 9:9,10 ... *சீர்திருத்தல் உண்டாகும் காலம் ''வரை''* (வச 10)

16ஆம் நூற்றாண்டில் மார்டின் லூத்தர் காலத்தின் சீர்திருத்தம் அல்ல.

*''கிறிஸ்துவின் இரத்தம்''* VS. *''மிருகங்களின் இரத்தம்''*

வச 13,14 ... *மனச்சாட்சியை ''செத்த கிரியைகளறச்''* சுத்திகரிப்பது

■ அப்போஸ்தலன் பவுல் சிறந்த எடுத்துக்காட்டு:

பிலி 3:4-7

— *விருத்தசேதனம்* : சடங்காச்சாரக் கிரியைகள்
— *இஸ்ரவேலன்* : இனப் பின்னணி
— *பென்யமீன்* : குடும்ப அந்தஸ்து
— *பரிசேயன்* : சபைப் பிரிவு
— *பக்தி வைராக்கியம்* : சபையைத் துன்பப்படுத்தினவன்
— *நியாயப்பிரமாணம்* : சன்மார்க்க வாழ்வு

இவைகளைக் கொண்டிருப்பது தவறல்ல; ஆனால் பவுலோ அவைகளைச் **சார்ந்திருப்பதிலிருந்து** மனந்திரும்பினான் —

நஷ்டமென்று *''எண்ணினேன்''* (வச 7)
நஷ்டமென்று *''எண்ணிக்கொண்டிருக்கிறேன்''* (வச 8)

— அதாவது, தொடரும் அனுபவம்

நாம் கீழுள்ளவற்றில் சார்ந்திருக்கும்வரை

நமது மனந்திரும்புதல் சரியானதல்ல—

சடங்குகள் ...

பாரம்பரியங்கள் ...

கொண்டாட்டங்கள் ...

மதம் என்பது ஓர் *''அழுக்கான''* கந்தை —

ஏசா 64:6 ... நாம் *''அனைவரும்''* ... நமது *''அனைத்தும்!''*

■ தேவையானது *''இதய''* மாற்றமே —

**இதுதான்** புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதம்:

எரே 31:31-34—உண்மை மார்க்கம் *''உள்ளத்தில்தான்''*

சபை மாற்றமோ, சடங்குகள் மாற்றமோ அல்ல.

■ முற்பிதாக்களைச் சொல்லி மேன்மைபாராட்டக்கூடாது—

மத் 3:9 ... *''உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள ...''*

கடவுள் தந்த பக்தியுள்ள குடும்பப் பின்னணிக்காக **நன்றி** கூறலாம்; ஆனால் **பெருமையடிக்கவோ,** அதைச் **சார்ந்திருக்கவோ** கூடாது.

நாணயத்தின் மறுபக்கம்:

முன்னோர்களின் பாவங்களுக்கு நீங்கள் பொறுப்பாளிகள் **அல்ல** —

ஜென்ம பாவங்கள்/பரம்பரை அக்கிரமம்?

**பழைய** உடன்படிக்கை: யாத் 20:5

அ) குறிப்பாக விக்கிரகாராதனையைப் பற்றியது

ஆ) நீங்கள் விக்கிரகாராதனையைத் தொடர்ந்தால் மட்டுமே.

*என்னைப் ''பகைக்கிறவர்கள்''* — நேசியாதவர்கள் (வச 6)

**புதிய** உடன்படிக்கை: எசேக் 18:1-4

இன்னும் விளங்கவில்லையென்றால் வச 19,20ஐப் பார்க்க.

முன்னோரது பாவங்களை அறிக்கையிட அவசியமில்லை —

''சங்கிலித் தொடரை'' முறிக்கிறோம் என்பது

வேதத்திற்குப் புறம்பான செயல்.

அனாதைக் குழந்தைகளுக்குப் பெற்றோரைப் பற்றியே தெரியாதே!

இயேசு: *பரலோக இராஜ்யம் ''அவர்களுடையது!''* (மாற் 10:14)

இறையரசில் ''நுழைபவர்'' அல்ல; அதின் ''சொந்தக்காரர்!''

*அவர்களுடைய தூதர்கள் ... எப்போதும்* (மத் 18:10)

- ''தனிப்பட்ட'' மனந்திரும்புதலுக்கு ''ஊழிய ஈடுபாட்டைப்'' பதிலீடாக்கக்கூடாது —

சுத்திகரித்துக்கொள் —

2 தீமோ 2:21 ... *சுத்திகரிக்கிறான் ... எஜமானுக்கு உபயோகம் ...*
அதாவது, தனிப்பட்ட மனந்திரும்புதல்
உ-ம்) *''விலகியோடு''* (வச 22)
*''விலகியிரு''* (வச 23)

உ-ம்) ஏசாயா ஏற்கனவே ஒரு தீர்க்கதரிசிதான்—
உசியா ராஜாவின் காலத்தில் பணியாற்றினான்.

உசியாவின் சோக முடிவு பெருமையினால்
உண்டானதை ஏசாயா கண்டான் —
உசியா குஷ்டரோகியானான்! (2 நாளா 26:16-21)

உசியாவின் வரலாற்றை ஏசாயாதான் எழுதினான் (2 நாளா 26:22)

ஆகிலும், ஏசாயா தனது சொந்த வாழ்வைப் பார்க்க ஆரம்பித்தான்—

இதுவரை, பிறர்க்கு *''ஐயோ''* என்றான் (ஏசா 1 முதல் 5)
இப்பொழுதோ, ***''எனக்கு*** *ஐயோ''* என்கிறான் (ஏசா 6)

- சார்லட் எலியட் (1789-1871) எழுதிய பாமாலை:

*நான் பாவிதான் — ஆனாலும் நீர்*
*மாசற்ற இரத்தம் சிந்தினீர்;*
*வா என்று என்னை அழைத்தீர்,*
*என் மீட்பரே, வந்தேன்! வந்தேன்!*

## 3. மனந்திரும்புதலை விசுவாசத்திலிருந்து பிரிக்கக்கூடாது.

Do not isolate repentance from faith & works.

- மனந்திரும்புதல் பிற மதங்களிலும் பேசப்படுகிறது.
  ஆனால் வித்தியாசம் என்னவெனில்—

  திருமறை ''மனந்திரும்புதலை'' மட்டுமல்ல;
  ''விசுவாசத்தையும்'' **இணைத்துப்** பேசுகிறது.

☐ இயேசு

மாற் 1:15 ... *மனந்திரும்பி ... விசுவாசியுங்கள்*
லூக் 24:47 ... *மனந்திரும்புதலும் ... பாவ மன்னிப்பும் ... அவர் நாமத்தில் ...*

☐ அப்போஸ்தலர்கள்

அப் 2:38 ... *மனந்திரும்பி ... ஞானஸ்நானம்*

அடுத்த செய்தி 3:20 ... *மனந்திரும்பி ... குணப்படுங்கள் ...*

பவுல்: அப் 20:21 ... *மனந்திரும்புதல் ... விசுவாசம்*
(பெயர்க் கிறிஸ்தவர் & கிறிஸ்தவரல்லாதோர்)

☐ உபதேசக் கோட்பாடு:

எபி 6:1 ... *மனந்திரும்புதலும் விசுவாசமும் ...*

D.L. மூடி: விசுவாசக் கண்ணிலுள்ள கண்ணீரே மனந்திரும்புதல்!

A.W. டோசர்: மனந்திரும்புல்—மூச்சு விடுதல்
விசுவாசம்—மூச்சு எடுத்தல்
இரண்டும் **இணைந்ததுதான்** சுவாசித்தல்!

மனந்திரும்புதல் விசுவாசத்திற்கு நடத்தாவிடில் —

உ-ம்) யூதாஸ்: மத் 27:3-5
தனது தவற்றை உணர்ந்தான் ...
தனது தவற்றிற்காக மனம் வருந்தினான் ...
தனது தவற்றை அறிக்கையிட்டான் ...
பணத்தையும் திருப்பிக் கொடுத்துவிட்டான்! ...
**ஆனால்,** அவன் இயேசுவிடம் திரும்பி வரவில்லை!

ஆனால் பேதுரு: லூக் 22:61,62 (கூடுதல் மோசமான பாவம்)

அவன் கண்கள் இயேசுவின் கண்களைச் சந்தித்தன!

அவன் இயேசு சொல்லியிருந்த ''வார்த்தைகளை'' விசுவாசித்தான்!

■ மனந்திரும்புதல் விசுவாசத்திற்கும்,

விசுவாசம் செயல்களுக்கும் நடத்தவேண்டும்!

உ-ம்) கெட்ட குமாரன்: (லூக் 15:11-32)

— அவன் உணர்ந்தான் ... *''புத்தி தெளிந்தபோது''* (வச 17)

— அவன் தீர்மானித்தான்...*''நான் எழுந்து போவேன்''* (வச 18,19)

— அவன் எழுந்தான், புறப்பட்டான் (வச 20)

அவன் தொடர்ந்து பன்றிகளோடு இருக்கவில்லை.

தகப்பன் மீது விசுவாசம் ... *''என் தகப்பன்''* (வச 17)

அவன் அர்ப்பணிப்பின் மனப்பான்மையுடன் திரும்பினான்

*''உமது கூலிக்காரரில் ஒருவனாக''* (வச 19)

மனந்திரும்புதல் + விசுவாசம்

= விட்டுவிடுதலும் ஒட்டிக்கொள்ளுதலும்

□ மனந்திரும்புதல் ▸▸ விசுவாசம் ▸▸ செயல்கள்

திருமுழுக்கினன் யோவானின் ஊழியத்திலும் —

அப் 19:4 (மனந்திரும்புதல் & விசுவாசம்)

அவன் **செயல்களை** வலியுறுத்தினான் —

*''மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள்''* லூக் 3:8

**''எனவேதான்''** மக்கள் அவனிடம் வினவினர் ... (வச 10-14)

எளியவரைக் குறித்த மனப்பான்மை — பொதுமக்கள்

செல்வத்தைக் குறித்த மனப்பான்மை — வரிக்காரர்

பதவியைக் குறித்த மனப்பான்மை — போர்ச் சேவகர்

மற்றோர் எடுத்துக்காட்டு —

மாய வித்தைப் புத்தகங்களைச் சுட்டெரித்தனர்

அப் 19:18,19 ... (எபேசுவில்)

யூதர் + கிரேக்கர் (வச 17)

அதே எபேசிய விசுவாசிகளுக்கு மனந்திரும்புதலின் செய்தி—
அவர்கள் பின்மாற்றமடைந்தனர் (வெளி 2:5)
*''நினைத்திடு ... திரும்பிடு ... மறுபடி செய்திடு!''*

- மனந்திரும்புதல் = முற்றிலும் திரும்புதல் ...
  வாழ்க்கையை முழுமையாய்ச் சீர்ப்படுத்துதல் ...

லூக் 3:5 ... *பள்ளத்தாக்குகள்* ***எல்லாம்***
*மலைகள்* ***எல்லாம்***
*''பள்ளத்தாக்கு''* ... எதெல்லாம் குறைவுபடுகிறதோ ...
... எங்கெல்லாம் இறங்கியிருக்கிறோமோ ...
*''மலைகளும் குன்றுகளும்''*
மனமேட்டிமை எல்லாம்
*''குன்று''* — சிறிய மேட்டிமைச் சிந்தைகள்கூட!
*''கோணலானவை''* ... நேராக்கப்படவேண்டியவை எல்லாம்
*''கரடானவைகள்''* ... சமமாக்கப்படவேண்டியவை எல்லாம்
''மேடு பள்ளம் ... கோணல் ... கரடுமுரடு'' யாவையும் சரி செய்தல்

- மறுசீரமைப்பின் (rehabilitation) அவசியம்—

உ-ம்) முறிந்த காலில் அறுவை சிகிச்சை செய்த அடுத்த நாளே
ஒலிம்பிக் போட்டியில் ஓட முடியாது!
புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் காயப்பட்டால்
ஒரிரு வாரங்கள் ஓய்வு கொடுக்கப்படுகிறது.
உ-ம்) கேப்டன் தோனி

இது போலவே, அடிமைப்படுத்தும் பழக்கங்களுக்கும் —
... குடிபோதை ... புகை பிடித்தல் ... பாலியல் படங்கள்

இல்லையேல் *''இன்னும் பொல்லாத''* ஏழு ஆவிகள் (லூக் 11:26)
வாழ்வில் பலங்குன்றியவற்றைப் பலப்படுத்துங்கள் (எபி 12:12,13)

நீங்கள் எதில் பலவீனம் என்று உங்களுக்கே தெரியும் —
அதிலே அதிகக் கவனம் செலுத்துங்கள்!

உ-ம்) சர்தை சபைக்கு இயேசுவின் செய்தி —
வெளி 3:2,3 ... *சாக ஏதுவாயிருப்பதைத் திடப்படுத்து*

## 4. பாவ அறிக்கை பொதுவானதாகவே இருக்கக்கூடாது.

Do not be vague in your sin confession.

- வெறுமனே இப்படிச் சொல்வது போதுமானதல்ல—
  *''தேவனே, பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்.''*
  பரிசேயன்-ஆயக்காரன் உவமை (லூக் 18)

  அ) இந்த உவமை மனந்திரும்புதலைப் போதிக்க அல்ல
  — இந்த உவமையின் நோக்கம் (வச 9)

  ஆ) இவ்விதப் பொதுவான அறிக்கை ''பாவிகளுக்குச்'' சரிதான்—
  அதாவது, இன்னும் இரட்சிக்கப்படாதவர்க்கு.

  விசுவாசிகளுக்கோ, 1 யோ 1:9 ... ***''பாவங்களை அறிக்கையிட்டால் ...''***

- நாம் *''வார்த்தைகளோடு''* மனந்திரும்பவேண்டும் — ஓசி 14:1,2
  அதாவது, குறிப்பான பாவ அறிக்கை
  வச 3 ... *அசீரியா ... குதிரைகள் ... எங்கள் கைகளின் செயல் ...*
  திருவாக்கு: வச 4 ... *''அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்''*

- பாவங்களை ஒவ்வொன்றாய்ச் சொல்வதற்கு ஓர் **உதாரணம்** —
  1 கொரி 10:6-11
  *''இச்சை, விக்கிரகாராதனை, வேசித்தனம், முறுமுறுப்பு''*
  அவர்களுக்குப் ''பஸ்கா'' அனுபவம் இருந்தபோதிலும் ...
  அதாவது, ஞானஸ்நானம், ஆவியின் அபிஷேகம்,
  வேத வாசிப்பு, முதலியன (வச 1-5)
  இவையெல்லாம் நமக்குத் *''திருஷ்டாந்தங்கள்''* — (வச 6,11)

- தற்பரிசோதனைக்கு உதவியாக வேதத்தில் பாவப்பட்டியல்கள் —
  நீதி 6:16-19 ... கடவுள் வெறுக்கும் 6 அல்லது 7 காரியங்கள்
  மாற் 7:21-23 ... 13 பாவங்கள் / ரோ 1:29-32 ... 22 பாவங்கள்
  கலா 5:19-21 ... 17 பாவங்கள் / 2 தீமோ 3:2-5 ... 18 பாவங்கள்

இவ்விதக் குறிப்பான பாவப் பட்டியல்கள் மட்டுமல்ல,
திருவார்த்தையைப் பொதுவாக வாசிப்பதினாலும் —

விவிலியம் ஒரு *''கண்ணாடி''* (யாக் 1:23,24)
எனது *''பிழைகளைச்''* சுட்டிக்காட்டி *எச்சரிக்கிறது* (சங் 19:11,12)

பத்துக் கட்டளைகள் தற்பரிசோதனைக்கு நல்ல பட்டியல்—
யாத் 20:1-17...1 முதல் 4 ... கடவுளுக்கு விரோதமான பாவங்கள்
5 முதல் 10 ... மனிதனுக்கு விரோதமான பாவங்கள்

பாவத்தைப் பற்றிய அறிவு நியாயப்பிரமாணத்தினால் (ரோ 3:20)

இன்று அது தீர்ப்பளிக்க அல்ல, உணர்த்தி அறிக்கையிடச் செய்ய.

- மனந்திரும்புதலின் மாதிரி ஜெபங்களைப் படியுங்கள்:
  உ-ம்) தாவீது (தனக்காக) — சங் 51
  தானியேல் (நாட்டிற்காக) — தானி 9:4-19

- அப்படியானால் ஒரு கேள்வி—
  நமது பாவங்கள் கடவுளுக்குத் **தெரியாதா**?

கடவுளுக்குத் தெரியும்; ஆனால் பாவ அறிக்கையானது நமது
பாவத்தையும் பாவ சுபாவத்தையும் **நமக்கு** உணரவைக்கிறது —

(உ-ம்) ஆதாமிடம்: *''நீ எங்கே இருக்கிறாய்?''* (ஆதி 3:9)
யாக்கோபிடம்: *''உன் பெயர் என்ன?''* (ஆதி 32:27)
சமாரியப் பெண்ணிடம்: *''கணவனை அழைத்து வா''*
இயேசுவுக்கு எல்லா விபரங்களும் தெரியும் ...
*''5 கணவர்கள் ...''* (யோ 4:1-18)

ஆனால் இயேசு அவள் உண்மையைச் **சொல்ல** விரும்பினார்;
*''நீ உள்ளபடி சொன்னாய்''* (யோ 4:18)

பாவ அறிக்கை என்பது கடவுளுக்குத் ''தெரிவிப்பது'' அல்ல,
ஏற்கனவே அவருக்குத் தெரிந்ததை நாம் ''உறுதிப்படுத்துவது''

சில்லறையாகப் பாவம் செய்து மொத்தமாக அறிக்கை செய்யாதீர்!

■ குறிப்பான பாவ அறிக்கைதான் பாவங்களை *''விட்டுவிட''* உதவும்—
நீதி 28:13 ... *அறிக்கை செய்து ... விட்டுவிடுகிறவன்*

அப்பொழுதுதான் நமது தோல்விகளுக்கான மூல காரணத்தைப் புரிந்து, பாவம் செய்யப் *''பயந்திருக்க''* வழியுண்டாகும் (வச 14)

குறிப்பான பாவ அறிக்கைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு: நெகே 9

■ நமது பாவங்களை அறிக்கை செய்ய மற்றொரு காரணம்—
எந்த அளவு நமது பாவத் தன்மையை உணருகிறோமோ
அந்த அளவுக்கு நாம் கர்த்தரை நேசிப்போம்—

உ-ம்) பாவியான பெண் — லூக் 7:36-47
*எண்ணெய் ... கண்ணீர் ... கூந்தல்*

கூடியிருந்தவர்கள் அவளைவிடப் பாவிகளாயிருந்திருக்கலாம்!

அவளது பாவ ''உணர்வு'' அவளைத் **தாழ்மைக்கு** நடத்தியது—
அவரது **பாதங்களைக்** கழுவினாள் (வச 44)
அவரது **பாதங்களை** முத்தம் செய்தாள் (வச 45)
அவரது **பாதங்களுக்கு** எண்ணெய் பூசினாள் (வச 46)

■ தனது பாவங்கள் ''அனைத்தையும்'' அறிக்கையிட்டுவிட்டதாக எவரும் சொல்ல முடியுமா? முடியாது!

நம்மால் நினைத்துப் பார்க்கக்கூடிய பாவங்களையும், ஆவியானவர் உணர்த்துபவைகளையும் அறிக்கையிடும்போது, ஆண்டவர் *நமது ''எல்லா'' அநீதியையும் நீக்கிச் சுத்திகரிக்கிறார்* (1 யோ 1:9).

■ எழுப்புதல் கூட்டங்களில் ''மறு அர்ப்பணம்'' (Rededication) செய்யத்தான் அழைக்கப்படுகிறோம்.
ஆனால் ''மறு அர்ப்பணம்'' என்பது ''மனந்திரும்புதல்'' அல்ல!
பாவ அறிக்கையை மனந்திரும்புதல் உள்ளடக்கியிருக்கவேண்டும்.
(உ-ம்) நன்கு தெரிந்த எழுப்புதல் வசனம்: 2 நாளா 7:14

''மறு பிரதிஷ்டை'' அல்லது ''மறு அர்ப்பணம்'' என்பதெல்லாம் ''மனந்திரும்புதலுக்கு'' மாற்றான நமது கண்டுபிடிப்புதான்!

## 5. மற்றவர்களோடு உங்களை ஒப்பிடக்கூடாது.
Do not compare yourself with others.

■ ஒரு தெய்வீக சத்தியத்தை விளக்குவதற்கு
இயேசு அநேகக் கதைகளையும் உவமைகளையும் சொன்னார்—

பல சந்தர்ப்பங்களில் அவரே படிப்பினையைச் சொல்லிவிட்டார்;
அல்லது சூழமைவே அதை விளக்கச் செய்துவிட்டார்.

நாம் பெரும்பாலும் மையச் சத்தியத்தை விட்டுவிட்டு சுற்றுவட்டக்
காரியங்களையே முக்கியப்படுத்துகிறோம்—

உ-ம்) ஆயக்காரன் & பரிசேயன் (லூக் 18)
இந்தக் கதை இரட்சிக்கப்படுவது எப்படி என்று **அல்ல,**
பிறருடன் நம்மை ஒப்பிடக்கூடாது என்றே கற்பிக்கிறது.

பரிசேயனுடைய ஜெபத்தில் முதல் வரி—

*''நான் மற்றவர்களைப்போல்* ***இல்லை''*** (வச 11)
இவ்வித மனப்பான்மையைக் கர்த்தர் ''அருவருக்கிறார்''—
ஏசா 65:5 ... அவர் கோபமூட்டப்படுகிறார் ... *சினமாகிய புகை*
யார் இந்த மக்கள்?
''இஸ்ரவேலரே'' (வச 1)

■ நமது அளவுகோல் பிறரல்ல, **கடவுளாகவே** இருக்கவேண்டும்—

□ ஏசாயா 6:3

*''பரிசுத்தர் ... பரிசுத்தர் ... பரிசுத்தர்''*
*''அதமானேன் ... அசுத்த உதடுகளுள்ளவன்''*
*கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே* (வச 5)
பரிசுத்தம் இல்லையேல் பூஜ்யம் ... நரகம்

□ யோபு 42:5,6 *''என் கண்கள் உம்மைக் காண்கின்றன; ஆகையால்''*
ஆம், இறை வெளிப்பாட்டினால் **மனந்திரும்புதல்** ஆழமாகிறது.

☐ பேதுரு: லூக் 5:8 ... திரளான மீன்கள் ...

*''நான் பாவியாகிய மனிதன்''*

இங்குதான் நவீன வெளிப்பாடுகள் கேள்விக்குரியவையாகின்றன —

''இயேசுவைப் பார்த்தேன் ... பரலோகம் சென்றேன்''
என்றெல்லாம் சொல்லுதல்.

ஆனால் மோசேயின் பாடலைப் பாருங்கள் —

யாத் 15:11 ... *பரிசுத்தம்* ... **பின்பு** *அற்புதங்கள்!*

■ இன்னும் மனந்திரும்பாதவர்களோடு விசுவாசிகள் தங்களை ஒப்பிட்டுப் பெருமையடையக்கூடாது —

ஏனெனில், மனந்திரும்புதலே தேவனருளும் ''ஈவு''தான் —

அப் 11:18 ... *மனந்திரும்புதலை ''அருளிச்செய்தார்''*
2 தீமோ 2:25 ... *மனந்திரும்புதலை ''அருளத்தக்கதாக''*

அப்படியே, யோ 6:44 ... *பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிடில் ...*

**மனந்திரும்புதலில்** கடவுளோடு ஒத்துழைக்கிறோம்,

அவ்வளவுதான் —

அவருடைய உணர்த்துதலுக்குக் **கீழ்ப்படிகிறோம்,**

அவ்வளவுதான் —

அதாவது, தேவன் அருளும் உதவியோடு மனிதன் செயல்படுகிறான்.

உ-ம்) ஒரு குடிகாரனைப் போலீசார் இழுத்துச் செல்வதைக் கண்ட ஜான் வெஸ்லி சொன்னது:

''தேவ கிருபை மட்டும் இல்லாதிருந்தால்
அவன்தான் ஜான் வெஸ்லியாக இருந்திருக்கும்!''

— இன்னொரு காரியம்:

நம்மில் அநேகர் கடவுள் நம்மை முதன் முதலில்
அழைக்கும்போதே மனந்திரும்பிவிடவில்லை—

நாம் ''கிட்டத்தட்ட'' தேவனது பொறுமையை இளக்கரிக்கச் செய்துவிட்டோம். ரோ 10:21

கோபத்தில் கடவுள் சொன்னது:

*''என் ஆவி என்றென்றும் மனிதனோடே போராடுவதில்லை''* (ஆதி 6:3)

- நமது மனந்திரும்புதல் கடவுளுக்கு எதையோ கூட்டுகிறது என்று நினைக்கக்கூடாது— (அவர் பூரணத்தில் பூரணமானவர்!)

யோபு 35:6-8 … *அதினாலே என்ன?* … *அதினாலே என்ன?* … *அதினாலே என்ன?* …

என்னே சவால்!

- ஓர் எடுத்துக்காட்டுடன் பவுலின் எச்சரிக்கை—

யூதர் VS. புறவினத்தார்
ரோ 11:17-20
*"மேட்டிமையாயிராமல்" "தாழ்மையாயிரு"* (வச 20)

- இயேசுவின் முனைப்பான கூற்றுகளில் சில —
  - ☐ *"முந்தினோர் பிந்தினோராயும் பிந்தினோர் முந்தினோராயும்"* … மத் 19:30 … *"அநேகர்"*
  - ☐ *"வரிக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே இறையரசில் நுழைகிறார்கள்"* … மத் 21:31ஆ
  - ☐ *"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ள**வில்லை**"* … யோ 15:16அ

அன்பின் அப்போஸ்தலன் யோவான் சொல்லுகிறான்:
*"நாம் அவரிடத்தில் முதலாவது அன்புகூர**வில்லை**"* (1 யோ 4:19)

## 6. பெரிய பாவம் சிறிய பாவம் எனப் பிரித்துப் பேசக்கூடாது.

Do not differentiate between sins.

- ஆடைகள் வாங்கும்போது அளவுகளைப் பற்றிப் பேசுகிறோம்.

  S — சிறியது

  M — நடுத்தரம்

  L — பெரியது

  XL — கூடுதல் பெரியது

பாவங்களைப் பொறுத்தவரை இது போன்று கிடையாது—

சிறிய பாவம் ... நடுத்தர பாவம் ... பெரிய பாவம்...

பாவம் பாவம்தான்!

எப்படி? ஏன்?

**''பாவம்''** என்ற சொல்—

மூன்று எபிரெய வார்த்தைகளின் பொருள்:

அ) குறி தவறுதல்

ஆ) சட்டத்திற்கு எதிராக முரட்டாட்டம்

இ) தரத்திலிருந்து வழி விலகுதல்

தாவீது பாவ அறிக்கையில் இம்மூன்றையும் பயன்படுத்தினான்:

சங் 51:1 ... *''மீறுதல்கள்''*

= சட்டத்திற்கு எதிராக முரட்டாட்டம்

:2அ ... *''அக்கிரமம்''*

= தரத்திலிருந்து வழி விலகுதல்

:2ஆ ... *''பாவம்''*

= குறி தவறுதல்

அவன் ''பாவத்தை'' அதின் முழு பயங்கரத்தோடு கண்டான்.

- ''குறி தவறுதல்'' என்ற கருத்தை எடுத்துக்கொள்வோம்.

— சுடும்போது 1 மி.மீ. அல்லது 1 மீ. எவ்வளவு தவறினாலும் ...!

— அதுபோலவே, முக்கால் கிணறு தாண்டுவதும்!

— அதுபோலவே, பஸ், ரயிலை 1 அல்லது 10 நிமிடம் தவறவிடுவது!

எனவேதான், ரோமர் 3:23

*''எல்லோரும் **பாவம் செய்து** தேவனது தரத்திலிருந்து இறங்கி''*

- அப்போஸ்தலன் யாக்கோபின் ஒரு நடைமுறை விளக்கம்—
  யாக் 2:9-11

  *''பிரமாணம் முழுவதும் ... ஒன்றிலே ... எல்லாவற்றிலும் குற்றவாளி''*

  உ-ம்) விபச்சாரம் VS. கொலை VS. பாரபட்சம்

இயேசுவின் போதனையில் அழுத்தப்பட்டது இதுவே:

அவர் ஒவ்வொரு பாவமாக எடுத்து விளக்கினார் —

மத் 5:21,22 ... கொலை VS. கோபம்

:27,28 ... விபச்சாரம் VS. இச்சையான பார்வை

:33,34,37 ... பொய் VS. மிகைப்படுத்தல்

பாவத்தை தேவன் பார்க்கிறபடி நாம் பார்க்கவேண்டும்!

- இதனால்தான் விவிலியம் ஒரே பாவத்தைப் பல்வேறு பெயர்களில் விவரித்துள்ளது—

உ-ம்) கலா 5:19-21

அ) பாலியல் பாவம்

*''விபச்சாரம் ... வேசித்தனம் ... அசுத்தம் ... காமவிகாரம்''*

ஆ) கொலை

*''பகைகள் ... விரோதங்கள் ... வைராக்கியங்கள் ... கோபங்கள் ... சண்டைகள் ... பிரிவினைகள் ... பொறாமைகள்''*

''பொறாமை'' எவ்வளவு கேடானது!

உ-ம்) மூத்தவன் பொறாமையினால் வெளியே விடப்பட்டான்!

- ''நமது'' தரத்தை வைத்துப் பார்த்தால்—
  - ☐ தாவீதின் பாவம் சவுலின் பாவத்தைவிடப் பெரியது; ஆனால் கடவுள் சவுலைத் தள்ளி, தாவீதை நிலைப்படுத்தினார்.
  - ☐ பேதுருவின் பாவம் யூதாசின் பாவத்தைவிட மோசமானது; ஆனால் அப்போஸ்தல ஊழியத்தை யூதாஸ் இழந்தான், பேதுருவோ அப்போஸ்தலத் தலைவனானான்!

■ சிறிய பாவங்களில் தவறில்லையென நாம் பழகிவிட்டால்,
நமது நறுமணமும் கனி நிறைவும் பாழாகும் —

பிர 10:1 ... *கொஞ்ச மதியீனம்* ... மணம்

உன் 2:15 ... *சிறுநரிகள்* ... கனி

■ *''மாம்சத்திற்கடுத்த''* அசுத்தங்கள் உங்களிடம் இல்லையெனத் திருப்தியடைந்துவிடக்கூடாது —

*''ஆவிக்கடுத்த''* அசுத்தங்களையும் நீக்கவேண்டும்—

2 கொரி 7:1 ... வெளிப்படையான செயல்கள்
VS. உள்ளான மனப்பான்மை

தாவீதரசன் தனது பாவ அறிக்கையில் இதைச் சொல்லுகிறான்—

சங் 32:2 ... *''எவனது* ***ஆவியில்*** *கபடமில்லாதிருக்கிறதோ''*

சங் 51:6 ... ***''உள்ளத்தில்*** *உண்மையிருக்க விரும்புகிறீர்''*

நமது வாழ்வின் இரகசியப் பகுதிகளில் தேவனது ஆராயும் ஒளி
வீசும்படியாய் அவரது சமுகத்தில் பொறுமையோடு
காத்திருந்தால் மட்டுமே இது சாத்தியம்.

■ பாவங்களிடையே ஒரே வேறுபாடு—

''மரணத்திற்கேதுவான பாவம் VS. மரணத்திற்கேதுவல்லாத பாவம்''
(1 யோ 5:16,17)

இது எந்தப் பாவம்?
சிலை வணக்கத்திற்கு நடத்தும் அவிசுவாசமே இது (வச 21)

அப்படியே, கிறிஸ்துவுக்கு எதிரான பாவம்
VS. ஆவியானவருக்கு எதிரான பாவம் (மத் 12:24,31,32)

ஏனென்றால், ஆவியானவரே மனிதனுக்குக் கடவுளின் **இறுதிக்** குரல்!

தீர்க்கதரிசிகளை அனுப்பினார் ... அவர்களைத் துன்புறுத்தினர்!
தமது குமாரனை அனுப்பினார் ... அவரைக் கொன்றனர்!
தமது ஆவியை அனுப்பியிருக்கிறார் ... இதுவே கடைசி!

## 7. செய்யத் தவறியவற்றைச் சாதாரணமாக எண்ணக்கூடாது.

Do not slight the sins of omission.

■ பாவங்களில் இரு வகை:

அ) செய்ததால் பாவங்கள் (Commission)
— செய்யக்கூடாததைச் செய்தல்

ஆ) செய்யாததால் பாவங்கள் (Omission)
— செய்யவேண்டியதைச் செய்யாதிருத்தல்

செய்யத் தவறியவை எனும் பாவங்களைவிடச் செய்யத் தகாதவை எனும் பாவங்களையே உலகம் கடுமையாய்ப் பார்க்கின்றது—
கடவுளோ இரண்டையும் ஒன்றுபோல் பார்க்கிறார்!

■ பாவ அறிக்கை பற்றிப் பேசும்போது செய்யக்கூடாதவை எனும் பாவங்களையே நாம் பெரும்பாலும் குறிப்பிடுகிறோம்.

நமது ஆதித் திருச்சபைப் பிதாக்களோ—

உ-ம்) ஆங்கிலிக்கன் *ஜெபப் புத்தகத்தில்* —

''செய்யத்தக்கவைகளைச் செய்யாமல்
செய்யத்தகாதவைகளைச் செய்து வந்தோம்!''

செய்யத் தகாததைவிட செய்யத் தவறியதையே முன்வைத்தனர். மனந்திரும்புதலைக் குறித்த சரியான அறிவு அவர்களுக்கிருந்தது.

■ இடது பக்கத்திற்கு அனுப்பப்பட்டவர்களின் பாவம்—

மத் 25:41-45 ... செய்யத் தவறியவை எனும் பாவங்கள்
*''நீங்கள் செய்யவில்லை ... நீங்கள் செய்யவில்லை''*
நித்திய தண்டனை உறுதியாக்கப்பட்டது!

உ-ம்) ஐசுவரியவானின் பாவம்: செய்யத்தகாதது அல்ல,
செய்யத் தவறியது எனும் பாவம் (லூக் 16:19-31)

☐ அவன் லாசருக்கு வெளியறையைக்கூடக் கட்டிக்கொடுக்க**வில்லை**
*''வாசலுக்கு வெளியே கிடந்தான் ...''*

☐ அவனுக்கு உணவளிக்க**வில்லை**

*''மேசையிலிருந்து விழுந்த ரொட்டித் துண்டுகள்''*

☐ அவனுக்கு மருத்துவ சிகிச்சை செய்ய**வில்லை**

*''... நாய்கள் வந்து பருக்களை நக்கிற்று''*

☐ தனது நாயைக்கூட அச்செல்வந்தன் கட்ட**வில்லை.**

நரகம்! அவன் செய்ததற்கு அல்ல, செய்யத் தவறியதற்கு!

■ செய்யத்தகாதவை எனும் பாவங்களிலேயே நாம் கவனம் செலுத்தினால் பழைய ஏற்பாட்டிற்குத் திரும்புகிறோம் என்றுதான் பொருள் —

உ-ம்) 10 கட்டளைகளில் 8 கட்டளை ... *''செய்யாதிருப்பாயாக''* (யாத் 20:1-17)

அடுத்த இரண்டு — ''ஓய்வு நாள்''
''பெற்றோர்''

*''செய்யாதே''* என்று ஓய்வு நாள் கட்டளையிலும் உண்டு—
*''யாதொரு வேலையும் செய்யவேண்டாம்''*

ஒரு கடிந்துகொள்ளுதல்: கொலோ 2:20-22 ...
*''தொடாதே ... ருசியாதே ... தீண்டாதே ...''*

பரிசேயர் இந்த 9 கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தனர்;

ஆனால் பெற்றோரைக் குறித்த கட்டளைக்குக் *''கொர்பான்!''*
என்ற மாற்றைப் புகுத்திவிட்டனர் (மாற் 7:8-13)

■ எனவே தீர்க்கர்களின் அழைப்பு பெரும்பாலும் செய்யத் **தவறியவை** எனும் பாவங்களை விட்டு மனந்திரும்புவதற்காகவே—

☐ தானியேல் — நேபுகாத்நேச்சார் தானி 4:27
☐ ஏசாயா ஏசா 1:17,18
☐ தேவனுக்கு உகந்த உபவாசம் ஏசா 58:6,7
☐ ஆமோஸ் ஆமோ 5:14,15
☐ யோனா — நினிவே குடிகளும் அரசனும் யோனா 3:8

☐ சகரியா — சக 7:7 ... *"முன்னிருந்த தீர்க்கதரிசிகள்"*

(சக 7:9,10; 8:15,16,17)

எனவேதான், ப.ஏ. தீர்க்கர்களில் கடைசியான யோவான்—

— அவனது **முதல்** அறிவுரை:

"உடையைக் கொடு"

"உணவைக் கொடு"

■ பரிசுத்தத்திற்கு இரு பக்கங்களுண்டு—

"நல்லதை விரும்பிடு" — இல்லையேல்,

செய்யத் தவறியவை எனும் பாவங்கள்

"தீயதை வெறுத்திடு" — இல்லையேல்,

செய்யத் தகாதவை எனும் பாவங்கள்

இயேசுவின் வாழ்வில் எது முதலில் வந்தது? எபி 1:9

*... நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்தார்*

ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கக்கூடாது—

சங் 34:14 ... *தீமையை விட்டு விலகி ... நன்மை செய்*

37:27 ... *தீமையை விட்டு விலகி ... நன்மை செய்*

ஆமோ 5:15 ... *தீமையை வெறுத்து ... நன்மையை விரும்பி*

ரோ 12:9ஆ ... *தீமையை வெறுத்து ... நன்மையைப் பற்றி*

இதில் கிறிஸ்தவமெங்கும் சமநிலையின்மையே காணப்படுகிறது.

— அப்படியானால், ஒரு கேள்வி எழலாம்:

"இரட்சிப்பு கிரியைகளினாலேயா?"

இரட்சிப்பு *கிரியை**களினால்** அல்ல, கிரியை**களுக்காக*** (எபே 2:9,10)

■ செய்யத் தவறியவை எனும் பாவங்களுக்காய்த்

தற்பரிசோதனை செய்ய நேரமெடுங்கள்.

செய்யத் தகாதவை எனும் பாவங்களிலிருந்து மனந்திரும்புதல்—

பரிசுத்தமாகுதலில் முதல் படி

செய்யத் தவறியவை எனும் பாவங்களிலிருந்து மனந்திரும்புதல்—

பரிசுத்தமாகுதலில் இரண்டாம் படி

*"பரிசுத்தமாயிருக்கிறவன் **இன்னும்** பரிசுத்தம்!"* (வெளி 22:11ஆ)

— இன்னொரு கேள்வி:

இது ஒரு ''சமூக நோக்கு'' (social) சுவிசேஷம் அல்லவா?

''சமூக நோக்கு'' சுவிசேஷம்

அல்லது ''ஆன்மீக'' சுவிசேஷம் என்று இரண்டில்லை!

கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் இரு பக்கங்கள், இரு பரிமாணங்கள் உண்டு — லூக் 4:17-19

அது ஒரு மனிதனின் ''ஆன்மீக வாழ்வின்'' தேவைகளையும்,
அத்துடன் ''சமூக வாழ்வின்'' தேவைகளையும் சந்திக்கிறது.

ஒன்றில்லாமல் மற்றொன்று அரை வேக்காட்டு தோசை;
அல்லது ஒரு செட்டை இழந்த பறவை!

■ V. சந்தியாகு ஐயர், மதுரை, எழுதிய பாடல்:

*பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்*
*பட்சமாக உதவி செய்வோம்;*
*உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,*
*யேசு கனிந்து, திரிந்தனரே!*

*நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை,*
*நீசரை நாம் உயர்த்திடுவோம்;*
*பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்,*
*நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே!*

(கிறிஸ்தவக் கீர்த்தனைகள், 267)

(பார்க்க: பக்கங்கள் 248-250, 423-425, 560-562, 571-610)

## 8. மனிதரோடு ஒப்புரவாகுதலை அலட்சியப்படுத்தக்கூடாது.
Do not ignore reconciliation with men.

■ மனந்திரும்புதல் என்பது **கடவுளோடு** மட்டுமல்ல,
**மனிதரோடும்** காரியங்களைச் சரி செய்தலாகும்.

அது கடவுளோடும், **அத்துடன்** மனிதரோடும் ஒப்புரவாகுதல்;
ஏனெனில், நமது பாவங்கள் கடவுளுக்கு மட்டுமல்ல,
மனிதருக்கும் விரோதமானவை—

உ-ம்) 10 கட்டளைகள் (யாத் 20)
1 முதல் 4 ... கடவுளுக்கு நமது கடமை
5 முதல் 10 ... மனிதனுக்கு நமது கடமை

எனவேதான், இயேசு இதை இவ்விதம் சுருக்கிச் சொன்னார்—
கடவுளை நேசி + மனிதனை நேசி (மத் 22:36-40)
சம முக்கியத்துவம்! ... *இரண்டாவது ... ஒப்பானது ...*

சிலுவையின் இரு கட்டைகள்:
நெடுக்குக் கட்டை: கடவுளோடு ஒப்புரவாகுதல்
குறுக்குக் கட்டை: மனிதரோடு ஒப்புரவாகுதல்

☐ தேவன் வெறுக்கும் 7 பாவங்களில் 6 —
நீதி 6:16-19 ... (ஒருவேளை 7 பாவங்களுமே!)

☐ கெட்ட குமாரனின் மனந்திரும்புதல் —
லூக் 15:18-21 ... *பரத்துக்கு விரோதமாகவும்*
*உமக்கு முன்பாகவும் ...*

☐ திருமுழுக்கினன் யோவானை அடிக்கடி குறிப்பிடுகிறோம் —
அவனது ஊழியத்தின் இரு அம்சங்கள்:
லூக் 1:16 *இருதயங்களைக் கர்த்தரிடத்தில் திருப்புதல்*
:17 *பிதாக்கள்* vs. *பிள்ளைகள்*

■ மனந்திரும்புதலின் இரு பக்கங்கள் —
ரோ 8:1 ... அ) மாம்சத்தின் கிரியைகளை விலக்குதல்
ஆ) ஆவியின் கனிகளை விளைவித்தல்

அ) மாம்சத்தின் கிரியைகள்—
கலா 5:19-21
17இல் 8 சகவுறவை அடுத்தவை.

ஆ) ஆவியின் கனிகள்—
கலா 5:22,23
ஏறத்தாழ ஒன்பதும் உறவுகளைப் பற்றியவைதான்.

■ எனவேதான் இயேசு ஒப்புரவாகுதலை *''முதலில்''* வைத்தார்—
மத் 5:23,24

இது இரட்சிப்படைய **நிபந்தனை** அல்ல,
ஆனால் இரட்சிப்பின் **நிரூபணம்**—
1 யோ 3:14 ... *அறிந்திருக்கிறோம் ... ஏனென்றால் ...*

சகேயுவின் மனமாற்றத்தில் இது உதாரணப்படுத்தப்படுகிறது—
லூக் 19:8 ... *திருப்பிச் செலுத்துகிறேன் ...*

— எவருக்கும் தவறிழைத்திருந்தால் மன்னிப்பு கேளுங்கள்.
— எவரிடமிருந்தும் அபகரித்ததைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்.

உ-ம்) வேலை செய்யுமிடத்தில் உள்ள பொருட்களை எடுத்தல்.
சட்டத்திற்கு விரோதமாய்ச் சொத்துக்களை அபகரித்தல்.

ஒப்புரவாகுதலும் திருப்பிக் கொடுத்தலும் வெஸ்லி (1703-1791) மற்றும் ஃபின்னி (1792-1875) ஆகியோரது எழுப்புதல்களில் நிரம்பியிருந்தன. இன்றோ அபூர்வம்.

■ பரிசுத்தத்தின் இரு பக்கங்கள் —
எபி 12:14 ... *யாவரோடும் சமாதானம் ... பரிசுத்தம்*
உ-ம்) பவுல் அப் 24:16 ... *தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக ...*

■ ஒப்புரவாகுதலுக்கு ஒரு பட்டியல் தயாரியுங்கள்.
அந்த நபர் மிகவும் கடினமானவரென்றால்—
ரோ 12:18 ... உங்களால் முடிந்தவரை முயற்சியெடுங்கள்.
... எவ்வளவு சிரமமானாலும் பரவாயில்லை!

எந்த நபரோடாவது ஒப்புரவாகவே முடியாவிட்டால், அவரிடம் கசப்பு வைக்காமல் நன்மையே செய்துகொண்டிருங்கள்— (வச 19-21)

(பார்க்க: 98-100, 198-201, 255-258, 751-754)

## 9. தேவனது பொறுமையைத் தவறாய்க் கணித்துவிடக்கூடாது.
Do not mistake God's patience.

- கடவுள்தான் மனந்திரும்புதலை நமக்கு அருளுகிறவர்
  என்று முந்தையப் பாடங்களில் பார்த்தோம்;
  ஆனால் மனந்திரும்புதலை நம்மீது அவர் திணிப்பதில்லை.
  நமது விருப்பத்தையும் தெரிந்தெடுப்பையும் அவர் மதிக்கிறார்.
  ஆவியானவர் நம்மைப் ''பாவ உணர்வு'' அடையச் செய்கிறார்;
  ஆனால் ''மனந்திரும்புதல்'' நமது பொறுப்புதான்!

  இது இப்படி இருப்பதினால்,
  கடவுள் பொறுமையாய்க் காத்திருக்கிறார்!

- நாம் மனந்திரும்ப போதுமான நேரம் தரவே ஆண்டவர்
  பொறுமையாயிருக்கிறார் —

  ரோ 2:4 ... *ஏவுகிறது ... அறியாமல் ... அசட்டை ...*
  2 பேது 3:9 ... *தாமதமாயிராமல் ... மனந்திரும்பவேண்டுமென்று...*
  :15அ ... *நீடிய பொறுமை ... இரட்சிப்பு ...*

- ஆனால், கடவுளின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு —
  இச்சத்தியம் வேதம் முழுவதும் இழைபோல் ஓடுகிறது.

  - ☐ நோவாவின் காலம்: ஆதி 6:3 ... *என் ஆவி என்றும் போராடாது*
    (தேவனது பொறுமை முடிவடைந்தது—1 பேது 3:20)
    ஆவியானவர் *எதிர்க்கப்படுகிறார்* ... (அப் 7:51)
    ஆவியானவர் *துக்கப்படுத்தப்படுகிறார்* ... (எபே 4:30)
    ஓரளவைக் கடந்தபின்,
    ஆவியானவர் *அவித்துப்போடப்படுகிறார்*...(1 தெச 5:19)
  - ☐ சங்கீதக்காரன் தாவீதின் அறிவு
    சங் 7:11,12 ... *''தினமும் பட்டயத்தைக் கூர்மையாக்குவார்''*
  - ☐ சாலொமோனின் புரிந்துகொள்ளுதலும் அதுவே —
    நீதி 29:1 ... *''அடிக்கடி கடிந்து ... கடினம் ... நாசம்''*

☐ தீர்க்கன் ஏசாயாவின் அழைப்பு

*ஏசா 55:6 ... ''கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயம்''*

☐ பெல்ஷாத்சார் ராஜா காலத்தில் —

பாவப் பாத்திரம் நிரம்பி வழியும்வரை தேவன் காத்திருந்தார்—

தானி 5:2 ... தேவாலயத்திலிருந்த பாத்திரங்கள்

:4 ... குடிபோதை + விக்கிரக வணக்கம்

:5 ... சுவரில் கையெழுத்து

☐ இச்சத்தியமே இயேசுவின் புலம்பலாயிற்று —

மத் 23:37,38 ... *கோழி ... குஞ்சுகள் ... எத்தனை முறை ...*

■ மனந்திரும்புதலைத் தாமதப்படுத்தும் சாக்குப்போக்குகள் —

☐ ''எனது பாவம் பிறருடையதைப்போல் மோசமானதல்ல''

லூக் 13:3,5 ... (பிலாத்து ... கலிலேயர் ... சீலோவாம் ...)

*நீங்கள் மனந்திரும்பாவிட்டால் ... அப்படியே*

☐ ''இப்பாவத்திற்காக தேவன் முன்னர் என்னைத் தண்டிக்கவில்லை''

பிர 8:11,12 ... *தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் ...*

அப் 17:30 ... *அறியாமையின் காலங்கள் ...*

☐ ''நான்'' கிருபையின் கீழ் அல்லவோ வாழ்கிறேன்?

ரோ 5:20; 6:1,2 ... *பாவம் பெருகின இடத்தில் ...*

சாக்குப்போக்குக்கல்ல, மேற்கொள்ளவே கிருபை!

☐ ''கிறிஸ்து பரிந்து பேசுபவர், குற்றம் சாட்டுபவர் அல்ல''

1 யோ 2:1 ... *''நீங்கள் பாவம் **செய்யாதபடிக்கு** ...''*

சங் 130:3,4 ...''அவரது *மன்னிப்பு பயபக்திக்குள்*

நடத்தவேண்டும்''

ரோ 8:1 ... *''ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு(த்தான்)*

*ஆக்கினைத் தீர்ப்பில்லை''*

☐ ''நான் கடவுளுக்குச் செல்லம் ... நான் இல்லாது முடியாது.''

இல்லை, இஸ்ரவேலரைக் கடந்து சென்றதுபோல்

கடவுள் நம்மையும் கடந்து செல்லலாம் (ரோ 10:20,21)

■ அடிக்கடி கூறப்பட்டுள்ள சத்தியம் —

***இன்று*** *அவரது சத்தத்தைக் கேட்பீர்களாகில் ...*

எபி 3:7,8 ... *இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்*

:15 ... *இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்*

4:7 ... *இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்*

இது சங்கீதம் 95இலிருந்து மேற்கோள்

■ ஓர் எச்சரிக்கை —

ஏசாவின் எடுத்துக்காட்டு

எபி 12:17...*கண்ணீர்* விட்டும்... *மனந்திரும்புதல்* கிட்டவில்லை.

■ கடவுளது ''இன்று'' உங்களுக்கு அதிசீக்கிரமாய்த் தோன்றினால்,

உங்களது ''நாளை'' அவருக்கு வெகுவாய்ப் பிந்திவிடும்!

11ஆம் மணி வேளையில் மனந்திரும்பலாம் என எதிர்பாராதீர்;

10.30 மணிக்கே மரித்துவிடலாம்!

■ மேய்ப்பர் பாஸ்கர்தாசன், சென்னை, இயற்றிய பாடல் —

*காலமோ செல்லுதே, வாலிபமும் மறையுதே;*
*எண்ணமெல்லாம் வீணாகும்,*
*கல்வியெல்லாம் மண்ணாகும்;*
*மகிமையில் இயேசுவைத் தரிசிக்கும் நேரத்தில்*
*அந்த நாள் நல்ல நாள், பாக்கிய நாள்!*

**எப்படி மனந்திரும்பக்கூடாது?**

## 10. மனந்திரும்புதலை எப்போதுமே நிறுத்தக்கூடாது.

Do not stop repenting.

- மனந்திரும்புதல் ஒருபோதும் முற்றுப்பெறுவதில்லை.

  நீதி 20:9 ... *துப்புரவானேன் என்று சொல்லத்தக்கவன் யார்?*

  புதிய ஏற்பாட்டில் யோவான் இதை எதிரொலிக்கிறான் — 1 யோ 1:8

  *''நமக்குப் பாவம் இல்லை என்போமானால் ...''*

  இது அவனது முதிர்வயதில் எழுதப்பட்டது!

  அப்படியே யோபுவும் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் — யோபு 42:5,6

  ஆம், மனந்திரும்புதலானது மறுபிறப்பு முதல் மரணம் வரை!

- பாவங்களை விட்டுவிடும்படி *''பரிசுத்தவான்களுக்குத்தான்''* அப்போஸ்தலர் எழுதினர் —

  உ-ம்) 2 கொரி 1:1 VS. 7:1

  எபே 1:1 VS. 5:8,11

  இது குளித்தல் அல்ல, கால் கழுவுதல் — யோ 13:8-10

  தூசியிலே புரளாவிட்டாலும் **பாதங்கள்** அழுக்காகின்றன!

  அப்படியே, கிறிஸ்தவ வாழ்வு ஓர் **ஓட்டப்பந்தயம்** —

  ஓட்டத்தின் துவக்க முதல் முடிவு வரை

  நாம் செய்யவேண்டியது என்ன?

  எபி 12:1

  அ) *''பாவம்''* — எது தவறானதோ அது

  ஆ) *''பாரம்''* — எது தேவையற்றதோ அது

  வழியிலே,

  நம்மைப் பிறருடன் அல்ல, இயேசுவோடு மட்டும்

  ஒப்பிடவேண்டும் —*''இயேசுவை நோக்கி''* (வச 2)

  எபிரெயர் 11இலுள்ள திரளான *''சாட்சிகள்''*கூட

  நமக்குப் பூரண மாதிரிகளல்ல!

அவர்கள் எல்லாருக்கும் தோல்விகள் இருந்தன!
இவ்வுலகில் பின்மாற்றக்காரர்தான் அதிகம்;
அவர்களைப் பார்த்து சோர்ந்து, அணைந்துபோகவேண்டாம்.

■ எகிப்திலிருந்து வெளியே வருவது எளிது;
எகிப்தை நம்மைவிட்டு வெளியேற்றுவதோ கடினம்! (எண் 11:4,5)
*தங்கள் இருதயங்களில் எகிப்திற்குத் திரும்பினார்கள்* (சங் 78)

■ அதிகமதிகமாய் வெளிச்சம் கிடைக்கும்போது மனந்திரும்புதல் ஆழமாகிறது —
நீதி 4:18 ... *நீதியின் பாதை ... நடுப்பகல் வரை ... பிரகாசம் ...*

இறை வார்த்தையின் அறிவில் வளர வளர நமது பாவத் தன்மையை அதிகமதிகமாய் உணருவோம் — சங் 119:130ஆ
*''உமது வசனத்தின் நுழைவு வெளிச்சம் தந்து ...''*

■ நாம் முதலில் விசுவாசித்தபோது இருந்ததைவிட இரட்சிப்பு இன்னும் அருகில் உள்ளது—
ரோ 13:11,12
எனவே, *இருளின் செயல்களைத் தள்ளிவிடுவோம்.*

— இதுதான் கீழ்க்கண்ட வசனத்தின் அர்த்தம் —
பிலி 2:12 ... *''அதிக **பயத்தோடும் நடுக்கத்தோடும்** உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்''*

அதாவது, தொடர்ந்த நொறுங்குதல், இடைவிடா மனந்திரும்புதல்.
இதன் விளைவு: கொண்டாட்டம், ஆனந்தக் களிப்பு

உ-ம்) தாவீதின் மனந்திரும்புதல் —
சங் 51இன் இறுதியில், 18,19ஆம் வசனங்களில்,
மனந்திரும்புதலால் *கண்ணீர் களிப்பாயிற்று!*

■ பவுலின் அறிக்கை —
பிலி 3:13,14 ... *பின்னானவைகளை மறந்து ...*
*முன்னானவைகளை நாடி ...*

# 2

# விசுவாசம்

# FAITH

# 2

## எப்படி விசுவாசிக்கக்கூடாது?

HOW NOT TO BELIEVE

**1**

வேத வாக்குகளைப் பொதுவாக்கிவிடக்கூடாது.

**2**

பொருளாதார ஆசீர்வாதங்களே குறியாயிருக்கக்கூடாது.

**3**

உங்களது விசுவாச அளவை மீறக்கூடாது.

**4**

விசுவாசத்தைத் தக்கவைக்க தனித்தே போராடக்கூடாது.

**5**

உள்ளதை உள்ளபடியே சொல்லத் தயங்கக்கூடாது.

**6**

ஏமாற்றமான அனுபவங்களால் மேற்கொள்ளப்படக்கூடாது.

**7**

பக்திமுயற்சிகளிலிருந்து விசுவாசத்தைப் பிரிக்கக்கூடாது.

**8**

எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எதிர்பார்க்கக்கூடாது.

**9**

உங்கள் நற்குணங்களைச் சார்ந்திருக்கக்கூடாது.

**10**

தேவனது கடந்தகாலச் செயல்களை மறந்துவிடக்கூடாது.

# 2 எப்படி விசுவாசிக்கக்கூடாது?

## அறிமுகவுரை

■ கிறிஸ்தவ வாழ்வு துவக்க முதல் முடிவு வரை
விசுவாசத்தினாலானதே.

- ☐ *விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்டோம்* (எபே 2:8)
- ☐ நமது தலைவர்: *விசுவாசத்தைத் துவக்குகிறவர்* (எபி 12:1,2)
- ☐ நமது உடனாளிகள்/திருச்சபை: *விசுவாசக் குடும்பம்* (கலா 6:10)
- ☐ நமது வாழ்வாதாரம்: *விசுவாசத்தின் ஆவி* (2 கொரி 4:13)
- ☐ நமது செய்தி: *விசுவாசத்தின் வார்த்தை* (ரோ 10:8)
- ☐ நமது ஜெபம்: *விசுவாசமுள்ள ஜெபம்* (யாக் 5:15)
- ☐ நமது கனிகள்: *விசுவாசத்தின் பிள்ளைகள்*
  (உ-ம்) தீமோத்தேயு — *விசுவாசத்தில் எனது குமாரன்* (1 தீமோ 1:2)
- ☐ நமது யுத்தம்: *விசுவாசப் போராட்டம்* (1 தீமோ 6:12)

எனவேதான் பைபிள் கூறுவது —

*"**விசுவாசத்தால்** நீதிமான் பிழைப்பான்!"*

இவ்வுன்னத வாசகம் பைபிளில் 4 முறை வருகிறது:

ஆப 2:4; ரோ 1:17; கலா 3:11; எபி 10:38
மீனுக்குத் தண்ணீர் போல கிறிஸ்தவனுக்கு விசுவாசம்!

■ விசுவாசத்தின் அதிமுக்கியத்துவம் —

- ☐ *பரிசுத்தமில்லாமல் தேவனைத்* ***தரிசிக்க*** *முடியாது* (எபி 12:14);
  அப்படியே, *விசுவாசமில்லாமல் அவரைப்* ***பிரியப்படுத்த***
  *முடியாது* (எபி 11:6)

■ விசுவாசம்:

இது முக்கியமான பாடம் மட்டுமல்ல, மிக அருமையானதுமாகும் —
1 பேது 1:7 ... *பொன்னைவிட*

விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்தாது பார்த்துக்கொள்ளுங்கள் —
1 தீமோ 1:19

கப்பற்சேதம் இருவிதங்களில் ஏற்படலாம்:

(அ) கப்பல் பழுதடைதல்
— விசுவாசத்திலிருந்து வழி விலகல்

(ஆ) கப்பல் மூழ்குதல்
— விசுவாசத்தை விட்டுவிடுதல்

இரண்டாவதைவிட முதலாவது அடிக்கடி நிகழ்வது:

அதாவது, விசுவாசத்தைப் பற்றிய தவறான உபதேசத்தால்
விசுவாசத்தின் புனிதத்தை நாசமாக்குதல்

■ அடிக்கடி ''எளிய விசுவாசம்'' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம்.

விசுவாசம் எளிமையானது, ஆனால் ஆழமானது;
விசுவாசம் எளிமையானது, ஆனால் கடினமானது.

விவிலிய விளக்கங்களை நாம் அப்பியாசிக்காவிடில்,
''விசுவாசம்'' குழப்பமானதாக, சிக்கலானதாக மாறிப்போகும்.

விசுவாசத்தைக் குறித்த தவறான உபதேசங்கள்
ஏராளம் கிறிஸ்தவத்தில் நுழைந்துள்ளன.

□ விசுவாசம் பிற ஆயுதங்களைக் காக்கும் **போராயுதம்** — எபே 6:16
*''எல்லாவற்றிற்கும் மேலாக'' விசுவாசமெனும் கேடகம்*

எனவே, சாத்தான் விசுவாசத்தை உக்கிரகமாகத் தாக்குகிறான் —
*''அக்கினி அம்புகள்''* (எபே 6:16)

எனவேதான், இயேசு இவ்விதம் ஏங்கினார் —
*''மனுமகன் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ?''*
(லூக் 18:8ஆ)

விசுவாசம் **உயிருள்ளதாக** மட்டுமல்ல, **சரியானதாகவும்**
இருக்கவேண்டும்.

எனவேதான், *''எப்படி விசுவாசிக்கக்**கூடாது**''* என்று படிக்கிறோம்.

## எப்படி விசுவாசிக்கக்கூடாது?

### 1. வேத வாக்குகளைப் பொதுவாக்கிவிடக்கூடாது.
Do not generalise Bible promises.

■ வேதாகமம் வாக்குத்தத்தங்கள் நிறைந்தது.
''பரலோக வங்கிக்கு பைபிள்தான் காசோலைப் புத்தகமாம்!''
ஆனால் வாக்குகள் எங்கே பொருந்துமெனப் புரிந்துகொள்ளவேண்டும்.
அவை பலவகைப்படும் —

(அ) தனி நபருக்கே உரிய வாக்குகள்
(உ-ம்) ஆபிரகாம் — *''உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்''* (ஆதி 12:3ஆ)
இன்றோ நம்மைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவே கட்டளை (மத் 5:44)
(உ-ம்) ஸ்தேவான் தன் மீது கல்லெறிந்தவர்களுக்காய் ஜெபித்தான் (அப் 7:60)
அடுத்த அத்தியாயத்திலேயே சவுல் மனந்திரும்புகிறான்!

(ஆ) நாடுகள்/மக்களினங்களுக்கடுத்த வாக்குகள்
(உ-ம்) *''காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் ...''* (யோசு 1:2-4)
இன்றோ இடங்களை அல்ல, மக்களை!
இப்பூமி எரிந்து அழிந்துபோகுமே ... (2 பேது 3:11-13)
*''புதிய வானம் புதிய பூமி''*

கோயில்களையும் மசூதிகளையும் சுற்றி வலம் வருவது மடமை.
புனிதத் தலங்கள் எனப்படுபவைகளில் ஜெப ஊர்வலம் என்று நடத்தி கிறிஸ்தவரல்லாதோருக்கு எரிச்சலுண்டாக்கவேண்டாம்.

— கால் தூசியை உதறி வெளியேறுங்கள் என்பது
இஸ்ரவேலின் கிராமங்களுக்கு, இந்தியாவுக்கல்ல (மத் 10:5,6,14)

(இ) மேசியாவுக்கே உரிய வாக்குகள்
(உ-ம்) *''அவருடைய'' எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை* (சங் 34:20)
இது இயேசுவுக்கு மட்டுமே பொருந்தும் (யோ 19:36)

அதாவது, பஸ்கா ஆட்டுக்குட்டி —

*"ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது"* (யாத் 12:43,46)

இரட்சிப்படைந்த கள்ளனுக்கும் இது பொருந்தவில்லை!

(யோ 19:32,33)

(ஈ) சூழ்நிலைக்கேற்ற வாக்குகள்

(உ-ம்) பணப்பை

— எடுத்துச் செல்லாதேயுங்கள் (மத் 10:5,10)

— எடுத்துச் செல்லுங்கள் (லூக் 22:35,36)

அப்படியானால் 2 கொரி 1:20இன் அர்த்தமென்ன?

***"கிறிஸ்துவுக்குள்"*** — இரு முறை சொல்லப்பட்டுள்ளது.

அதாவது, மீட்பின் ஆசீர்வாதங்கள்

சூழமைவு: வச 21,22 ...

அதாவது, நித்திய ஜீவன்
நீதி
பரிசுத்த ஆவி
தெய்வீக சுபாவம்
உயிர்த்தெழுதல்

■ வேத வாக்குகள் மூலம் தேவன் நம்மிடம் தனிப்பட்டு பேச முடியாதா?

அவரால் அப்படிப் பேச முடியும்;

ஆனால் ஆவியானவர் தரும் உள்ளுணர்வைப் புரிந்துகொள்ளுங்கள்.

எழுத்தின்படியே நிறைவேறவில்லையென மனமடிவாகக்கூடாது;

தேவன் ஏற்ற வேளையில், ஏற்ற விதமாய், ஏற்றதைச் செய்வார்.

எனவேதான்,

தீர்க்கதரிசனங்கள் *நிதானிக்கப்படவேண்டும்* (1 கொரி 14:29)

அவை குறைவுள்ளவை (1 கொரி 13:9)

■ கடவுளின் செயல்பாடுகள் மனிதனுக்கு மனிதன் வேறுபடும் —

(உ-ம்) யோசேப்பு: வனாந்தரத்தில் ஆயத்தப்படுத்தப்பட்டு
அரண்மனையில் பயன்படுத்தப்பட்டான்.

ஆனால்,

மோசே: அரண்மனையில் ஆயத்தப்படுத்தப்பட்டு
வனாந்தரத்தில் பயன்படுத்தப்பட்டான்.

எல்லாம் ஒன்றுபோலிராது.

பலவிதங்களில் செயல்படும் தேவன்!

ஒவ்வொருவரிடமும் பிரத்தியேகமாய்ச் செயல்படுவார்.
எபி 11இன் விசுவாச வீரர்கள் நம்மை உற்சாகப்படுத்தலாம்;
ஆனால் நமக்கு ஒரே முன்மாதிரி ***இயேசு*** மட்டுமே (12:1)

மற்றவர்களெல்லாம் சுற்றி நின்று பார்ப்பவர்களே;
இயேசு மட்டுமே *நமது விசுவாசத்தைத் துவக்கி முடிக்கிறவர்!*

## 2. பொருளாதார ஆசீர்வாதங்களே குறியாயிருக்கக்கூடாது.

Do not be overoccupied with material blessings.

- பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் **விசுவாச** வீரர், வீராங்கனைகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

— ப.ஏ. பரிசுத்தவான்களது விசுவாசத்தின் பிரதான எதிர்பார்ப்பு:
கிறிஸ்துவின் முதல் வருகை (எபி 11:13,39)

— பு.ஏ. பரிசுத்தவான்களது விசுவாசத்தின் பிரதான எதிர்பார்ப்பு:
கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (2 பேது 3:4,9,13)

ஏனெனில்,

கிறிஸ்துவையே பைபிள் மையமாய்க் கொண்டது —
ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரை **கிறிஸ்துவே!**

எம்மாவூர் சாலையில் இயேசு: லூக் 24:27
*''மோசே முதல் சகல தீர்க்கர்களும் ... தம்மைக் குறித்தே ...''*

- கிறிஸ்துவின் பிரதான ஆசீர்வாதம் **''இரட்சிப்பு''**தான்!

(உ-ம்) தேவ தூதன்: *''இயேசு என்று பெயரிடு ...
பாவங்களை நீக்கி இரட்சிப்பார்''* (மத் 1:21)

(உ-ம்) சிமியோனின் கீதம் ...
***''காத்திருந்த** மனிதன்''* (லூக் 2:25)
*''என் கண்கள் இரட்சண்யத்தைக் கண்டன ... சகல மக்கள்
... **இப்போது** நான் மரிக்கலாம் ...''* (வச 30-32,29)

- இவ்விதம் —

புதிய ஏற்பாட்டில் விசுவாசத்தைக் குறித்தவை பெரும்பாலும்
இரட்சிப்பை அடுத்தவையே —

☐ எபி 10:39 ... *''ஆத்துமா இரட்சிப்படைய விசுவாசம் ...''*

இது விசுவாச அத்தியாயமாகிய 11ஆம் அத்தியாயத்திற்கு முந்திய வசனம் — (இதன் தொடர்ச்சியே 11ஆம் அத்தியாயம்)

☐ இதுதான் **ஜெயிக்கும்** விசுவாசம் —

1 யோ 5:4,5 ... *''இயேசுவே தேவ குமாரன்!''*

கிறிஸ்துவைப்பற்றிய அத்தனையும், **அற்புதங்களும்**, எழுதப்பட்ட **ஒரே** நோக்கம் (யோ 20:30,31)

☐ எல்லா விசுவாசத்தின் முடிவும் *''இரட்சிப்பே''* (1 பேது 1:9)

வச 8 ... *சந்தோஷத்தாலும் மகிமையாலும் நிறைவு*
வச 10 ... *எல்லாத் தீர்க்கர்களின் கருத்தாய்வு*

■ இரட்சிப்புதான் ஆசீர்வாதங்களிலெல்லாம் ஆசீர்வாதம் (அப் 3:26)

இரட்சிப்பே பிரதானமானது —
பொருளாதார ஆசீர்வாதங்கள் அடுத்தவைதான்.
இரட்சிப்புதான் மையமானது —
பொருளாதார ஆசீர்வாதங்கள் சுற்றியுள்ளவைதான்.

(உ-ம்) இயேசுவின் கடிந்துரை: (யோ 6:24-27)
பொருளாதார அற்புதமொன்றைச் செய்தபின்பும்,
அவ்வித அற்புதங்களின்பின் போகாதீர் என்றார் (வச 26,27)

(உ-ம்) மக்களின் கேள்வியும் இயேசுவின் பதிலும்: (யோ 6:28,29)
*''தேவனுக்கேற்ற கிரியைகள்''* என்றால்
பௌதீக அற்புதங்கள் என்று மக்கள் நினைத்திருந்தனர்;

இயேசுவோ, அவரே ''அனுப்பப்பட்டவர்'' என்று
விசுவாசிப்பதே காரியம் என்றார்.
— அவர் வந்ததின் **ஒரே** நோக்கம்

■ **ஆபிரகாமை** ஆண்டவர் செல்வத்தாலும் ஆடு மாடுகளினாலும் ஆசீர்வதித்திருந்தாலும், அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு பிரதானமாக இகத்துக்கடுத்ததல்ல.

அதில் ஓர் ''ஆன்மீக'' அல்லது ''மிஷனரி'' நோக்கு இருந்தது —
*''உன் சந்ததி எண்ணிலடங்காதது''*

ஆபிரகாம் 16 பெற்று வாழ்வான் என்றா இதற்கு அர்த்தம்?
இல்லை, அவனுக்கோ ஒரே மகன்! — ஈசாக்கு

தேவன் குறிப்பிட்டது, *''அநேக இனங்கள்''* என்பதுதான் (ரோ 4:17,18) முடிவான ஆசீர்வாதம் ''ஆவிக்குரியதுதான்.''

வச 22 — *''நீதி''*
வச 23-25— *''நீதிமானாக்கப்படுதல்''*

■ குழந்தையில்லாத் தம்பதியருக்கு ஒரு வார்த்தை —

ஆபிரகாமைச் சொல்லிக்கொண்டே **தத்தெடுப்பைத்** தாமதிக்காதீர்! நாமெல்லாரும் தேவனுக்குத் *தத்தெடுப்புப்* பிள்ளைகள்தான்!(ரோ 8:15)

— பெற்றோரில்லா பிள்ளைகள் ஏராளம்!
— தேவன் *திக்கற்றவர்களின் தேவன்!*
— அவரது புன்னகை உங்களுக்குக் கிடைக்கும்!
— ஒரு பிள்ளையைத் தத்தெடுத்தபின் உங்களுக்கே குழந்தை பிறந்தாலென்ன, அது இரட்டை ஆசீர்வாதம்தானே?
— திருமணமாகி 4, 5 ஆண்டுகளுக்குமேல் தாமதிக்காதீர்!

■ நாம் ஆண்டவருக்குக் கொடுப்பது ''பொருளாதார'' நன்மைகளாயிருந்தாலும், அதற்கும் ஆண்டவர் உத்திரவாதமாய் வாக்குப்பண்ணுவது ''ஆவிக்குரிய'' ஆசீர்வாதம்தான் —

2 கொரி 9:7,10,11
பழைய ஏற்பாடு — தானியம் (மல் 3:10)
புதிய ஏற்பாடு — கிருபை!
பழைய ஏற்பாடு — செல்வம்
புதிய ஏற்பாடு — நீதி (2 கொரி 9:9,10)

2 கொரி 9 எப்படி முடிகிறதென்று பாருங்கள் —
வச 15 ... *''தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவு''*
பரிசோ பரிசு!

(பார்க்க: பக்கங்கள் 104-106, 439-440, 563-565, 676-679, 755-758)

## 3. உங்கள் விசுவாச அளவை மீறக்கூடாது.

Do not exceed your measure of faith.

- இரட்சிப்பிற்கும் மீட்பின் பிற ஆசீர்வாதங்களுக்கும் விசுவாசமே அடித்தளம் —

(உ-ம்) ***விசுவாசிக்கிறவன்*** *இரட்சிக்கப்படுவான்* (மாற் 16:16)
***விசுவாசத்தினாலே*** *நீதிமான் பிழைப்பான்* (ரோ 1:16,17)

இந்த விசுவாசம் இறைமக்கள் அனைவருக்கும் பொதுவானது—
2 பேது 1:1 ... *"எங்களைப் போல அருமையான விசுவாசம்"*
அப்போஸ்தலருக்கும் விசுவாசிகளுக்கும் ஒரேவித விசுவாசம்!

ஆனால், குறிப்பிட்ட சூழ்நிலைகளில், விசுவாசத்தைச் செயல்படுத்த தேவன் தரும் சிறப்பான பலம் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது—

இதுதான் விசுவாசத்தின் *"வரம்பு"* (அல்லது அளவு) எனப்படுவது.
ரோ 12:3 ... தனி நபர்கள் = *"அனைவரும் ... ஒவ்வொருவரும்"*
இப்பகுதி *"வரங்களைப்"* பற்றியது (வச 6)

பொதுவான விசுவாசம் VS. விசுவாச வரம் (1 கொரி 12:9)
*"எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறார்களா?"* (வச 29)

அற்புதங்களைச் "செய்வதைவிட"
அவற்றை "அனுபவிப்பதுதான்" பொதுவானது.

- அசாதாரண விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டுகள்:
  - — யோசுவா ... சூரியனும் சந்திரனும் (யோசு 10:12,13)
    அதுபோல் முன்னும் பின்னும் நடந்ததில்லை (வச 14)
  - — அனனியா, அசரியா, மிசாவேல் (தானி 3:24,25) நெருப்பில் நடை.
    இதைச் சொல்லிக்கொண்டு, இன்று தீ மிதிக்க முயலாதீர்!
  - — தானியேல் சிங்கக் கெபியிலே வீசப்பட்டான் (தானி 6:21,22).
    ஆயிரமாண்டு அரசாட்சியில்தான் சிங்கமும் ஆட்டுக்குட்டியும் சேர்ந்து வாழும் (ஏசா 11:6-9)

— எலியா மழையை நிறுத்தினான் (யாக் 5:17,18)

திறந்தவெளி நற்செய்திக் கூட்டங்களில் இப்படி முயற்சிக்காதீர். (சில வேளைகளில் நடக்கலாம், எப்போதும் அல்ல)

மழை **நிறுத்தப்பட்டது** மட்டுமல்ல, **கொண்டுவரவும்** பட்டது!

பொதுவாக நாம் கேட்பது —

*எலியாவின் தேவன் எங்கே?* (2 ராஜா 2:14)

ஆனால் கேட்கவேண்டியது —

தேவனின் எலியாக்கள் எங்கே?

நாம் இதைச் சொல்லுவோம் —

*''எலியா நம்மைப்போல் இருந்தான்''* (யாக் 5:17)

ஆனால் கேள்வியோ —

நாம் எலியாபோல் இருக்கிறோமா?

விசுவாச வீரர்களின் சரிதைகளால் எபிரெயர் 11 நிறைந்துள்ளது —

முடிவில் அவை கற்பிக்கும் பாடம் யாது?

நகர்ப்புறங்களின், வீடு வாசல்களின் மதிற்சுவர்களை இடிக்கவா அழைக்கப்படுகிறோம்?

அல்லது தண்ணீர் மீதும் நெருப்பிலும் நடக்கவா?

இல்லை, சரிதைகளின் முடிவில் சொல்லப்படுவது: *''ஆகையால்''* (12:1)

*''கிறிஸ்தவ ஓட்டத்தில் பொறுமையோடு ஓடுவோம்''*

— விசுவாச ''அளவு'' என்று இல்லை எனப் பிரசங்கிமார் வாதாடுவர்.

அப்படியானால், லூக் 7:22ஐ முழுமையாக சுகமளிப்புக் கூட்டங்களின் சுவரொட்டிகளிலும், கைப்பிரதிகளிலும் அச்சடிக்காததேன்?

*''குருடர், சப்பாணிகள், குஷ்டரோகிகள், செவிடர், மரித்தோர்''*

''குஷ்டரோகிகள், மரித்தோர்'' என்பவர்களை நாம் ஏன் வேண்டுமென்றே விடுகிறோம்?

■ மலையைப் *''பெயர்க்கும் விசுவாசம்''* என்பது? (மாற் 11:22,23)

மலையை 5 விதங்களில் கடக்கலாம் —

+ மேலே பறந்து செல்வது
+ ஏறிச் சென்று கடப்பது — இயேசு மலைகளைப் பெயர்க்க வில்லை; ஏறித்தான் கடந்தார்!
+ சுற்றி வருவது
+ குடைந்து செல்வது
+ பெயர்த்தெறிந்துவிட்டு நடப்பது

முதல் நான்கு விதங்களும்கூட விசுவாசத்தினால்தான் —

(உ-ம்) காலேப் (யோசு 14:10-12)

*... பலம் ... பலம் ...* (வச 11)

*''வார்த்தையில்''* விசுவாசம் (வச 10) (85 வயது)

கடப்பதில் 5ஆம் விதம் —

''பெயர்த்தெறிதல்'' — இது அபூர்வமான விசுவாசம் (1 கொரி 13:2)

(உ-ம்) *செருபாபேலுக்குக் குறிப்பான வார்த்தை* (சக 4:6,7)

எல்லா மலைகளும், ''இடறல்கள்'' அல்லது ''தடங்கல்கள்'' அல்ல; பெரும்பாலானவை நமக்கு வரும் ''சவால்களே!''

''மலையைப்'' பற்றி ஆண்டவர் பேசியது விசுவாசத்தின் வல்லமையைச் சுட்டிக்காட்டவே! (மாற் 11:22,23)

■ அப்படியே, வாழ்வின் புயல்கள் —

(உ-ம்) அதட்டப்பட்ட புயல் (லூக் 8:22-25)

சமாளிக்கப்பட்ட புயல் (அப் 27:14,15,18,19)

எல்லாப் புயல்களையும் ஒன்றுபோல் பாவிக்கக்கூடாது.

விசுவாசத்தை நடைமுறைப்படுத்துவதில் **பல்வகை** —

(அ) தடுத்து நிறுத்தும் விசுவாசம் (லூக் 8:22-25).

தேவ ''வல்லமை'' வெளிப்பட்டது!

(ஆ) சகித்துக்கொள்ளும் விசுவாசம் (அப் 27).

தேவ ''நோக்கம்'' புலப்பட்டது!

அவர்கள் மெலித்தா தீவில் கரை சேர்ந்தனர் (28:1)
தீவிலுள்ள பழங்குடியினருக்கு சுகமளிப்புக் கூட்டம் (வச 8,9)
சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது!

(இ) ஒளித்துக்கொள்ளும் விசுவாசம்
1 சாமு 22:1 ... தாவீது ... அதுல்லாம் கெபியில்
(நடைமுறை ஞானம்)
சங் 57:1 ... *''ஆபத்துகள்* ***நீங்கும்வரை*** *...''*

ஆவியானவர் தரும் நிதானிப்பும் நடத்துதலும் ...

எப்போது எதிர்த்து நிற்கவேண்டும்,
எப்போது சகித்துக்கொள்ளவேண்டும்,
எப்போது ஒளிந்துகொள்ளவேண்டும்
என்று நமக்குப் போதிக்கிறது.

நமது விசுவாச ''அளவின்படி'' நாம் செயல்படாவிட்டால்,
விசுவாசம் என்ற பெயரில்
துணிகரத்தில் முடிந்துவிடுவோம்!

## 4. விசுவாசத்தைத் தக்கவைக்க தனித்தே போராடக்கூடாது.

Do not struggle alone to maintain faith.

■ ''விசுவாசிப்பது'' என்பது தனி நபரது பொறுப்பு எனினும்,
நமது விசுவாசத்திற்கு உறுதுணையாய்ப் பிறரது உதவியும் தேவை —

(அ) உடன் விசுவாசிகளிடமிருந்து — எபி 3:12-14

(ஆ) தேவ ஊழியரிடமிருந்து

ஜெபிப்பதின் மூலம் (1 தெச 3:9,10)
சந்திப்பின் மூலம் (1 தெச 3:2)
(காணிக்கை சேகரிக்க மட்டுமல்ல)

நமது பாடுகளைச் சோதனைக்காரன் சாதகமாக்குகிறான் (வச 4,5)
எனவேதான், *''விசுவாசம்''* அடிக்கடி *''அன்போடு''* இணைந்துள்ளது—

1 பேது 1:21,22; எபே 6:22;
1 தெச 1:2; பிலேமோன் 4,5

(உ-ம்)

☐ விசுவாசத்தில் ஆபிரகாமுக்கு உதவ சாராள் இருந்தாள்.

☐ தானியேலுக்கு உறுதுணையாக அவனது நண்பர் இருந்தனர்.

☐ எஸ்றா, நெகேமியா ஒருவரையொருவர் ஊக்குவித்தனர்.

☐ யோசபாத் ராஜா எதிரியை மேற்கொள்ள முடியாதிருந்தபோது அவனை ஊக்குவிக்க தீர்க்கன் யேகாசியேல் இருந்தான்.

☐ மோசேயின் கரங்களைத் தாங்க ஊரும் ஆரோனும் இருந்தனர்.

☐ பிலிப்பிய சிறைச்சாலையில் பவுலும் சீலாவும் தேவனைத் துதித்து ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக்கொண்டனர்.

— பிரசங்கியின் புத்தகத்தில் சாலமோன் ராஜா கொண்டுவரும் படிப்பினை இதுவே ...

பிர 4:10 ... நீ விழும்போது

:11 ... நீ விசுவாசத்தில் குளிர்ந்துபோகும்போது —

வாழ்க்கையென்பது மேடும் பள்ளமும்தானே?

— விசுவாசத்தில் சீடர்கள் தடுமாறினபோது
இயேசு அவர்களை உற்சாகப்படுத்தினார் ...

- ☐ ஆகாரத்திற்காய்க் கவலைப்பட்டபோது (மத் 16:8-11)
  — 12 மற்றும் 7 கூடைகள் மீந்ததை நினைவுபடுத்தினார்.
- ☐ *''எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்''* (லூக் 17:5,6)
  — ''கடுகு அளவு விசுவாசம் போதும்!'' என்றார்.

கிறிஸ்தவ வாழ்வு *''விசுவாசத்தின் நல்ல போராட்டம்''*
புதிய ஏற்பாட்டில் போராட்டத்தைக் குறித்த முக்கிய பகுதி —
எபே 6 — இது தனி நபருக்கல்ல, ஒரு குழுவிற்கு,
ஒரு சேனைக்குச் சொல்லப்பட்டது (எபே 6:10)

- ■ வாழ்வின் அனைத்துப் பகுதிகளுக்கும் சூழ்நிலைகளுக்கும்
  போதுமான விசுவாசம் யாரிடமும் இல்லை —
  நாம் பலவீனமாயிருக்கும் பகுதிகளில் பிறரது உதவி தேவை —

  ரோ 14:1 ... *விசுவாசத்தில் பலவீனன் ... சேர்த்துக்கொள் ...*
  15:1 ... *பலவீனரைத் தாங்கவேண்டும் ...*

- ■ எனவேதான்,
  சகவுறவுகளிலுள்ள கேடுபாடுகள் விசுவாசத்தைப் பாதிக்கின்றன —
  - ☐ மன்னியாமை ... மாற் 11:24,25
  - ☐ பாரபட்சம் ... யாக் 2:1

    அதாவது, என் சகோதரனும் நானும் நமது *பிதாவாகிய* ஒரே தேவன்மீது விசுவாசம் வைத்திருப்பதால் பாரபட்சம் காட்டமுடியாது.
  - ☐ தன்னலம் ... யாக் 2:14-17

    அன்பின் செயல்பாடு இல்லாத விசுவாசம் செத்தது!

வேறு வார்த்தைகளில் சொன்னால் —

விசுவாசம் பலப்படுவது ...

+ மன்னிக்கும் சுபாவத்தினால்
+ பாரபட்சமற்ற அன்பினால்
+ தன்னலமற்ற செயல்களினால்

■ ஓர் எச்சரிப்பு

உங்கள் விசுவாசத்திற்கு உதவியாயிருப்பவர்களுக்காய்த் தேவனைத் துதியுங்கள்; அதே வேளையில், விசுவாசம் ஆட்டங்காணும் சூழ்நிலைகளில் நீங்கள் கடந்து செல்லும்போது, உங்களை வசப்படுத்த முயலுபவர்களைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்!

2 கொரி 1:24 ... *அதிகாரிகளாய் அல்ல ... சகாயராய் ...*

■ சகோதரி சாராள் நவரோஜியின் (1938- ) பாடல்:

*இராஜரீகக் கெம்பீரத் தொனியோடே*
*இராஜ இராஜனை தேவ தேவனை*
*வெற்றியோடு பாடி பக்தியோடு நாடி*
*வீர சேனைக் கூட்டமாகச் சேவிப்போம்!*

*மெய்ச் சீஷராக ஏசுவின் பின் செல்லுவோம்,*
*முற்று முடிய வெற்றியடைய*
*சற்றும் அஞ்சிடாமல் ஏசு நாமத்தில்*
*சாத்தானைத் தோற்கடித்து மேற் கொள்ளுவோம்!*

(பார்க்க: பக்கங்கள் 303-306, 350-351, 380-384, 517-519, 546-549, 642-646)

## 5. உள்ளதை உள்ளபடியே சொல்லத் தயங்கக்கூடாது.

Do not hesitate to confess the facts.

- ''சாதக அறிக்கை'' என வலியுறுத்தும் நூதன உபதேசம் வந்துள்ளது.

அவர்கள் சொல்வது: ''அற்புதம் **உங்கள்** வாயில்தான் இருக்கிறது!''
இல்லை, அது **தேவனுடைய** வாயில்!
ஏசா 45:23 ... *ஒவ்வொரு முழங்காலும்*
55:11 ... *வெறுமையாய்த் திரும்பாது*

இறைவார்த்தையின் வாக்குகளை உரிமைபாராட்டி அறிக்கையிடலாம்;
ஆனால் அற்புதம் **தேவனது** கரத்தில்தான் இருக்கிறது —

ரோ 9:16 ... *விரும்புகிறவன் ... ஓடுகிறவன் ... இரங்குகிற தேவன்*

(உ-ம்) தாவீது விரும்பியது ஒன்று; தேவன் தீர்மானித்தது வேறு:
அவன் தன் மகனிடம் சொன்னது (1 நாளா 22:7,8)

மனிதன் விரும்புகிறான், தேவ ஆலோசனையே நிற்கும்!
தேவனே குயவன், நாமோ களிமண்தான்!

- நவீன கால விசுவாசப் போதனைகள் சொல்வது —
நமது பலவீனங்கள், துன்பங்கள், தோல்விகளைச் சொல்லவே கூடாது.
இப்போதனை திருமறைக்குப் புறம்பானது —

கீழ்க்கண்டவை பாதக அறிக்கைகளா?

- ☐ யோசபாத் ராஜா (2 நாளா 20:12) ... *மோவாப், அம்மோன் புத்திரர்.*
தனது உள்ளான உணர்வுகளை அப்படியே சொன்னான்.
கர்த்தரோ வெற்றியையே தந்துவிட்டார் (வச 15) ... தீர்க்கதரிசனம்
- ☐ இயேசு: *''தலைசாய்க்க இடமில்லை''* (லூக் 9:58)
இது ஒரு புகார் அல்ல, சவாலிடும் வார்த்தைகள்!
- ☐ இயேசு: ... *''ஆவியில் கலங்கி ... காட்டிக்கொடுப்பான் ... சாட்சியாகச் சொன்னார்''* (யோ 13:21)

அவர் மனித இயல்பின்படி, சராசரியாக, நடந்துகொண்டார்.

**இயேசுவின்** பலவீனம், **பிதாவின்** வல்லமை (2 கொரி 13:4)

**நாமும்** அப்படியே ...

☐ அப்போஸ்தலன் பவுலும் இதேவிதமாய் நடந்துகொண்டான் —
(உ-ம்) அவனது அறிக்கைகள்:

1 கொரி 2:3...*''பலவீனம் ... பயம் ... நடுக்கம்''*

2 கொரி 1:8,9 ... *''பிழைப்போம் என்கிற நம்பிக்கை ... அற்றுப்போயிற்று ... ''*

☐ ஊமையும் செவிடுமான பிள்ளையின் தகப்பன் —

மாற் 9:22-24

*''விசுவாசிக்கிறேன் ... என் அவிசுவாசம் நீங்கச் செய்யும்''*

இதில் என்ன வித்தியாசம்?

தேவன் சுகமளிப்பவர்தான்;

ஆனால் **''என்''** மகனைச் சுகமாக்குவாரா?

☐ குருடன் — மாற்கு 8:23-25

*''மனிதரை ... மரங்களாக ... காண்கிறேன்''*

ஆம், நாம் அறிக்கையிடவேண்டியதும் இப்படியே —

பாதக அறிக்கை, சாதக அறிக்கை என்பதல்ல,

*உண்மை எதுவோ ...* பிலி 4:8

பிரபல வேத போதகர் கேம்ப்பெல் மார்கன் (1863-1945) கூறியது —
''**சிந்தனைக்கு** ஒவ்வாத **விசுவாசத்தைச்** சந்தேகிக்க வேண்டும்;
**விசுவாசத்திற்கு** நடத்தாத **சிந்தனையை** விட்டு ஒதுங்கவேண்டும்!''

அதாவது தெளிந்த புத்தியும் அதற்கேற்ற வார்த்தைகளும்

■ அப்படியானால் *''விசுவாச வார்த்தை''* என்றால் என்ன?

ரோ 10:6-10

— இது சுவிசேஷ சத்தியமே (வச 8,9)

இரட்சிப்புக்கு விசுவாசிக்கப்படவேண்டியது.

*''யார் ஏறுவது... இறங்குவது... உன் வாயினாலே... இருதயத்தில்''*

அதாவது, பரத்திலோ, பாதாளத்திலோ அல்ல, இருதயத்திலேயே!

இது பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு மேற்கோள் — உபா 30:11-14

அதாவது, சத்தியத்தைத் தேடி ரோமுக்கோ, ராமேஸ்வரத்திற்கோ
போகவேண்டியதில்லை!

நாம் சத்தியத்தைத் தேடி அலைய வேண்டியதில்லை;
சத்தியம் கிறிஸ்துவில் நம்மிடம் வந்துவிட்டது! (யோ 14:6)

இதைப்போன்ற இன்னொரு பகுதி —
2 கொரி 4:13 … *"விசுவாசிக்கிறோம் … ஆகவே பேசுகிறோம்"*
சூழமைவு? வச 10,14
உயிர்த்தெழுதல் பற்றிய விசுவாச அறிக்கை!

## 6. ஏமாற்றமான அனுபவங்களால் மேற்கொள்ளப்படக்கூடாது.

Do not be overridden by disappointing experiences.

- எபிரெயர் 11 விசுவாசத்தைப் பற்றிய ஓர் அத்தியாயம் —
  இன்று விசுவாசத்தின் ஒரு பக்கமே வலியுறுத்தப்படுகிறது.
  அதற்கு இன்னொரு பக்கமுண்டு. எடுத்துக்காட்டுகள் —

  - ☐ *விசுவாசத்தால்* ஆபிரகாம் ஈசாக்கைப் **பெற்றான்** (வச 11)
    *விசுவாசத்தால்* ஈசாக்கைப் **பலியாய்க் கிடத்தினான்** (வச 17)
  - ☐ *விசுவாசத்தால்* மோசே அரண்மனைக்கு
    **எடுத்துச் செல்லப்பட்டான்** (வச 23)
    *விசுவாசத்தால்* மோசே அரண்மனையை
    **விட்டு வெளிவந்தான்** (வச 24-27)
  - ☐ *விசுவாசத்தால்* பரிசுத்தவான்கள் பட்டயத்திற்குத் **தப்பினார்கள்** (வச 34)
    *விசுவாசத்தால்* பரிசுத்தவான்கள் பட்டயத்தால்
    **வெட்டப்பட்டார்கள்** (வச 35,37)
  - ☐ ஸ்தேவான்
    *விசுவாசத்தில் நிறைந்தவனாய் ... **அற்புதங்கள்*** (அப் 6:8)
    *ஆவியினால் நிறைந்தவனாய் **கொல்லப்பட்டான்*** (அப் 7:55,59)
  - ☐ பேதுரு தப்பினான்; யாக்கோபு கொல்லப்பட்டான் (அப் 12:1,2,3,7)

  இவைகளின் பொருளென்ன?
  "***விசுவாசிக்க** மட்டுமல்ல ... **பாடுபடவும்** ...*" (பிலி 1:29)
  விசுவாசிகள் = பாடனுபவிப்போர்
  *"எனக்கும் ... உங்களுக்கும் போராட்டம்"* (வச 30)

- திருப்பணியில் இருப்போருக்கு ஒரு முக்கிய வார்த்தை —
  - ☐ நாசரேத்தில் இயேசுவால் பெரிய அற்புதம் எதுவும் செய்ய முடியவில்லை (மாற் 6:5,6)
    எல்லா நிலமும் ஒன்றுபோலிராது. ஊழியத்தில் விளைவுகள் சிறப்பாயில்லாவிடினும் அதையும் அறிக்கை செய்யத் தயங்கக்கூடாது. நான்கில் ஒரு நிலத்தில்தான் நல்ல விளைச்சல்! (லூக் 8:5-8)

☐ *''நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை ... ஊழியத்தில் ...*
*இப்பிரபஞ்சத்தின் தேவன்''* (2 கொரி 4:1,4)

☐ நோயுற்ற 100 பேருக்காய் ஜெபிக்கிறீர்கள்;
அவர்களில் ஒருவர்கூட குணமடையாவிட்டாலும்
தேவன் குணமாக்குகிறவராகவே இருக்கிறார்!
அவர் *யேகோவா-ரப்பா!*

வெற்றி கண்டதும் பறக்கக்கூடாது;
தோல்வி கண்டதும் படுத்துவிடக்கூடாது!

(உ-ம்) திரும்பி வந்த 70 பேர் (லூக் 10:17,20)
*''உங்கள் பெயர்கள் **எழுதப்பட்டிருக்கின்றன**''* ...
இதுதான் நிலையானது.

அதாவது, கிறிஸ்துவே ஜெய வீரர்!
சுவிசேஷமே கடவுளின் வல்லமை!
நாம் கடவுளின் ஊழியக்காரர்!

■ நொறுக்கிவிடும் சந்தர்ப்பங்களிலும் *''அசையாதிருங்கள்''* —
(1 கொரி 15:58)

*''விருதாவாயிராது''* — முடிவாக
(முந்தின வசனங்களில் ... *''மரணம்''*)

தாமதிக்கும் சந்தர்ப்பங்களில் ''பொறுமையாய்'' இருங்கள்
*''நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ...''* (கலா 6:9)
(*''ஏற்ற வேளை''* தேவனது கரத்திலுள்ளது!)

வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்குப் பொறுமை —
எபி 10:36 (''உடனே'' நடந்துவிடாது)
(உ-ம்) ஆபிரகாம் (எபி 6:14,15)

இன்று, எதிலும் ஓர் அவசர கோலம்!
திடீர் உணவு
உடனடி படப்பிடிப்பு
துரித அஞ்சல்

இவ்வித மனப்பான்மை இறைப்பணிக்கு ஒவ்வாது!

(உ-ம்) ஜார்ஜ் முல்லர் (1805-1898) —

இவர் தனது இரு குடிகார நண்பர்களுக்காக
40 ஆண்டுகள் ஜெபித்தும்,
அவர்கள் அவரது அடக்க ஆராதனையின் பிரசங்கத்தில்தான்
இரட்சிக்கப்பட்டு, மிஷனரிகளாய் வெளிநாடு சென்றனர்.

*''விசுவாசிக்கிறவன் பதறான் ... அடித்தளம்''* (ஏசா 28:16)
*''உறுதியாய் ... மனது ... சமாதானம்''* (26:3)

- என்ன வந்தாலும், விசுவாசத்தில் நிலைத்திருங்கள் —

யோபு: *''அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் ...''* (யோபு 13:15)
அனனியாவும் நண்பரும்: *''அவர் விடுவிக்காமற்போனாலும் ...''* (தானி 3:17,18)
ஆபகூக்: *''அத்தி மரம் துளிர்விடாமற்போனாலும் ...''* (ஆப 3:17,18)

- பாடுங்கள்:

*அத்தி மரம் துளிர்விடாமற் போனாலும்,*
*திராட்சச்செடி பழம் கொடாமற் போனாலும்,*
*ஒலிவ மரம் பலனற்றுப் போனாலும்,*
*நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்!*

## 7. பக்தி முயற்சிகளிலிருந்து விசுவாசத்தைப் பிரிக்கக்கூடாது.

Do not isolate faith from other devotional exercises.

- விசுவாசமானது கிறிஸ்தவ வாழ்வின் மற்ற ஒழுங்குமுறைப் பயிற்சிகளின்றி வளரவோ, நிலைப்படவோ முடியாது. ஏனெனில், விசுவாசம் ஒரு பொட்டலமாய் வருகிறது —

    (உ-ம்) 1 கொரி 13:13அ ... 3இல் 1ஆவது
    1 தீமோ 6:11 ... 6இல் 3ஆவது
    2 தீமோ 2:22 ... 4இல் 2ஆவது

- விசுவாசத்தோடு தொடர்புடைய மற்ற பயிற்சிகள் எவை?

**(அ) பரிசுத்தமாகுதலும் விசுவாசமும்**

1 தீமோ 1:5 ... *சுத்தமான இருதயம் ... நல்மனச்சாட்சி*
இவற்றில் கவனம் செலுத்தாவிடில்,
*விசுவாசக் கப்பல் சேதமாகிவிடும்* (வச 19)

பரிசுத்தம் (பரிசுத்தமாகுதல்) மனந்திரும்புதலில் துவங்குகிறது —
எனவேதான், இயேசு இவ்விதம் பிரசங்கித்தார் —

*மனந்திரும்பி* **(அத்துடன்)** *விசுவாசியுங்கள்* (மாற் 1:15)

விசுவாச வீரர் பட்டியலில் சிம்சோன் காணப்படுகிறான் (எபி 11':32);
ஆனால், தெலீலாளுடன் கொண்ட அசுசியான தொடர்பால்,
தனது தரிசனத்தை இழந்தான் ...
தனது தேவனையும் இழந்துவிட்டான் ...

இருப்பினும், விசுவாச வரத்தைச் செயல்படுத்திக்கொண்டேயிருந்தான்;
3000 பேர் அமர்ந்திருந்த மேற்கூரையைத் தகர்த்தான் —
விடுவிக்க வேண்டியவன் அழிக்கிறவனானான்;
மக்களையும் அழித்தான்;
தன்னையும் அழித்தான்!

## (ஆ) ஜெபம், உபவாசமும், விசுவாசமும்

மத் 17:18-21 (வலிப்பு) *ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமன்றி*
எபே 6:16,18 ... *விசுவாசக் கேடயம் ... எச்சமயத்திலும் ஜெபம்*

(உ-ம்) பேதுருவின் விசுவாசத்திற்காக இயேசுவின் ஜெபம் —
லூக் 22:31,32

நாம் நமது சொந்த விசுவாசத்திற்காய் ஜெபிக்கவேண்டும்.
இங்கும்கூட, இறைச்சித்தத்திற்கு இசைந்திருக்கும்போதுதான்
விசுவாசம் வல்லமையாய்ச் செயல்படும் — (1 யோ 5:14,15)

இங்கு *''தேவ சித்தம்''* என்பது தேவனுக்குப் பிரியமாய்க் கீழ்ப்படிந்து
வாழ்வதுதான் (1 யோ 3:22)

## (இ) வேதத் தியானமும் விசுவாசமும்

ரோ 10:17 *வசனத்தைக் கேட்பதால் ...கேட்பதால் ...*
அதாவது, கிரமமாய், அவசரமின்றித் தியானம்

கிறிஸ்தவனின் இரு கரங்கள் —

இடது கரம்: *விசுவாசக் கேடயம்*
வலது கரம்: *ஆவியின் பட்டயம்* (தேவ வசனம்)

இவையிரண்டும் சேர்ந்தால்தான் *''நீதியின் ஆயுதங்கள்''*
(2 கொரி 6:7)
ஒன்று அடுத்ததற்கு உதவும்!

அதாவது, தேவனது நீதியின் வசனத்திற்கேற்ப நடப்பதால்
உண்டாகும் உறுதிப்பாடு

தேவ வசனத்தை நாம் புறக்கணித்தால்,
வேறெதுவும் நமது விசுவாசத்திற்கு உயிரூட்ட முடியாது.
(உ-ம்) செல்வந்தன் ... லாசரு ... *மோசே ... எலியா ...*
(லூக் 16:27-31) (யோ 5:45-47)

இன்றோ பிரசங்க பீடங்களிலிருந்து வருவது
பெரும்பாலும் கதைகளே!

**(ஈ) சாட்சி பகருதலும் விசுவாசமும்**

2 கொரி 4:13 ... *"விசுவாசிக்கிறோம் ... பேசுகிறோம்"*
எபே 6:14-16 ... *"விசுவாசக் கேடயம் ...*
(முன் செல்ல) *நற்செய்திப்பணிக் காலணி"*

இறையரசின் விரிவாக்கப்பணியில் ஈடுபாடு!
சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் அளவிற்குத்தான்
அதின் வல்லமையின் **நிச்சயமும் தெளிவும்** நமக்குண்டாகும்!

**(உ) தானதர்மமும் விசுவாசமும்**

*"கிரியை (செயல்)* ***இல்லாத*** *விசுவாசம்"* (யாக் 2:14-17)
செயல் இல்லாத விசுவாசம் செத்தது;
செயல் நிறைந்த விசுவாசம் சத்தானது.

விசுவாசம் காணக்கூடாதது ... செயல்களே காணக்கூடியவை (வச 18)
— ஒரு சவால்!

(உ-ம்) செல்வந்தரை உயர்த்தி, தரித்திரரை அவமதித்தல் (யாக் 2:1-4)
வச 1: *"மகிமையின் கர்த்தர்"*
அதாவது, நித்திய மாணிக்கமா, அநித்திய மண்ணா?

— கலா 5:6 ... *"அன்பினால் செயல்படும் விசுவாசம்"*
— 1 தெச 1:2 ... *"விசுவாசத்தின் செயல்பாடு, அன்பின் பிரயாசம்"*

(பார்க்க: பக்கங்கள் 259-262, 385-388, 651-656, 691-695, 735-737)

## 8. எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எதிர்பார்க்கக்கூடாது.

Do not expect all questions to be answered.

■ நாம் தேவனது வழிகளை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியாது —
ஏசா 55:8,9 ... *தேவனது வழிகள் ... நினைவுகள் ... உயர்ந்தவை*

இந்த வார்த்தைகளைப் பவுல் திருப்பிச் சொல்லுகிறான் —
ரோ 11:33-35 ... *ஆழம் ... ஞானம் ... ஆராய்ந்து முடியாது ...*
*யார்? ... யார்? ... யார்?*

**கேள்வி கேட்காத விசுவாசத்திற்குச்** சில எடுத்துக்காட்டுகள் —

☐ மரியாள் லூக் 1:34-38
— தூதன் கூறிய விளக்கத்தை அவளால் முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியவில்லை.
— எலிசபெத் மேற்கோள் காட்டப்பட்டதும் போதாது ... அவளுக்காவது ஒரு கணவன் இருந்தான் (வச 36)

மரியாளின் விசுவாசம் **''வார்த்தையில்''** மட்டும் இருந்தது —
*''தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை''*

இவ்வித விசுவாசம்தான் மெய்யான ''பாக்கியம்'' —
*''விசுவாசித்தவளே பாக்கியவதி''* ... (வச 45)

☐ ஆபிரகாம் எபி 11:8 —
*''எங்கே என்று தெரியாமல் ...''*
**எவர்** நம்மை நடத்துகிறார் என்று தெரியும்போது, ''என்ன, எங்கே'' என்பதெல்லாம் முக்கியமா?

முடிவாய் வரவிருப்பதை விசுவாசிப்பது
இன்று நடப்பதைப் பார்த்துப் பதறாது (வச 10) ... *நகரம் ...*

☐ சீமோன் பேதுரு மத் 14:26-29 —
***''நீரேயானால்*** *... என்னைக் கூப்பிடும்''*
யாராவது தண்ணீர்மேல் நடக்க முடியுமா?

— கேள்விகள் கேட்கவில்லை!

ஆனால் ''இயேசுவை'' விட்டு நமது கண்கள் சூழ்நிலைகளை (அலைகளை) பார்த்தால் மூழ்கியே போவோம் (வச 30,31)

இங்கும்கூட ஆண்டவர் தன்னைத் தூக்கிவிட முடியும் என்று பேதுரு விசுவாசித்தான்.

பேதுருவின் துணிச்சல் அவனுக்கு ஓர் **அற்புதத்தைக்** கொடுத்தது மட்டுமல்ல, ஒரு **பாடத்தையும்** கற்பித்தது.

■ ஆம், எல்லாமுமே தெரியாதிருப்பதுதான் கிறிஸ்தவ வாழ்விற்குச் சவாலளிக்கிறது—

□ *''தரிசித்து நடவாமல் ... விசுவாசித்து நடக்கிறோம்''* (2 கொரி 5:6)

''நின்றுகொண்டு...கலங்கிக்கொண்டே'' இராது *நடக்க*வேண்டும்.

மேலும் கீழும் என்றிராது ''நிலையாய்'' ...

*''எப்பொழுதும்* **தைரியம்''** (வச 5,8)

(உ-ம்) ஆசரிப்புக் கூடாரம்: 3 பகுதிகள்

| | | |
|---|---|---|
| வெளிப்பிரகாரம் | : | சூரியவொளி |
| உட்பிரகாரம் | : | விளக்கொளி |
| சன்னிதிப் பிரகாரம் | : | ஒளியின்மை |

*''கர்த்தர்* ***காரிருளிலே*** *இருக்கிறார்''* (1 இரா 8:12)

இது 1 தீமோ 6:16இன் மறுபக்கம் —

*''சேரக்கூடாத ஒளி''*

மாறாக,

*''காரிருள்''*

இவ்விதம் சமநிலைப்படுத்துவது அவசியம்.

இதுவே யோபுவின் அனுபவம்: யோபு 23:2,3,8-10

***''நான்*** *அறியேன், ஆனால்* ***அவர்*** *அறிவார்!''*

இதுதான் புதிய ஏற்பாட்டின் போதனை —

1 பேது 1:6-8 ... *''காணாதிருந்தும் விசுவாசம்''*

சோதனை வேளையில் — *''**பலவித** சோதனைகள்''*

அதாவது, ஒன்றன்பின் ஒன்றாக!

இப்பிரச்னைகளிலிருந்து விடுதலை கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம்; ஆனால் முடிவான *''இரட்சிப்பே''* நிச்சயம் (வச 9)

*''விசுவாசத்தின் பலன் (முடிவு)''*

— நாம் காண்கிறதை நம்பவேண்டியதென்ன? ரோ 8:24,25
நம்புங்கள்: ''தேவன் செய்வதெல்லாம் எனது நன்மைக்கே.''

2 கொரி 4:17 ... **காணப்படாதவைகளை நோக்கி!**
என்னே முரண்பாடு! — ஆனால் இதுவே சத்தியம்!

இதுதான் மெய்யான பாக்கியம் —
அதாவது, காணாமல் விசுவாசிப்பது
(உ-ம்) தோமா (யோ 20:29)

— அற்புதங்கள் அருளப்படுபவர் மீது பொறாமை வேண்டாம்!

- கிறிஸ்தவ வாழ்வு வெளிப்படையான ஆதாரங்களால் அல்ல, உள்ளான உணர்வுகளாலேயே!

லூக் 17:20,21 ... *''இங்கே ... அங்கே ... உங்களுக்குள்''*

- இன்னொரு படி மேல்: விசுவாசம் என்பது வெளிப்படையான ஆதாரங்கள் இல்லையெனினும் நம்புவதற்கும் அப்பாற்பட்டது; அது விளைவுகள் எதுவாயினும் கீழ்ப்படிதலாம்!

- ஓர் எச்சரிப்பு:

விசுவாசத்தைச் சோம்பலுக்குப் போர்வையாக்காதீர் —
(உ-ம்) காலை 6 மணிக்கு *''அன்றன்றுள்ள ஆகாரத்திற்காய்''* ஜெபியுங்கள்;
8 மணிக்கு வேலைக்குச் சென்று சம்பாதியுங்கள்!

என்னத்தை உண்போம் என்று ''கவலை'' வேண்டாம்;
ஆனால் சாப்பாட்டிற்கு ''வேலை'' செய்யவேண்டும்!

(உ-ம்) தெசலோனிக்கேயில் கிறிஸ்தவர்கள் —
முதல் நிருபம் ...இரண்டாம் வருகை அதிகக் குறிப்புகள்
ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதி — 1:10/2:19/3:13/4:17/5:23
இதனால் சிலர் வானத்தையே பார்த்துக்கொண்டு
வேலை செய்வதை நிறுத்திவிட்டனர் போலும்!
இரண்டாம் நிருபம்: *''வேலை செய்யாதவன் சாப்பிடக்கூடாது''* (வச 10) (2 தெச 3:6-12)

## 9. உங்கள் நற்குணங்களைச் சார்ந்திருக்கக்கூடாது.

Do not depend on your goodness.

- லூக்கா 18இலுள்ள பரிசேயன் தேவனை **விசுவாசித்தான்;**
ஜெபித்தலிலும் அவனுக்கு **நம்பிக்கை** இருந்தது;
எனவேதான் ஆலயம் சென்றான்.

இன்னும் அவனிடம் பாராட்டப்படவேண்டியவையும் உண்டு —

☐ *''ஸ்தோத்திரித்து''* ஆரம்பித்தான் (வச 11)
☐ *''தனக்குள்ளே''* ஜெபம்பண்ணினான் (வச 12ஆ)

ஆனால் அவனது பிரச்னை என்னவென்றால்
தனது நற்குணங்களையே *நம்பிக்கொண்டிருந்தான்* —

☐ சுய நீதி
*''... மற்ற பாவிகளைப் போல் இல்லாது ...''* (வச 11)

☐ மார்க்க ஒழுங்குகள்
*''வாரத்தில் இரு முறை உபவாசம்''* (வச 12அ)

☐ ஊழிய ஈடுபாடுகள்
*''தசமபாகம்''* (வச 12ஆ)

நமது நற்குணங்களையே நாம் நம்பியிருக்கும்போது,
நாம் பொதுவாக பிறரது புகழாரத்தை நாடுகிறோம் —

யோ 5:44 *''மனிதரால் வரும் மகிமை
... எப்படி* ***விசுவாசிப்பீர்கள்****?''*

(உ-ம்) பரிசேயர் யோவானை நம்பவில்லை —

லூக் 7:29 ... ஆயக்காரர் தேவ நீதியை நியாயப்படுத்தினர்.
:30 ... பரிசேயரோ தங்களையே நியாயப்படுத்தினர்.

அவர்கள் *தேவ ''ஆலோசனையைத்''* தள்ளிவிடுமளவிற்கு
தங்கள் ''சுய எண்ணங்களாலேயே'' நிறைந்திருந்தார்கள் (வச 30)

- ■ எனவேதான் வேதம் சொல்லுகிறது —
  *''இரட்சிப்பு, **விசுவாசத்தால்,** கிரியைகளாலல்ல''* (எபே 2:8,9)
  இரட்சிப்பு மட்டுமல்ல, ஆவியைப் பெறுதலும் (கலா 3:2)

- ■ நாம் இரண்டையும் வைத்துக்கொள்ள முயற்சிக்கிறோம் —
  அதாவது, தேவனில் விசுவாசம், நம்மீதும் நம்பிக்கை!

  இது நவீன யுகப் போதனை — ''உன் மீது நம்பிக்கையாயிரு!''

  இல்லை, விசுவாசம் தேவன்மீது மட்டுமே இருக்கவேண்டும் —
  நாம் என்ன செய்தாலும் ***''கிறிஸ்து மூலம்தான்''*** (பிலி 4:13)
  *''என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவின் மூலம்''*

  இதன் பொருள் —
  நமது அறிக்கை இப்படியிருக்கவேண்டும்:
  *''உம்மாலன்றி என்னாலாகும் என்று சொல்ல ஒன்றுமில்லை!''*

  எனவேதான் இயேசு சொன்னார் —
  *''நானே திராட்சைச் செடி ... நீங்கள் **கொடிகள்**''* (யோ 5:15)
  துண்டிக்கப்பட்ட கொடி எதுவும் கனி கொடுக்க முடியுமோ?
  இதைவிடச் சிறந்த உதாரணம் வேண்டுமோ?

  இயேசு இப்படிச் **சொல்லவில்லை** —
  ''தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்;
  உங்களிடத்திலும் விசுவாசமாயிருங்கள்!'' (யோ 14:1)

  பவுல்: *''நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல்''* (2 கொரி 1:9)

  இயேசுவும்கூட தமது நற்குணத்தில் நம்பிக்கை வைக்கவில்லை —
  சங் 16:2 ... (இது மேசியாவுக்கடுத்த சங்கீதம் — வச 10)
  *''உம்மையன்றி வேறு மேம்பாடு எனக்கு இல்லை!''*

  எனவேதான் இயேசு அந்த வழக்கறிஞனிடம் சொன்னார் —
  *''என்னை நல்லவர் என்று சொல்லுவானேன்?''* (மத் 19:16,17)

- ■ இச்சத்தியத்தின் நடைமுறைப் பயன்பாடு —
  - ☐ மருந்து சாப்பிடுதல்: ஆசா ராஜா — 2 நாளா 16:12
    தேவன் மருத்துவர்களுக்கு எதிரானவர் அல்ல;
    ஆனால் ஆசா *''தேவனைத் தேடவில்லை''*

மாறாக —

எசேக்கியா ராஜா: 2 இரா 20:5 ... விசுவாசம்

:7 ... சிகிச்சை

Dr. அம்புரோஸ்: "கட்டுப்போடுவது நான்; குணமாக்குவதோ கர்த்தர்!" அதாவது, மருத்துவரிடம் செல்லுமுன் Dr. இயேசுவைக் கூப்பிடுங்கள்.

□ மனிதரின் உதவி

எந்த ராஜாவுக்கும் இராணுவம் அவசியம்;
ஆனாலும் அவன் கர்த்தரையே நம்பியிருக்கவேண்டும்.
(உ-ம்) தாவீது மக்களைக் கணக்கு பார்த்தான்—(2 சாமு 24:10)

தேவனது கண்டிப்பான பார்வை:

*"சபிக்கப்பட்டவன் ... பாக்கியவான்"* (எரே 17:5,7)

□ நமது தினசரித் தேவைகள் —

*"அனுதின ஆகாரம்"*

**தேவனே** ஊற்று;

நம்மை வேலைக்கு **அமர்த்தியவர்** வாய்க்கால்தான்!

அதாவது,

நமது உடல்நலம் தேவனாலேயே ...
நமது கல்வி தேவனது உதவியாலேயே ...
நமது வேலை தேவனிடமிருந்தே ...
நமது திறன்கள் தேவன் அருளியவையே ...

அப்படியானால் பெருமையடித்தல் எங்கே? (1 கொரி 4:7)

## 10. தேவனது கடந்தகாலச் செயல்களை மறந்துவிடக்கூடாது.

Do not forget God's works of the past.

- யேகோவாவின் மகத்துவ நாமங்களில் இயேசு குறிப்பிட்ட ஒன்று —
  மத் 22:31,32

*''ஆபிரகாமின் தேவன் ... ஈசாக்கின் தேவன் ... யாக்கோபின் தேவன்''*
*''**மரித்தோரின்** தேவனல்ல, **ஜீவனுள்ளோரின்** தேவன்''*

இதன் பொருளென்ன?
யாத் 3:13-15இல் விளக்கம் உள்ளது:
(அ) *''நாமம்''* — (வச 15ஆ)
(ஆ) *''அடையாளம்''*— ஞாபகக் குறி (வச 15ஆ)

அதாவது, *''இருக்கிறவராகவே இருக்கிறேன்!''*

ஈசாக்குக்கு —
*''உன் தகப்பனோடு இருந்ததுபோல,*
*உன்னோடும் உன் மகனோடும் ...''*

யாக்கோபுக்கு —
*''உன் பாட்டனோடும், தகப்பனோடும் இருந்ததுபோல*
*உன்னோடு''*

அதாவது,

| | |
|---|---|
| நேற்றைய தேவனே<br>இன்றைய தேவன்;<br>அவரே நாளைய தேவனாகவும் இருப்பார்! | அதாவது,<br>சரித்திரத்தின்<br>தேவன் |

அவர்தான் நேற்று ''இருந்தவராக'' இருக்கிறவர்;
அவர்தான் இன்று ''இருக்கிறவராக'' இருக்கிறவர்;
அவர்தான் நாளை ''இருப்பவராக'' இருக்கிறவர்.

இதுதான் வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள சபைகளுக்குப் பொதுவான வாழ்த்துதலாயிற்று — (வெளி 1:4,8)

- மக்கள் மீது தேவனது வருத்தம் —
  மோசேயின் முன்னெச்சரிப்பு (உபா 7:17-19)

*... நன்றாய் நினைவில் வைத்திடு ... அடையாளங்கள் ... அற்புதங்கள்*
ஆனால் மக்கள் மறந்துபோனார்கள்: சங் 78:41,42
விளைவு? ''தேவனால் கூடும்'' என்பது ''தேவனால் கூடுமோ?''
என்றாயிற்று (வச 19,20)

- நல்ல முன்னுதாரணங்கள்:
  - — யோசுவா மோசேயை ஞாபகப்படுத்திக்கொண்டான் (யோசு 1:2,5)
  - — எலிசா எலியாவை ஞாபகப்படுத்திக்கொண்டான் (2 இரா 2:14)
    *''எலியாவின் தேவன் எங்கே?''*
  - — கோலியாத்தின் முன் தாவீது (1 சாமு 17:34-37)
    *''சிங்கம் ... கரடி ...''*
  - — ஆசியாவில் பவுல் (2 கொரி 1:8-10)
    *''... விடுவித்தார் ... விடுவிக்கிறார் ... விடுவிப்பார் ...''*
    ... காத்தார் ... காக்கிறார் ... காப்பார் ...

எனவேதான், எபிரெயர் 11 நமது விவிலியத்தில் இருக்கிறது!
தேவன் நமது வாழ்வில் செய்தவற்றை மட்டுமல்ல, படைப்பு முதல் அவர் செய்துவருபவற்றையும் நினைவுகூரவேண்டும் —
எபி 11:3 ... முதல் விசுவாச வீரர்கள் — *''நாம்''*தான்!

- இப்படிச் சொல்வதால் கடந்த கால வெற்றிகளைச் சார்ந்து இருக்கவேண்டும் என்பதல்ல; அந்த வெற்றிகளை நமக்குத் தந்த ''தேவனைச்'' சார்ந்திருக்கவேண்டும்.

  தாவீது ... *''என்னை விடுவித்த **கர்த்தர்**''* (1 சாமு 17:37)
  அதுபோல, பவுல் ... *''விடுவித்த **தேவன்**''* ... (2 கொரி 1:9)
  மிஞ்சிய அப்பங்களை எத்தனை கூடைகளில் எடுத்தார்கள்
  என்று சீடர்களுக்கு இயேசு ஞாபகப்படுத்தினார் (மத் 16:8-10)

- கடந்த காலத்தை மறந்துவிடக்கூடாது என்று சொல்லுகையில், ஓர் எச்சரிப்பு:
  அதே அற்புதங்களைத் தேவன் திரும்பவும் செய்வாரென
  எதிர்பார்க்கக்கூடாது —

(உ-ம்) *''விடுவிப்பார் ... விடுவிக்காவிடினும்''* (தானி 3:17,18)

இழந்தவற்றையெல்லாம் யோபுவுக்குத் தேவன் திரும்பக் கொடுக்கும் முன்பே அவனது அறிக்கை:

*''தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் என அறிந்திருக்கிறேன்''*
(யோபு 42:2)

- **முடிவாக —**

விசுவாசம் என்னும் தலைப்பில் அநேக அனுபவ ரீதியான திருத்தங்களைப் பெற்றுக்கொண்டோம்.

திறந்த மனதோடு வேதாகமத்தைத் தொடர்ந்து வாசியுங்கள்.

இன்னொரு அறிவுரை:

யூதா 3 ... ***''விசுவாசத்திற்காய்த்*** *தைரியமாய்ப் போராடுங்கள்''*
20 ... *''பரிசுத்த* ***விசுவாசத்தின்*** *மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்''*

இதைச் செய்யத் திரியேக தேவன் நமக்கு உதவுகிறார் —
*பரிசுத்த ஆவியானவர் ... தேவன் ... இயேசு கிறிஸ்து ...* (வச 20,21)

## விசுவாசம், வல்ல விசுவாசம்!

*"Begone, unbelief; My Saviour is near"*

*போய்விடு அவிசுவாசமே; இரட்சகர் என்னருகில்,
என்னை விடுவிக்கவே நிற்கிறார்.
போராடி ஜெபிப்பேன், அவர் நிறைவேற்றுவார்;
கிறிஸ்து என் படகிலென்றால், புயலிலும் புன்னகை!*

*அன்று அவரன்பு என்னைக் காப்பாற்றியதே;
இன்று மூழ்கிட விடுவாரோ?
அவரையே நம்பிடப் போதித்து நடத்தினாரே;
இவ்வளவு தூரம் வந்தபின் வெட்கிட விடுவாரோ?*

*நெருக்கமோ, தேவையோ, கலங்குவதேன்?
சோதனையோ, வேதனையோ, நின்றிடப் போதித்தாரே!
இரட்சிப்பின் சுதந்திரர்க்குப் பாடுகளே பாதையாம் —
என்று நான் அவரின் வார்த்தையால் அறிவேன்!*

*இதயம் ஏற்றுக்கொள்ளா கசப்பான பாத்திரம்
இந்தப் பாவிகட்காய் முழுவதும் அருந்திட்டாரே!
அவர் பாதை எனதிலும் கடுமை, கொடுமை;
அவர் பாடுபட்டிட, நான் சொகுசு நாடுவேனோ?*

*என்ன நேர்ந்தாலும் எனது நன்மைக்குத்தானே?
கசப்பு இனிப்பாகும், மருந்து உணவாகும்;
இப்போது வேதனைதான்; நீடிக்காது எப்போதுமே;
ஜெய கிறிஸ்துவின் பாடல் எனதே!*

*—ஜான் நியூட்டன், 1725-1807*

3

# ஜெபம்

# PRAYER

# 3

## எப்படி ஜெபிக்கக்கூடாது?

HOW NOT TO PRAY

**1**

கடவுளைக் கட்டாயப்படுத்தக்கூடாது.

**2**

பிசாசைக் குற்றம் சாட்டக்கூடாது

**3**

பரம பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.

**4**

நடுவர்களைத் தேடக்கூடாது.

**5**

இருதயத்தில் பகை இருக்கக்கூடாது.

**6**

தன்னலமாய் இருக்கக்கூடாது.

**7**

மண்ணுலகச் சிந்தையால் நிறைந்திருக்கக்கூடாது.

**8**

அதிகமாய்ப் பேசக்கூடாது.

**9**

இயல்பற்ற விதத்தில் செயல்படக்கூடாது.

**10**

ஜெபிப்பதைக் குறித்துப் பெருமைப்படக்கூடாது.

# 3 எப்படி ஜெபிக்கக்கூடாது?

## அறிமுகவுரை

- சவுலின் மனமாற்றம் குறித்துக் கர்த்தர் அனனியாவுக்குச் சுட்டிக்காட்டிய **முதல்** அடையாளம் —

  அப் 9:11 ... *''இதோ, அவன் ஜெபித்துக்கொண்டிருக்கிறான்''*

  மனிதரின் இரட்சிப்புக்காக நாம் செய்யவேண்டிய **முதல்** கடமை அவர்களுக்காக ஜெபிப்பதே —

  1 தீமோ 2:1 ...*''பிரதானமாக... எல்லா மனிதருக்காக... ஜெபங்கள்''*

  மிஷனரிப் பணியில் **முதல்** பொறுப்பு —

  மத் 9:37,38 ... *''ஆதலால் ... வேலையாட்களை அனுப்ப வேண்டுங்கள்''*

- இயேசு தமது ஊழியத்தை ஜெபத்திலேயே துவக்கினார் —

  லூக் 3:21 ... *''இயேசு ... ஞானஸ்நானம் பெற்று ... ஜெபம்''*

  ஜெபத்திலேயே அதைத் தொடர்ந்தார் —

  மாற் 1:35; லூக் 5:16 ... *''அதிகாலை ... வனாந்தரம் ... ஜெபம்''*

  விண்ணகத்திலும் அவர் அதைத் தொடர்கிறார் —

  எபி 7:25 ... *''வேண்டுதல் செய்ய ... உயிரோடிருக்கிறார்''*

- ஜெபத்தில் 10 நாட்கள் தரித்திருந்ததைத் தொடர்ந்துதான் ஆதிச் சபை பிறந்தது —

  அப் 1:14

  ஜெபச் சூழலிலேயே அது வளர்ந்து பெருகியது.

  அப் 3:1; 4:24; 6:4; 12:5; 16:13; 20:36

- ஜெபத்திற்குப் பதிலளிக்கும் தேவன் நமக்கிருப்பதுதான் மாபெரும் சிலாக்கியங்களில் ஒன்று —

  உபா 4:7 ... *''எவ்வளவு பெரிய மக்களினம்!''*

- *ஜெபமே ஆன்மாவின் உண்மை நாட்டம்,*
  *வாய்விட்டுரைப்பது அல்லது வெளிச்சொல்லாதது ...*
  *ஜெபமே பகட்டில்லாத பேச்சு நடை,*
  *மழலை உதடும் அதனை முயற்சிக்கலாம் ...*
  *ஜெபமே கிறிஸ்தவனின் உயிர் மூச்சு,*
  *கிறிஸ்தவனின் சுதேசக் காற்று!*

  — ஜேம்ஸ் மாண்ட்கோமெரி (1771-1854)

- ஜெபமின்மை ஒரு பாவம் —
  1 சாமு 12:23 ... *சாமுவேலின் வாக்குறுதி*

- அதிமுக்கியமான இந்த ஆன்மீகப் பக்திமுயற்சிக்குள் திருவசனத்திற்குப் புறம்பான அநேக வழக்கங்கள் நுழைந்துவிட்டன.

  எனவேதான் இந்தப் படிப்பு —
  *"எப்படி ஜெபிக்கக்**கூடாது**?"*

## எப்படி ஜெபிக்கக்கூடாது?

### 1. கடவுளைக் கட்டாயப்படுத்தக்கூடாது.

Do not force God.

- பிரபலமானதொரு நூதன உபதேசம் —

  ஜெபத்தில் கடவுளுக்குக் ''கட்டளையிடுங்கள்!''

  அவர்கள் காட்டும் மேற்கோள்: ஏசா 45:11

  *''என் கரங்களின் கிரியைகளைக் குறித்து எனக்குக் கட்டளையிடுங்கள்''*

  இது ஒரு மொழிபெயர்ப்புப் பிழை:

  ஆங்கிலம் KJV ✗
  NKJV ✗
  NIV ✓

  *''என் கரங்களின் செயல்களைக் குறித்து எனக்குக் கட்டளையிடுவீர்களோ?''* (NIV)

  இவ்வசனப்பகுதியின் சூழமைவைப் பாருங்கள்:

  வச 9 ... *குயவனிடம் களிமண் ...?*

  வச 10 ... *தகப்பன் அல்லது தாயிடம் மகன் ...?*

  வச 12,13 ... *''நான்'' பூமியை உண்டுபண்ணி ... மனிதனைப் படைத்தேன்*

  *''என்'' கரங்கள் வானங்களை விரித்தன*

  படைத்தவர் vs. படைப்பு

- இயேசுவானவர் தேவனுடைய ஒரே பேறான குமாரனாயிருந்தும், ஒருமுறைகூட பிதாவுக்குக் ''கட்டளை'' இட்டதில்லை:

  — சங் 2:8 ... ***''கேளும்''*** என்றே அவருக்குச் சொல்லப்பட்டது.

  — எபி 5:7,8 ... *அவர் ''கண்ணீரோடு''* **கதறி** *வேண்டுதல் செய்து, தமது பக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்*

  — மத் 26:39,42 ... கெத்செமனேயில்

  முதல் முறை ... *என் சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே!*

  அடுத்த முறை: *உமது சித்தத்தின்படியே ஆகட்டும்!*

- கடவுளது ''பூரண'' சித்தமும் ''அனுமதி'' சித்தமும் —
(Perfect will of God vs. Permisssive will of God)

(உ-ம்) ஒரு சிறுவன் நெரிசலான சாலையைக் கடக்கவேண்டுமென்று தகப்பனை நச்சரிக்கிறான். முடிவில், அரை மனதோடு, அவர், ''சரி, போ'' என்கிறார்.

☐ சங் 106:15,
*''அவர்கள் கேட்டதை ஆண்டவர் கொடுத்தார்,*
*அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்''*

☐ 1 சாமு 8:4-9,
மக்கள் சாமுவேலிடம்: *''மற்ற மக்களுக்குள் இருக்கிறபடி எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் ...''*
சாமுவேல்: ... விசனப்பட்டான் ... ஜெபித்தான் ...
கடவுள் சாமுவேலிடம்: *''அவர்கள் உன்னையல்ல, என்னையே தள்ளினார்கள் ... ஆனால் அந்த ராஜா காலப்போக்கில் எவ்விதம் நடந்துகொள்வான் என்று எச்சரித்து ராஜாவை ஏற்படுத்து''*

- அப்படியானால்,
நமது ஜெபங்களுக்கெல்லாம் பதில் எதிர்பார்க்கக்கூடாதா?
அப்படியல்ல, கடவுள் நிச்சயம் பதில் **கொடுப்பார்.**

ஆனால் பதில்கள்: சில சமயங்களில் : **ஆம்!**
பல சமயங்களில் : **இல்லை!**
அடிக்கடி : **காத்திரு!**
பெரும்பாலும் : **அமைதி!**

தேறின கிறிஸ்தவர்களுக்கு இது புரியும்!

தகப்பனுக்குத் தெரியும்: **எப்பொழுது** கொடுக்கவேண்டும்?
**எதைக்** கொடுக்கவேண்டும்?
**எந்தக்** குழந்தைக்குக் கொடுக்கவேண்டும்?

- ஜெபமானது கடவுளை மாற்ற அல்ல,
அவரது திட்டத்திற்கு ஏற்ப நம்மை மாற்றவே.
ஜெபிக்கும்போது சோர்ந்துவிடக்கூடாது என்று போதிக்கவே
அந்த அநீதியுள்ள நீதிபதியின் உவமை (லூக் 18:1-8)

அந்த விதவையின் நச்சரிப்பைத் தவிர்க்கவே அந்த நீதிபதி
''சலிப்புடன்'' அவளுக்குப் பதில் கொடுத்தான்;
கடவுளோ ''சந்தோஷத்துடன்'' ஜெபத்திற்குப் பதில் தருகிறார்.

■ பவுலுக்கு, *''மாம்சத்தில் ஒரு முள்''* —

அந்த முள் வெளியேறிட அவன் **கட்டளை** கொடுக்கவில்லை ...
அந்த முள்ளை எடுத்துப்போடக் கடவுளுக்கும் **கட்டளை** கொடுக்கவில்லை
அவன் கர்த்தரிடம் பணிவாய் *''வேண்டிக்கொண்டான்''* (2 கொரி 12:8)
ஆண்டவரின் பதிலைப் பண்பாய் ''ஏற்றுக்கொண்டான்''
*''என் **கிருபை** போதும்''*
*''பலவீனத்தில் என் **பலம்** விளங்கும்''*

■ கடவுள் நம்மைப் படைத்தவர் —
படைப்பு அவருக்குக் கட்டளையிட முடியாது.

கடவுள் நமது ஆண்டவர்/தலைவர் —
பணியாளரும் சீடரும் அவருக்குக் கட்டளையிட முடியாது.

கடவுள் நமது பிதாவானவர் —
அவர் கேட்பது: *''நான் உன் பிதாவானால் என் கனம் எங்கே?''*
(மல் 1:6) *''மகன் தகப்பனைக் கனம்பண்ணுகிறான்''*
*''பணியாளன் எஜமானைக் கனம்பண்ணுகிறான்''*
*''நான் எஜமானானால் பயபக்தி எங்கே?''*

■ ஜெபிக்கும்போது —

தேவனிடம் கேளுங்கள்,
அவர் திருமுன் மன்றாடுங்கள்,
அவரிடத்தில் கதறுங்கள்,
அவருக்குக் காத்திருங்கள்,
அவருக்கு இசைந்து கொடுங்கள்,
ஒருபோதும் கட்டளையிடாதீர்கள்!

ஜெபத்தில் கடவுளுக்குக் கட்டளையிடுவது கிறிஸ்துவின் அல்லது அப்போஸ்தலரின் மாதிரிக்கும் உபதேசங்களுக்கும் இசைவானதல்ல.

- துன்பத்திலும் இக்கட்டிலும் இருந்த வேளைகளில் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களினால் சங்கீதப் புத்தகம் நிறைந்திருக்கிறது. அவையெல்லாவற்றிலும் ஆண்டவருக்குமுன் தாழ்மையையும், இசைவையும் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | 3:2,4,5 | 65:2,5 | 118:5,21 |
| | 20:5,6 | 81:7 | 119:25,26 |
| | 22:4,5 | 91:15 | 120:1,2 |
| | 34:4 | 99:6,7 | |

- உங்களை உறுத்திக்கொண்டிருப்பது எது? பதில் பெறாத ஜெபமா?
  *"உமது சித்தமே ஆகட்டும்"* என்று கடவுளிடம் சொல்லுங்கள்.
  இது விசுவாசக் குறைச்சலல்ல,

  மாறாக,

  எனக்கு உசிதமானது எது என்று கடவுள் அறிவார்
  என்ற நம்பிக்கையை இது வெளிப்படுத்துகிறது!

- Adelaide A. Pollard (1862-1934) என்பவரின் பாடல்:

  *Have Thine own way, Lord!*

  *உம் சித்தம், தேவா, ஆகட்டுமே!*
  *நான் ஓர் மண்பாண்டம் உம் கரத்தில்;*
  *உம் பாதத்தண்டை காத்திருக்கும்*
  *என்னை உம் சித்தப்படி மாற்றும்!*

## 2. பிசாசைக் குற்றம் சாட்டக்கூடாது.

Do not accuse Satan.

- இரண்டு ஓரக் கொள்கைகள்:
  - — பிசாசே கிடையாது; பிசாசின் தாக்கமும் கிடையாது என்பது.
  - — நமது எல்லாத் தோல்விகளுக்கும் பிசாசே காரணம் என்பது.

- நமது பாவங்களுக்கு **நாமே** பொறுப்பாளிகள் —

| | | |
|---|---|---|
| யாக் 1:14-16 ... | *சுய இச்சை* | (படி 1) |
| | *சோதனைகள்* | (படி 2) |
| | *பாவம்* | (படி 3) |
| | *மரணம்* | (படி 4) |

இயேசுவைச் சோதித்ததுபோல சாத்தான் நம்மைச் ''சோதிக்க''
மட்டும்தான் முடியும்;
நமது ஒத்துழைப்பின்றி நம்மைத் ''தோற்கடிக்க'' முடியாது.

ஆதாம்-ஏவாள் தோல்விக்குப் பிசாசு மட்டுமே பொறுப்பாளியென்றால்
அவர்கள் மீது கடவுள் சாபத்தைக் கூறியிருக்கவேண்டாமே!
சாபங்கள்: *''வருத்தம், வியர்வை, பிரசவ வேதனை''* (ஆதி 3:16-19)

— ஒரு கொலைகாரன் ''கொலையின் ஆவியின்''மீது
தனது குற்றத்தைச் சுமத்திவிட முடியாது.

— ஒரு விபச்சாரக்காரன் ''இச்சையின் ஆவியின்''மீது
தனது குற்றத்தைச் சுமத்திவிட முடியாது.

— ஒரு திருடன் ''பொருளாசையின் ஆவியின்''மீது
தனது குற்றத்தைச் சுமத்திவிட முடியாது.

இயேசு போதித்தது: *''**எங்கள்** பாவங்களை எங்களுக்கு மன்னியும்''*

- இன்னொரு தவறான பழக்கம் —
''ஜெபத்தில் சாத்தானைக் கட்டுதல்''

மேற்கோள் காட்டப்படும் வேத வாக்கியம் —

மத் 16:19 ... *"நீங்கள் பூமியிலே கட்டுவது ... அது பரலோகத்திலும்"*

இது பூலோகத்தில் நாம் அப்பியாசிக்கக்கூடிய
நமது பரலோக அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது!
அப்படியல்லவென்றால்,
பிசாசு பரலோகத்தில் இருக்கிறானா என்ன?

அதே போன்று மத் 18:17,18

— பொருள்: மன்னிக்க அல்லது தண்டனைத் தீர்ப்பளிக்க

"கட்டுதல், கட்டவிழ்த்தல்" — நீதிமன்றப் பயன்பாட்டுச் சொற்கள்
**மத் 16** — நற்செய்திப்பணி பற்றியது — சபைக்கு வெளியிருப்போர்

*"என்னை யார் என்று சொல்லுகிறார்கள்?"*

(யூதருக்கும் புறவினத்தாருக்கும் பேதுரு வாசல்களைத் திறந்தான்.)

**மத் 18** — சபையின் ஒழுங்குமுறைகள் பற்றியது — உள்ளிருப்போர்

■ நாம் செய்யக்கூடியதெல்லாம் —

பிசாசைக் *கடிந்துகொள்ளலாம்* (மத் 17:18)
பிசாசை *விரட்டலாம்* (மத் 10:1,8)
பிசாசுக்கு *இடங்கொடுக்க மறுக்கலாம்* (எபே 4:27)
பிசாசுக்கு *எதிர்த்து நிற்கலாம்* (யாக் 4:7)
பிசாசுக்கு எதிராக *விழித்திருக்கலாம்* (1 பேது 5:8)
அவனைக் கைது செய்யவோ முடியாது!

திருவசன வரம்புகளை மீறக்கூடாது.

இன்று பிசாசு விடுதலையாய்த் திரியவேண்டுமென்பதே தேவ திட்டம்.

அதிகபட்சம் இயேசு சொன்னது:

*"எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே"* (மத் 4:10)

பிசாசு கட்டப்படுவது எதிர்காலத்தில் நிகழவிருப்பது (வெளி 20:1-3)

1000 ஆண்டு ஆளுகைக்கு முன்னும் பின்னும் அவன் விடுதலையோடு இருக்கவேண்டும் (வச 3இ)

பிசாசை நீங்கள் இப்போது கட்டிவிட்டால்,
நீங்கள் அவனைத் துரத்திவிட முடியாது;
நீங்கள் அவனைத் தூக்கிகொண்டுதான் போகவேண்டும்!

■ ஜெபத்தில் நாம் ஆண்டவரோடுதான் பேசுகிறோம், பிசாசிடம் அல்ல.
இயேசு தமது கெத்செமனே அனுபவத்தை,
*''அந்தகாரத்தின் அதிகாரத்தின் வேளை''* என்றழைத்தார் (லூக் 22:53)
அவ்வேளையில் அவர் செய்தது, ''பிதாவை நோக்கிய'' ஜெபம் மட்டுமே.

ஒரு கோணத்தில் பார்த்தால்,
ஏற்கனவே இயேசு சிலுவையில் *''பலவானைக் கட்டிவிட்டார்.''*
''பலவானை'' ''அவனிலும் ''பலவானரான'' இயேசு கட்டிவிட்டார் (லூக் 11:20-22)

அவர் அவனைத் தோற்கடித்தார் ... அவனது ஆயுதங்களை *''உரிந்து''கொண்டார்* (கொலோ 2:15)

இந்த மகத்தான வெற்றியால்தான், நற்செய்திப் பணி மூலம்
நாம் பிசாசின் ஆதிக்கத்திலிருந்து ஆத்துமாக்களைப் பிடுங்க முடிகிறது.

■ பிசாசைப் பாதாளத்திற்கு அனுப்பவும் முயற்சிக்க வேண்டாம் —
அவன் இங்கேதான் இருக்கவேண்டும்.

பிசாசை எரித்துவிடவும் முயற்சிக்க வேண்டாம் —
கிறிஸ்து திரும்ப வரும்போது, *''அவரது வாயின் சுவாசத்தினால்''* அவனை எரித்துவிடுவார் (2 தெச 2:8)

பிசாசைத் தூஷிக்கவும் (சபிக்கவும்) வேண்டாம் —
மிகாவேல்கூட அப்படிச் செய்யத் துணியவில்லை (யூதா 8-10)

■ தானியேலின் ஜெபத்திற்குப் பதில் தாமதமானது; ஆனால் அவன் தொடர்ந்து ஜெபித்துக் காத்திருந்தான் (தானி 9:19). தேவதூதன் மூலம் கடவுள் பெர்சியா மன்னனுடன் இடைபட்டார். ''பெர்சியா ராஜாவே, கீழே இறங்கி வா'' என்று தானியேல் ஜெபிக்கவில்லை!

■ ஜெபத்தில் பிசாசு அல்ல, கடவுள் நினைவாகவே இருங்கள்.
அதாவது, திறந்திருக்கும் கிருபாசனம் (எபி 4:16)
கிறிஸ்துவின் இரத்தம் (எபி 10:19-22)
பரலோகில் பரிந்து பேசுகிறவர் (1 யோ 2:1)

*''உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்''*

■ ஆன்மீகவாதியாக, அதே வேளையில், திருமறைவாதியாகவும் இருக்கவேண்டும்!

(பார்க்க: பக்கங்கள் 338-340, 714-716)

## 3. பரம பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.
Do not forget the Father.

- யாரை நோக்கி ஜெபிக்கவேண்டுமெனச் சரியாய்ப் போதிக்கப்படவில்லை.

  நவீனக் கிறிஸ்தவர் பலர் "இயேசுவையே" நோக்கி ஜெபிக்கின்றனர்.

  ஏனெனில்,

  அப்படித்தான் பிரசங்கிமார் பலரும் ஜெபிக்கின்றனர்!

  ஆனால் "பிதாவை" நோக்கி ஜெபிக்கவே விவிலியம் நெடுகவே திட்டவட்டமாய்ப் போதிக்கிறது.

- இயேசு போதித்தது:

  — அவரது மாதிரி ஜெபம் (மத் 6:6,9)
  *"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே ..."*

  — புதிய யுகம்
  *"அன்று என்னிடம் ஒன்றும் கேட்கமாட்டீர்கள்"* (யோ 16:23,24)
  நேரடியாகப் பிதாவை நோக்கி ...
  ஏனெனில், *"பிதா தாமே உங்களை நேசிக்கிறார்"* (வச 25-27)

  — உயிர்த்தெழுதலின் ஓர் ஒப்பற்ற சிலாக்கியம்:
  *"என் பிதா ... உங்கள் பிதா ... என் தேவன் ... உங்கள் தேவன்"* (யோ 20:17)

  — ஆவியினால் முழுக்குபவர் கிறிஸ்துவாக இருந்தாலும்,
  பரிசுத்த ஆவிக்காக நாம் பிதாவையே கேட்கவேண்டும் (லூக் 11:13)

- அப்போஸ்தலர், சீடர்களின் போதனையும் பழக்கங்களும்:

  — துன்புறுத்தலைத் தொடர்ந்த ஜெபம் (அப் 4:24-30)
  *"தேவனை **நோக்கிச்** சத்தமிட்டு ... உமது பரிசுத்த பிள்ளை ..."*

  — எபே 2:18 ... *"**பிதாவிடம்** ... இயேசுவின் மூலமாய்"*
  3:15 ... *"நான் பிதாவை **நோக்கி** முழங்கால்படியிட்டு"*

— ரோ 8:15 ... *ஆவியானவரால் ... அப்பா, பிதாவே ...*

— கிறிஸ்து **நமக்காகப்** பிதாவின் வலது பக்கம் அமர்ந்திருக்கிறார்

(அ) பரிதபிக்கும் பிரதான ஆசாரியராய் (எபி 4:14-16)
(ஆ) பரிந்து பேசுகிறவராய் (1 யோ 2:1)
(இ) நமக்காய் மன்றாடுபவராய் (எபி 7:25)
அவர் ''பிதாவை நோக்கி'' வேண்டுகிறார்.

■ குமாரனின் பரிந்து பேசும் உதவியுடன் நாம் ''பிதாவிடம்'' பாவங்களை அறிக்கை செய்கிறோம் —

1 யோ 2:1
1:7,9
எபி 2:17,18

■ இவ்வாறாக,

திரித்துவத்தை நாம் நன்கு விளங்கிக்கொள்வது திருமறையின் முன்மாதிரிகளை ஜெபத்தில் பின்பற்றும்போதுதான்.

■ அப்படியானால்,

நாம் ''இயேசுவை நோக்கி'' ஜெபிக்கவே கூடாதா?
ஜெபிக்கலாம்; ஆனால் அது விதிவிலக்குதான் —

☐ ஸ்தேவானின் ஜெபம்:

*''இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்''* (அப் 7:59)

— ஓர் அசாதாரண அனுபவம்: *''இயேசு நிற்பதைக் கண்டு ...''*

— மரண வேளையின் ஒப்புவிப்பு வார்த்தைகள், அவ்வளவுதான்

☐ வெளி 22:20 ... *''கர்த்தராகிய இயேசுவே, வாரும்!''*

— இது வழக்கமான ஜெபத்திற்கு உதாரணமல்ல;
மாறாக, ஏங்கும் இருதயங்களின் அழைப்பு!

■ யோவான் 14:14இல் சொல்லியிருப்பது?

(அ) மொழிபெயர்ப்பு — *''என் நாமத்தில் கேளுங்கள்''*
(ஆ) சூழமைவு (வச 13) — இது வச 14க்கு முரண்டபட முடியாது.
நீங்கள் என்னிடமே என் நாமத்தில்
கேட்க முடியாதே!!!

குழந்தைகளும் கிறிஸ்தவரல்லாதோரும் —

ஜெபிக்கக் கற்றுக்கொள்ளும்போது,
"இயேசுவே" என்று துவங்குவது சரியாக இருக்கலாம்.

குழந்தைப் பருவத்தை விட்டு நாம் வளரவேண்டும் —
*"நான் குழந்தையாயிருந்தபோது ..."* (1 கொரி 13:11)

தேறின உபதேச அறிவு தேவை.
திருத்திக்கொள்ள உத்தம முயற்சி எடுங்கள்.

- தெய்வீக ஒழுங்கமைவு —

பிதாவானவர், குமாரனானவர், ஆவியானவர் இம்மூவரும் சரிசமமானவர்கள்; ஆனால் தங்களுக்குள் ஒரு வரிசையைக் கடைப்பிடிக்கிறார்கள்!

இயேசு: *"என் பிதா என்னிலும் பெரியவர்"* (யோ 14:28இ)
ஆவியானவரும் *"தமது சுயமாய்ப்"* பேசமாட்டார் (யோ 16:13)

இறுதிக் கட்டம் —

1 கொரி 15:24,28
*"குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும்*
*கீழ்ப்படுத்தினவருக்கு (பிதாவானவர்) கீழ்ப்பட்டிருப்பார்"*

(பார்க்க: பக்கங்கள் 160-161)

## 4. நடுவர்களைத் தேடக்கூடாது.
Do not seek mediators.

- எங்கும் பிரசங்கிமார்களின் முழக்கமெல்லாம் —
  "உங்கள் ஜெபத் தேவைகளை உடனே எங்களுக்கு அனுப்புங்கள்!"

  ஏதேனும் உதவி தேடி அங்கலாய்ப்பிலிருக்கும் மக்கள் வேதப் பாணியில் இவ்விதப் பரிகாரம் சரியா என அலசிப் பார்க்க முயலுவதில்லை.

- இதைக் குறித்து பைபிள் போதிப்பது என்ன?

(அ) ப.ஏ./பு.ஏ. ... **அனைவரும்** ஆசாரியர்கள் (1 பேது 2:5,9)
இருமுறை சொல்லப்பட்டுள்ளது.
"குருக்கள்" "குருக்களல்லாதோர்" என
இரு வகுப்பினர் இப்போது கிடையாது.

(உ-ம்) அப் 2 ... *மாம்சமான யாவர் மீதும்*
*குமாரர் ... குமாரத்திகள்*
*வாலிபர் ... மூப்பர்*
*உதவிக்காரர் ... உதவிக்காரிகள்*

வயது அல்லது வகை வித்தியாசமில்லை!
புராட்டஸ்டன்ட் சீர்திருத்தம்: "அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்" எனும் சத்தியம் திரும்ப நிலைநாட்டப்படவே.

(ஆ) பிள்ளைகள் தந்தையிடம் கேட்டல் —
மத் 7:7-11 ... *"கேளுங்கள் ... தேடுங்கள் ... தட்டுங்கள்"*
*"கேட்கிற ... தேடுகிற ... தட்டுகிற எவனும்"*
வச 11 ... *"பொல்லாத நீங்கள் ... **அதிக நிச்சயமல்லவா?"***

(இ) முதல் தேற்றரவாளர் (உதவியாளர்) — ரோ 8:34
பரலோகில் நமக்காக (எபி 7:24-26)
கிருபாசனம் (எபி 4:15,16)
*"தைரியமாக"*...தயக்கமோ, சந்தேகமோ இல்லாமல்.

இரண்டாம் தேற்றரவாளர் (உதவியாளர்) — ரோ 8:26,27
பூவுலகில் நம்மோடு
மூன்றாம் தேற்றரவாளர் (உதவியாளர்) தேவையோ?

- ரோமன் கத்தோலிக்கர் இயேசுவை நமக்குக் கொண்டுவந்த ''மரியாளை'' நடுவராகப் பயன்படுத்துகின்றனர்;

புராட்டஸ்டன்டுகள் நம்மை இயேசுவிடம் கொண்டுவரும் ''பிரசங்கிமாரை'' நடுவர்களாகப் பயன்படுத்துகின்றனர்.

இரு திறத்தாரும் தவறு.

- கடவுள் ''உங்கள்'' ஜெபத்திற்குப் பதில் தராவிட்டால், உங்களுக்காக ஒருவரும் சிபாரிசு செய்திட முடியாது!

வேதாகம ஒழுங்குமுறை:

யாக் 5:13-15...*''ஒருவன் துன்பப்பட்டால் ... **அவன்** ஜெபிக்கக்கடவன்''*

ஜெபிக்க முடியாத அளவு நீங்கள் பலவீனப்பட்டிருந்தால், உங்கள் சபை மூப்பரை வரவழைத்து ஜெபியுங்கள்.

*உங்கள் பாவங்களை அறிக்கை செய்யுங்கள் ...*
*''ஒருவருக்காக ஒருவர்'' ஜெபம்பண்ணுங்கள்.*

தற்பரிசோதனை கட்டாயம் —

புல 3:1,8,44 ... பதில் பெறாத ஜெபங்கள் ...
:28,29,38-41 ... *ஆராய்ந்து பார்த்து ... திரும்புவோம்*

இந்தப் படிகளைத் தவிர்த்திட வேண்டாம்.
குறுக்கு வழிகளைத் தேடவேண்டாம்.

- ''ஜெப எண்ணெய்'' குறித்து எச்சரிக்கை —

நாம் ''எண்ணெய்க்காக'' ஜெபிக்கக்கூடாது;
மாறாக, மனிதன்மீது எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபிக்கவேண்டும்.

''ஆசீர்வதிக்கப்பட்ட துணி'' — மக்கள்தான் எடுத்தார்கள்;
பவுல் அப்படி எதையும் ஆசீர்வதித்து அனுப்பவில்லை (அப் 19:11.12)

''புனித நீர்'' — பெதஸ்தா — இது வெறுமனே ஓர் யூத நம்பிக்கை.

மற்ற பிணியாளிகள் முண்டியடித்துக் குளத்திற்குள் இறங்கும்போது அவன்மீது ஒரு சில சொட்டுகளாவது தெளிக்காமலா இருந்திருக்கும்? இயேசுவும் அவன் குளத்திற்குள் இறங்கவா உதவினார்?

கடவுள் இன்று **பொருட்களை** அபிஷேகிப்பதோ,
புனிதப்படுத்துவதோ இல்லை.

அபிஷேகிக்கப்பட்ட பொருட்கள், புனிதத் தலங்கள்
என்பதெல்லாம் சிலைவணக்கம்.

இவையெல்லாம் கத்தோலிக்கத்தின் மூட நம்பிக்கைகளில்
(இருண்ட காலங்கள்) மிஞ்சியவை.

கிறிஸ்தவர்கள் ''திருமறைக்குத் திரும்பும்போதுதான்''
மார்க்கமானது வியாபாரமயமாக்கல் ஒழியும்!

நோயுற்றோருக்காகவும் பாடனுபவிப்போருக்காகவும் ஜெபித்தல்
இன்று கொள்ளை லாப வியாபாரமாகிவிட்டது.

■ ஒவ்வொரு பிரசங்கியாருக்கும் தனது சொந்தப் பிரச்னைகளே
நிறையவுண்டு!

''உங்களுக்காகத் தினமும் கண்ணீரோடு ஜெபிக்கிறேன்''
என்பன போன்ற வாக்குறுதிகளையெல்லாம் நம்பவேண்டாம்!

45 ஆண்டுகளுக்கு மேல் ஒரு பிரசங்கியாராயிருக்கும்
நான் கொடுக்கும் அறிவுரை:

''பிரசங்கிமாரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!''

## 5. இருதயத்தில் பகை இருக்கக்கூடாது.

Do not harbour hatred in your heart.

- ஜெபிக்கக் கற்றுக்கொடுத்த உடனே,
  இயேசுவானவர் ''மன்னிப்பைக்'' குறித்துப் போதித்தார் —

  மத் 6:9-13 — முன்மாதிரி ஜெபம்

  *ஆதலால், ''மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் ...''* வச 14,15

  ஏழு வேண்டல்களில், ''மன்னிப்பை'' மட்டும்,
  அதாவது, 5ஆம் வேண்டலை மட்டும், எடுத்து விளக்கினார்.

- இந்நாட்களில் ''விசுவாசம்'' ஓங்கிப் பேசப்படுகிறது,
  ''மன்னித்தல்'' பற்றிப் பேச்சே இல்லை —

  ஆனால் வேதம் போதிப்பது:

  மாற் 11:22-24 ... அத்தி மரத்தைச் சபித்ததைத் தொடர்ந்து ...
  *''தேவனிடத்தில் விசுவாசம் ...*
  *இந்த மலையைப் பார்த்து ... சமுத்திரம் ...*
  *விசுவாசியுங்கள்... பெற்றுக்கொள்வோம்*

  **அத்துடன்,** வச 25 — *''நீங்கள் நின்று ஜெபம்பண்ணும் போதெல்லாம்''* ***மன்னியுங்கள்.***

  நாணயத்தின் இரு பக்கங்கள்:
  *''எவையெல்லாம் ... எப்பொழுதெல்லாம்''*

  ஜெபிக்கும் வேளைகளிலெல்லாம் இதைச் சோதித்துப் பாருங்கள்.

  — எந்நேரத்திலும்
  — எதிலும்
  — எவருக்கேனும்
  வச 25

- கடவுளின் செவிகளை அடைக்கும் பாவங்கள் —

  ஏசா 59:1-4 ... *பொய் ... தாறுமாறுகள் ... நியாயக்கேடுகள்*
  — சகவுறவுப் பிரச்னைகள்
  *''உதடுகள் ... நாவு ... பேச்சு''* (வச 3,4)

ஆம், குறிப்பாக நமது **வார்த்தைகள்** —

நாம் மனிதரோடு பேசுவதும், ஆண்டவரோடு பேசுவதும்
ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

யாக் 3:8-10 ... *தேவனைத் துதிப்பது ... மனிதனைச் சபிப்பது... கூடாது ...*

— அவதூறான வார்த்தைகள்
— மூர்க்கத்தனமான வார்த்தைகள்
— குற்றப்படுத்தும் வார்த்தைகள்
— திமிரான வார்த்தைகள்

யாக் 5:16அ ... *''உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர்
அறிக்கையிட்டு ...''*

— அப்பொழுதுதான், ஜெபம் *''மிகவும் பலனுள்ளதாயிருக்கும்''*
(வச 16அ)

■ ஒப்புரவாகுதலுக்கு ஓர் அழைப்பு!

காரியங்களைச் சரி செய்ய ஓர் அழைப்பு!

ஒரு பட்டியல் தயாரியுங்கள்:
''மன்னிக்கவும்,'' ''மன்னிப்பு கோரவும்''

இல்லாவிடில் ''சுத்த மனச்சாட்சி'' கிட்டாது —
1 யோ 3:20-23

*''இருதயமே ... தீர்க்குமானால் ... கற்பனைகள் ...
வேண்டிக்கொள்ளுங்கள்''*

*''இதுவே''* அவருடைய கற்பனை (வச 23ஆ)

*விசுவாசியுங்கள் ... **அத்துடன்** ஒருவரையொருவர் நேசியுங்கள்.*

■ உங்களது பாதுகாப்பு, ஆசீர்வாதத்துக்காக ஜெபிக்கையில், அடுத்தவனும் கடவுளுக்கு அவரது கண்மணி என்பதை மறக்கவேண்டாம்.

கிறிஸ்துவின் திருவுடலில் பல உறுப்புகள் —
சிறு காயம் ஒன்றுக்காகக் கையையோ காலையோ தறிப்போமா?
''தேவன் உங்களிடம் பொறுமையாயிருப்பதுபோல நீங்களும்
பொறுமையாயிருங்கள்''

■ ஜெபப் பட்டியலுக்கு முன் ஒப்புரவாகுதலின் பட்டியல் தயார் செய்யுங்கள்.

***''முன்பு''*** *ஒப்புரவாகி* ***''பின்பு''*** *செலுத்து!* (மத் 5:23-25)

இவ்வசனப் பகுதி புண்படுத்தும் வார்த்தைகளைப் பேசுவதைப் பற்றியது:

*"ஆபத்து ... ஆபத்து ... ஆபத்து ... கோபம் ... மூடன் ... மதிகேடன்"*

(வச 22)

*எதிராளியுடன் **"சீக்கிரம்"** நல்மனம் பொருந்து* (வச 25)

இவ்விதம் செய்வது,

ஒரு மாபெரும் **எழுப்புதலைக்** கொண்டுவரும்.

- சகோதரி சாராள் நவரோஜியின் (1938- ) பாடல்:

*கர்த்தர் அன்பே, தூய அன்பே,*
*பக்தர்கள் போற்றும் அன்பே — என்*
*இயேசுவின் அன்பு மாபெரிதே;*
*எப்படிப் பாடுவேனோ?*

*குற்றமில்லாத அன்புடனே*
*மற்றவரை நான் நேசிக்கவே;*
*கற்பனையில் பிரதானம் ஒன்றே,*
*கைக்கொண்டு வாழ்ந்திடுவேன் — அவர்*

*சத்துருவான மித்திரனை*
*சோதரன் தோழனாய் நேசித்தீரே;*
*பாதம் பணிந்தும்மை வேண்டுகிறேன்,*
*பூரண அன்பருள்வீர் — திருப்*

(பார்க்க: பக்கங்கள் 38-39, 198-201, 255-258, 751-754)

## 6. <u>தன்னலமாய் இருக்கக்கூடாது.</u>

Do not be selfish.

- எதிலும் ''எனக்குத்தான்'' எனும் தலைமுறையிது.

  இதனால் ''எனக்கு'' என்ன கிடைக்கும் என்பதே கேள்வி.

  என்றுமில்லாத அளவு இன்று தன்னலம் தாண்டவமாடுகிறது —

  2 தீமோ 3:1,2 ... *கொடிய காலங்கள்*

  19 தீங்குகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

  முதலில் வருவதே, *''மனிதர் தற்பிரியராய் ...''*

  இக்காலத்தின் தன்னல ஆவியானது மார்க்கவுலகை,

  குறிப்பாக நமது ஜெபங்களைக், கவ்விப் பிடித்துள்ளது —

  எனது தேவைகள் ... எனது வேலை ... எனது குடும்பம் ...

  ஆனால், இயேசு கற்பித்த **மாதிரி** ஜெபத்தைப் பார்த்தால் —

  மத் 6:9-13 ... *எங்கள் ... எங்களுக்கு ... நாங்கள் ...*

  ''என்'', ''எனக்கு'' என்று **அல்ல**.

- பிறர் மீது அக்கறையற்று, தன்னலத்தில் நிறைந்துள்ள ஜெபங்களைக் கடவுள் மதிப்பதில்லை.

  (உ-ம்) ஏசா 1:15-17 ... *''கைகளை விரித்தாலும் ...*

  *மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும்''*

  — ஒடுக்கப்பட்டோரின் நியாயம் நாடுங்கள்.

  — திக்கற்றோரை ஆதரியுங்கள்.

  — விதவைக்காய் வழக்காடுங்கள்.

- துதிப்பதிலும் ஆராதிப்பதிலும் இன்று எங்கும் எழுச்சி.

  இப்பரவசம் நம்மைச் சுற்றியுள்ள மக்களது துன்பங்களைக்

  காணக்கூடாதவாறு நமது கண்களைக் குருடாக்கிவிடக்கூடாது —

எபி 13:15,16 ... *துதி ... ஸ்தோத்திர பலி ...*

*ஆனால் தானதர்மம் பண்ண* ***மறவாதிருங்கள்*** *...*

- சுயபரிதாபத்திலிருந்து வெளியே வாருங்கள்!

மற்றவரது இன்னல்களும் பிரச்னைகளும்

நம்முடையவைகளைவிடக் கொடியவை, மோசமானவை!

இயேசுவைத் தவிர யோபுவைப்போல் பாடனுபவித்தவர் எவருமிலர் —

ஆயினும், அவன் சுயபரிதாபத்தில் மூழ்கிவிடுவதற்குப் பதிலாகத்

தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தான் —

யோபு 42:7 ... யோபுவின் 3 சிநேகிதர் மீதும் தேவ கோபம் எழுந்தது.

என்ன தீங்கு அவர்களுக்கு நேர்ந்தது என்பதை அறியோம்.

அது பயங்கரமாயிருந்திருக்கும் (வச 8)

*''உங்கள் புத்தியீனத்துக்குத்தக்க ...''*

அவர்களுக்காக யோபு ஜெபித்தபோதுதான்

அவன் இழந்தவைகளைக் கடவுள் கொடுத்தார் (வச 10)

ஒரு பழமொழி: *ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்*

*தன் பிள்ளை தானாய் வளரும்!*

- நாம் ''பிறருக்காகவும்'' ஜெபிப்பதாக நினைத்துக்கொண்டிருக்கலாம்.

ஆனால், அதில் ''அந்நியர்'' மற்றும் நமது ''விரோதிகள்''

உள்ளடங்கியுள்ளனரா? (மத் 5:44,46)

ஜெபத்தில் உங்கள் இருதயம் விசாலமாகட்டும்;

''எல்லா'' மனிதரையும் உள்ளடக்குங்கள் — 1 தீமோ 2:1

ஏதோ ஜெபத்தில் பெயர்கள் சேர்ப்பதல்ல;

ஆனால்,

எல்லோருக்காகவும் விண்ணப்பியுங்கள்

எல்லோருக்காகவும் ஜெபியுங்கள்

எல்லோருக்காகவும் வேண்டுங்கள்

எல்லோருக்காகவும் ஸ்தோத்திரம் பண்ணுங்கள்

மற்றவர்களுக்காக ஜெபியுங்கள், மன்றாடுங்கள், துதியுங்கள்!

■ தன்னலமாயிராதேயுங்கள் —

ஜெபத்தில் இன்னும் முடிந்த அளவு நபர்களை உள்ளடக்க இதயத்தை விசாலமாக்குங்கள்.

எடுத்துக்காட்டாக,

— உங்களது மகன் அல்லது மகளது தேர்வுக்காய் ஜெபிக்கும்போது, பிற மாணவருக்காகவும் ஜெபியுங்கள் —

குறிப்பாக, கல்வியில் மந்தமான மாணவர்,
மற்றும் வறுமைப் பின்னணியிலிருந்து வருவோருக்காக

— திருமண வயதிலுள்ள உங்கள் மகன்/மகளுக்காக ஜெபிக்கும்போது, தங்களது பிள்ளைகளுக்கு நன்கு திருமணத்தை நடத்த வசதியில்லாத பெற்றோர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

— வாகன விபத்தில் உங்கள் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால், அந்த விபத்தில் பலியான வாகன ஓட்டுனர் குடும்பத்திற்காகவும் ஜெபிக்க மறந்துபோகக்கூடாது.

இப்படி ''எனது,'' ''நமது'' என்பது ''பிறரது'' என்றாகட்டும்!

■ இயேசுவின் தன்னலமின்மை:

☐ தம்மைப் பாதுகாக்கத் தூதர் படைக்காய் பிதாவிடம் வேண்டவில்லை (மத் 26:53);
ஆனால், பேதுருவைச் சாத்தானிடமிருந்து பாதுகாக்க அவனுக்காய் ஜெபித்தார் (லூக் 22:31,32).

☐ தமது பசியாற்றிக்கொள்ள அவர் அற்புதம் செய்யவில்லை (மத் 4:2-4);
ஆனால், திரள்களின் பசியாற்ற அப்பம் மீனைப் பெருக்கினார் (மத் 14:15-21).

## 7. மண்ணுலகச் சிந்தையால் நிறைந்திருக்கக்கூடாது.

Do not be earthlyminded.

■ இன்று மக்களின் எண்ணமெல்லாம்,
பரலோகம் ஒரு பல்பொருள் அங்காடி;
நாம் வாங்கவேண்டியவற்றின் பட்டியல்தான் ஜெபம் என்பதே.

பொருளாதாரத் தேவைகள், உடலுக்கடுத்த ஆசீர்வாதங்கள் ஆகியவற்றிற்காக ஜெபிக்கவே பெருவாரியாக நேரம் எடுத்துக்கொள்கிறோம்.

இப்பகுதியில் திடமான திருத்தம் தேவை —
மறுபடியும் இயேசுவின் மாதிரி ஜெபத்தைப் பார்ப்போம் —
மத் 6:9-13 ... 7 வேண்டல்கள்
இந்த 7இல் 1 மட்டுமே உடலுக்கடுத்தது.
*''அன்றன்றுள்ள ஆகாரம்''*

முக்கியத்துவ வரிசை இப்படி இருக்கவேண்டும் —

முதலாவது, ''தேவனுடைய'' காரியங்கள்:
*உமது நாமம்*
*உமது இராஜ்யம்*
*உமது சித்தம்*

அடுத்து, நம்முடைய ''ஆன்மீகத்'' தேவைகள்:
குற்றங்களுக்கு *மன்னிப்பு*
*சோதனையில்* வெற்றி
*தீமையினின்று விடுதலை*

இங்குதான் இஸ்ரவேலர் தடுமாறிக் கவிழ்ந்தனர் —

எகிப்திலிருந்து அவர்களை அழைத்து வந்ததில் கர்த்தர் உன்னத ஆன்மீக நோக்குகளை வைத்திருந்தார்:

— அவர்கள் ஆராதிக்கும் சந்ததியாக மாறவேண்டும்.
— அவர்கள் மூலம் தீயவர்கள் அழிக்கப்படவேண்டும்.
— முழுவுலகும் அவர்கள் மூலம் ஆசீர் பெறவேண்டும்.

அவர்களோ இவையெல்லாவற்றையும் மறந்து,
உடலுக்கடுத்தவைகளிலேயே சிக்கிக்கொண்டனர் —
(உ-ம்) எண் 11:5,6 ... *மீன் ... வெங்காயம் ... வெள்ளைப் பூண்டு*
தேவ கோபம்: வச 19,20

■ ஜெபங்களில் நாம் உலகச் சிந்தையாகவே இருப்பதற்கு ஒரு காரணம்—
பிரசங்கபீடங்களில் ஓங்கியடித்துப் பேசப்படுவது
''சுகபோக வாழ்வின்'' உபதேசமே.

— இயேசு போதித்தது இதுவல்ல ...
மத் 6:31,32,33 *(அஞ்ஞானிகள்:* உயிருள்ள தேவனைத்
தொழுதுகொள்ளாதவர்கள்)

— பூவுலகக் காரியங்களிலேயே உழன்றுவிடுவதைக் குறித்து
விசுவாசிகளை அப்போஸ்தலர் எச்சரித்தனர் ...
*''இவ்வுலக வாழ்வுக்காக மட்டும்''* (1 கொரி 15:19)

— நற்செய்திக் கூட்டங்களில் மக்கள் கதறியழுவது ஏன்?
பிரதானமாகத் தங்கள் பாவங்களுக்காக அல்ல,
உடலின் வேதனைகளுக்காகவும்,
பொருளாதாரத் தேவைகளுக்காகவுமே! —
2 கொரி 7:10
*''தேவனுக்கேற்ற துக்கம் ... மனந்திரும்புதல் ... இரட்சிப்பு''*

நமது ''பாவங்களுக்காய்ப்'' புலம்பி அழவேண்டும்

*''பாவிகளே ... துக்கித்து ... அழுங்கள்''* (யாக் 4:8,9)

■ ஜெபத்தில் பொருத்தனைகள் செய்வது பற்றி —
அதாவது, ''ஆண்டவரே, நீர் எனக்கு இதைச் செய்தால், நான் ...''

கடவுளிடம் மலிவான பொருத்தனைகள் பண்ணவேண்டாம் —
(உ-ம்) ''நான் இந்தப் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன்''

☐ அன்னாள் செய்த பொருத்தனையைப் பாருங்கள் —
1 சாமு 1:11 ... *''அவன் உயிரோடிருக்கும் காலமெல்லாம் ...''*
''கர்த்தர் கொடுத்ததை அவருக்கே கொடுத்துவிடுகிறேன்''
பார்க்க வச 27,28 ... இதுவே உண்மையான *''தொழுகை!''*

☐ தாவீதும் அப்படித்தான் —

*உபத்திரவங்களின்* வழியே சென்றுகொண்டிருந்தான் (சங் 132:1)
தனது எல்லா சொகுசுகளையும் **தியாகம்** செய்வதாய்ப்
பொருத்தனைபண்ணினான்:

*“வீடு … கட்டில் … படுக்கை”* (வச 2-5)

■ ஜெபத்தில் அரசன் சாலொமோன் கேட்காதவையே
ஆண்டவரை மகிழ்வித்தன —

1 இரா 3:10,11 … *நீடித்த நாட்கள் … செல்வம்*

■ எசேக்கியா பிரான்சிஸ் (1952- ) அவர்களின் பாடல்:

*யார் வேண்டும் நாதா, நீரல்லவோ?*
*எது வேண்டும் நாதா, நின் அன்பல்லவோ?*
*பாழாகும் லோகம் வேண்டாமையா;*
*வீணான ஆசை வெறுத்தேனையா.*

*உலகத்தின் செல்வம் நிலையாகுமோ?*
*பேர் புகழ் கல்வி அழியாததோ?*
*பின் ஏன் நீர் கேட்டீர் இக்கேள்வியை?*
*பதில் என்ன சொல்வேன், நீரே போதும்!*

(பார்க்க: பக்கங்கள் 52-54, 439-440, 563-565, 676-679, 755-758)

## 8. அதிகமாய்ப் பேசக்கூடாது.

Do not speak too much.

- ஜெபத்தைக் குறித்த முதல் போதனையிலேயே,
ஜெபத்தில் ''வீண் வார்த்தைகள் அலப்புதல்'' மற்றும்
''அதிக வசனிப்புகள்'' ஆகியவற்றை இயேசு கண்டித்தார் —

மத் 6:7,8 ... மாதிரி ஜெபத்தைக் கற்பிக்கும் **முன்னதாகவே ...**
அது அஞ்ஞானப் பழக்கம்: *''அவர்கள்* ***நினைக்கிறார்கள்''***

(உ-ம்) ''ஆண்டவரே, தாரும் ... தாரும் ... தாரும் ... தாரும் ...''
ஏன் ''வீண் அலப்பல்கள்'' கூடாது —
**ஏனென்றால்,** *''உங்கள் தேவையை உங்கள் தந்தை ஏற்கனவே அறிந்திருக்கிறார்''*
இந்த உணர்வுக்குள் மட்டும் நாம் வந்துவிட்டால்
ஜெப வாழ்வில் என்னே புரட்சி உண்டாகும்!
ஜெபம் ஆண்டவருக்குத் **தகவல்கள்** கொடுக்க அல்ல,
அவரோடு பாசவுறவை மேம்படுத்தவே.

- ஜெபத்தில் *''மூடரின் பலி''* —
பிர 5:1-3...*பலியிடுவதைவிட செவிகொடுக்கச் சேர்வதே நலம்*
*...* ***உன்*** *வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக ...*

**ஜெபத்தில்** *தனது நாவுக்குக் காவல் வைக்கும்படி*
தாவீது வேண்டினான்! (சங் 141:2,3)

- ஜெபம் இருவழிப்பாதையாய் இருக்கவேண்டும் —
தேவன் பேசக் கேட்பதைக் கூட்டி,
நாம் பேசுவதைக் குறைக்கவேண்டும்!

யாக் 1:17 ... *நன்மையான எந்த ஈவும் பரத்திலிருந்துண்டாகி ...*
:18 ... **வசனத்தினால்** கடவுளே நமது மறுபிறப்பைத் துவக்கினார்.
:19 ... **ஆகையால்** ... *கேட்கத் தீவிரம் ... பேசத் தாமதம் ...*
:21 ... *உள்ளத்தில் நாட்டப்பட்ட* ***வசனத்தைச்*** *சாந்தமாய் ...*

(உ-ம்) தனக்கிருந்த முள் நீங்கும்படி பவுல் ஜெபித்தபோது —
2 கொரி 12:7-9

கர்த்தர் **தமது வார்த்தையை** அவன் இருதயத்தில் நாட்டினார்.
அதாவது, *''என் கிருபை உனக்குப் போதும் ...*
*உன் பலவீனத்தில் என் பலம் ...''*

அவன் அதைச் ''சாந்தமாய்'' ஏற்றுக்கொண்டான்.

இதை எப்படிச் சொல்லுகிறோம்?
இவ்வனுபவத்திற்குப் பின்னரே,
*''என்னை நான்* ***உயர்த்தாதபடிக்கு****''* என்று எழுதினான்.

- திறந்துவைத்த வேதத்துடன் ஜெபியுங்கள் —
அதின் செய்திகளால் ஊறிப்போயிருங்கள் —
முழங்காலில் நின்றுகூட திருமறையை வாசிக்கலாம்.

யோ 15:7...*என்* ***வார்த்தைகள்*** *உங்களில் நிலைத்திருந்தால் ...*
*நீங்கள்* ***கேட்டுக்கொள்வது*** *எதுவோ ...*

- தாவீது கர்த்தரிடத்தில் ஏங்கின ''ஒன்று'' இதுதான்.

சங் 27:4 ... *பார்க்க ... ஆராய்ச்சி செய்ய ...*

- ஜெபத்தில் கடவுளுக்குப் **பிரசங்கம்** பண்ணக்கூடாது!

1 சாமு 3:10
சாமுவேல்: ''கர்த்தாவே, சொல்லும்; அடியேன் கேட்கிறேன்!''
நாமோ: ''கர்த்தாவே, கேளும்; அடியேன் பேசுகிறேன்!''

பரிசேயன்-ஆயக்காரன் உவமையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம்: (லூக் 18:10-14)

வார்த்தைகளைக் கொட்டிவிட்டவன்,
வெறுமையாகவே திரும்பினான்!

**எப்படி ஜெபிக்கக்கூடாது?**

**9. இயல்பற்ற விதத்தில் செயல்படக்கூடாது.**
Do not act artificially/unseemly.

- ஜெபத்தில் அதிக சத்தம் அதிக வல்லமை என்று பொருளல்ல! சத்தம் அதிகமானால் சரக்கு இல்லை என்றிருக்கலாம்!

கூச்சல், கூப்பாடு, இவையெல்லாம் தவிர்க்கப்படவேண்டும்.

ஜெபம் *''ஆவியோடும் உண்மையோடும்''* இருக்கவேண்டும்.

தீர்க்கன் எலியா அஞ்ஞானப் பழக்கங்களைக் கிண்டலடித்தான் —

1 இரா 18:25-29 ... *குதித்து ஆடினார்கள்*
... *உரக்கக் கத்தினார்கள்*
... *கத்திகளால் கீறிக்கொண்டார்கள்*
... *உளறினார்கள்*

முந்தின பாடத்தில் வீண் அலப்புதல் ஓர் அஞ்ஞானப் பழக்கம் என்று இயேசு சொன்னதைக் கவனித்தோம்.

அளவுக்கு மீறிக் கத்துதலும் அஞ்ஞானப் பழக்கம்தான் —
*''தங்கள் வழக்கத்தின்படியே''* (வச 28)

சில தருணங்களில் நமது உள்ளுணர்வுகள்
ஆழமாய்க் கிளறப்படலாம்—

(உ-ம்) கெத்சமெனே தோட்டத்தில் இயேசு (லூக் 22:44)

*''வியாகுலம் ... ஊக்கம் ... வியர்வை ... இரத்தம்''*

எபிரெய நிருப ஆக்கியோன் இதை விளக்குகிறான் (எபி 5:7)

*''பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ...''*

ஆனால் இங்கு இயல்பற்ற செயல் எதுவுமில்லையே.

- அது போலவே,
அமைதியாய் ஜெபிப்பது
ஆவியும் அனலுமில்லாதது என்று பொருளல்ல —

(உ-ம்) அன்னாள்

1 சாமு 1:10 ... *கசப்பு ... கண்ணீர் ... அங்கலாய்ப்பு*

:12,13 ... *உதடுகள் அசைந்தன ... சத்தம் இல்லை!*

அவள் உண்மையிலேயே —

*''இதயத்தைக் கடவுளிடம் ஊற்றிக்கொண்டிருந்தாள்''* (வச 15)

*''மிகுந்த விசாரத்தினாலும் துக்கத்தினாலும் ...''* (வச 16)

வல்லமையானதொரு தீர்க்கதரிசியை,
அதுவும் ஜெப வீரனாகிய தீர்க்கதரிசியைப் பெற்றெடுத்தாள் —

தனது பணியினின்று ஓய்வு பெற்ற பின்னரும்
சாமுவேல் தனது ஜெப ஊழியத்தைத் தொடர்ந்தான் (1 சாமு 12:2,23)

■ உணர்ச்சிகள் இருக்கலாம்,
உணர்ச்சிவசமோ ஜெபத்தின் இனிமையைச் சூறையாடிவிடும்.

கடவுள் நெடுந்தொலைவில் இல்லையே!

அமெரிக்காவிலிருக்கும் ஒருவரோடு
இந்தியாவிலிருந்து தொலைபேசியில் பேசும்போது
சிலர் போடும் சத்தம், அப்பப்பா!

உபா 4:7 ... *''இவ்வளவு சமீபமாய்!''*

■ கூடி ஜெபிக்கையில் கடைப்பிடிக்க பவுல் வகுத்த ஒழுங்குமுறைகள்:
1 கொரி 14

☐ *தீர்க்கரின் ஆவிகள் தீர்க்கருக்கு* ***அடங்கியிருக்கின்றன*** (வச 32)
☐ *கடவுள்* ***கலகத்திற்குக்*** *காரணரல்ல* (வச 33)
☐ *சகலமும் நல்லொழுக்கமாயும்* ***கிரமமாயும்*** ... (வச 40)

(உ-ம்) ஒருவர் ஜெபிக்கும்போது, மற்றவர்கள் மென்குரலில்
அவரோடு இணைந்து ... அவரது சத்தத்தை அமுக்கிவிடாது ...

■ ஜெபத்தில் எந்தப் பிரசங்கியாரையும் காப்பியடிக்காதீர்!

— திடீரென்று ஒரு நாள் என் மகள் அடுத்த வீட்டுப் பிள்ளை போல்
என்னிடம் பேசினால் எனக்கு எப்படியிருக்கும்?
உங்கள் இயல்பையும் தனிப்பாணியையும் இழந்துவிடாதீர்கள்.
தமது பிள்ளைகள் விதவிதமாய் இருக்கவே கடவுள் விரும்புகிறார்.

எனவேதான் ஒரேவிதமாய் இரு நபர்களை அவர் படைக்கவில்லை!

விதவிதமாய் இருப்பதே தனி அழகு!
சாதாரணமாய் இருப்பதுதான் அசாதாரணம்!

- ஜெபத்தில் நாம் ''பயபக்தியைக்'' காத்துக்கொண்டால்,
  இயல்பற்ற செயல்பாடுகளுக்கு இடமிருக்காது.

(உ-ம்) முழங்காலிடுதல் மறைந்துவரும் ஒரு பாவனை

தானியேல்: ***முழங்கால்படியிட்டு*** *ஜெபம்* (தானி 6:10)
பவுல்: *பிதாவை நோக்கி* ***முழங்கால்படியிட்டு*** (எபே 3:15)

இப்படிச் சொல்வதால்,

ஜெபத்தில் சத்தமே கூடாது என்பதல்ல.

*சத்தமிட ஒரு காலம் ... மவுனமாயிருக்க ஒரு காலம்* (பிர 3:7ஆ)

சங் 46:10 ... *அமரிக்கையாயிருந்து ...*
47:1 ... *கடவுளுக்குமுன் ஆர்ப்பரியுங்கள்*

## 10. ஜெபிப்பதைக் குறித்துப் பெருமைப்படக்கூடாது.

Do not boast of praying.

■ ஜெபத்தைக் குறித்த இயேசுவின் முதல் போதனையே—

மத் 6:5,6 ... *மனிதர் காணும்படி ஜெபியாதே!*

E. M. பவுண்ட்ஸ்: ''இரகசியமாய் ஜெபிப்பதே ஜெபத்தின் இரகசியம்!''

வாசிக்க: *The Complete Works of E.M. Bounds on Prayer*

(ஒரே தொகுப்பில் 8 புத்தகங்கள்)

(அவர் வழக்குரைஞராக இருந்து சபை மேய்ப்பரானவர், 1835-1913)

நாம் தவறிழைக்கும் பகுதிகள்:

■ ஒருவருக்காக ஜெபித்ததற்குப் பதில் கிடைத்துவிட்டால் அதற்கான பாராட்டை எடுத்துக்கொள்ளுகிறோம் —

(உ-ம்) மாணவன்: ''வரலாற்றுப்பாட பரீட்சை நன்றாக எழுதினேன்''

ஜெபித்தவர்: ''நான் எவ்வளவு ஜெபித்தேன் தெரியுமா?''

அடுத்த நாள், மாணவன்: ''புவியியல் நன்றாக எழுதவில்லை''

ஜெபித்தவர்: ???

அப்படியானால்,

தாம் பேதுருவுக்காய் ஜெபித்திருப்பதை ஏன் அவனிடம் இயேசு சொன்னார்? (லூக் 22:31,32)

— சோதனைக்கு முன்னரே சொல்லிவிட்டார்.

— பேதுருவுக்குத் தெம்பூட்டத்தான், தம்மை உயர்த்த அல்ல.

■ உபவாசம் ஜெபத்தோடு இணைந்தது.

இங்கேயும், பெருமையடித்தலுக்கு எதிராகவே இயேசு போதித்தார் (மத் 6:16-18)

ஆனால், நமது உபவாசக் கூட்டங்களுக்குத்தான் விளம்பரம் அதிகம்!

நாம் பிரமாதமாக எதையும் சாதிக்காததில் ஆச்சரியமில்லையே!

எல்லாவற்றிலும் நாம் திருமறையை விட்டுத் தூரம் போய்விட்டோம்.

■ ஜெபியுங்கள் ... ஜெபியுங்கள் ... ஜெபியுங்கள் ...
ஆனால் ஜெபத்தின்மீது அல்ல,
ஜெபத்திற்குப் பதிலளிக்கும் தேவன்மீதே சார்ந்திருங்கள்.

■ ஜெபிப்பதைப் பற்றி நாம் ஏன் பெருமைப்படக்கூடாது —

(அ) நமது ஜெபங்களைக் கேட்டுத் தேவன் நமக்குக் கொடுப்பதைவிட தமது சொந்த விருப்பத்தின்படி தாமாகவே கொடுப்பவைதான் அதிகம்.
ஜெபிக்கும் முன்னரே கிடைத்தவை பல!

(உ-ம்) மறுபிறப்பு: *"அவர் சித்தம்...நன்மையான எந்த ஈவும்"* (யாக் 1:17,18)
*"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை"* (யோ 15:16)

(ஆ) வரங்களும் அற்புதங்களும்:
*"தேவனுடைய சித்தத்தின்படி ..."* (எபி 2:4)

(இ) *நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் அதிகமாய்* நமக்குக் கொடுக்கிறவர் (எபே 3:20)

முடிவில்,

ஜெபத்தை **ஏறெடுக்கும்** நமக்கல்ல,
ஜெபத்திற்குப் **பதிலளிக்கும்** தேவனுக்கே!

பாடுங்கள்: *துதி கனம் மகிமை உமக்கே!*

■ முடிவுரை: அடுத்த பக்கம்

## ■ முடிவுரை

இந்த 10 பாடங்களும் கர்த்தருடைய ஜெபத்திலேயே சித்தரிக்கப்பட்டுள்ளன —

1. கடவுளைக் கட்டாயப்படுத்தக்கூடாது.
   — *"உமது **சித்தம்** செய்யப்படுவதாக!"*
2. பிசாசைக் குற்றம் சாட்டக்கூடாது.
   — *"**தீமையினின்று** எங்களை இரட்சித்துக்கொள்ளும்!"*
3. பரம பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.
   — *"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் **பிதாவே...**"*
4. நடுவர்களைத் தேடக்கூடாது.
   — *"**பரலோகத்திலிருக்கும்** எங்கள் **பிதாவே!**"*
5. இருதயத்தில் பகை இருக்கக்கூடாது.
   — *"நாங்கள் பிறரை **மன்னிப்பதுபோல்** எங்களை மன்னியும்!"*
6. தன்னலமாய் இருக்கக்கூடாது.
   — *"**எங்களுக்கு** ஆகாரம் ... **எங்கள்** குற்றங்கள் ... **எங்களை** இரட்சித்துக்கொள்ளும்!"*
7. மண்ணுலகச் சிந்தையால் நிறைந்திருக்கக்கூடாது.
   — ஏழு வேண்டல்களில் 1 மட்டும் உடலுக்கடுத்தது!
8. அதிகமாய்ப் பேசக்கூடாது.
   — மிகச் சுருக்கமான, ஆனால் ஒப்பற்ற ஜெபம்!
9. இயல்பற்ற விதத்தில் செயல்படக்கூடாது.
   — *"நீங்கள் ஜெபிக்கவேண்டிய **விதமாவது** ..."*
   — தந்தை-பிள்ளை உறவு
10. ஜெபிப்பதைக் குறித்துப் பெருமைப்படக்கூடாது.
   —*"இராஜ்யமும் ... வல்லமையும் ... மகிமையும் ... **உமதே!**"*

# 4

# திருமறைத் தியானம்



## BIBLE MEDITATION

# 4

## எப்படித் தியானிக்கக்கூடாது?

HOW NOT TO MEDITATE

**1**

திருமறையின் எப்பகுதியையும் ஒதுக்கிவிடக்கூடாது.

**2**

வேதத் தியானத்தில் அவசரப்படக்கூடாது.

**3**

வேதத்தைப் படிக்கையில் சோம்பல் இருக்கக்கூடாது.

**4**

சொந்த அறிவையே சார்ந்திருக்கக்கூடாது.

**5**

வசனச் சூழமைவை மறந்துவிடக்கூடாது.

**6**

வேதத்தைவிட அனுபவங்கள் முக்கியமாகக்கூடாது.

**7**

மறைவானவற்றைத் தோண்டித் துருவக்கூடாது.

**8**

ஜெப வாழ்வை அலட்சியப்படுத்தக்கூடாது.

**9**

கீழ்ப்படியத் தாமதிக்கக்கூடாது.

**10**

வேத அறிவு உங்களிடம் தேங்கிவிடக்கூடாது.

4

# எப்படித் தியானிக்கக்கூடாது?

## அறிமுகவுரை

■ கிறிஸ்தவனுக்கு ஜெபம் என்பது ஒரு சிறகானால்,
திருமறைத் தியானம் அடுத்த சிறகாகும் —

அப் 6:4 ... *ஜெபம் ... வேத வசனம் ...*

இவ்விரண்டும் இறைமக்களின் இணையற்ற சிலாக்கியங்கள்
என்று மோசே குறிப்பிட்டுள்ளான் —

உபா 4:7,8... *தொழும்போதெல்லாம்... இவ்வளவு கட்டளைகள்*

■ *தேவன் தமது எல்லாப் புகழையும்விட தமது வார்த்தையை ...*
சங் 138:2ஆ

வேதத்திலேயே மிக நீண்ட அத்தியாயம்: சங்கீதம் 119;
இவ்வத்தியாயத்தின் 176 வசனங்களும் வேதத்தையே குறித்தவை.

■ அனுதின உணவைவிட முக்கியமானது தேவ வார்த்தையே —

— யோபு (யோபு 23:12)
*... எனக்கு வேண்டிய ஆகாரத்தைவிட ...*

— இயேசு (மத் 4:4)
*... மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல ...*

■ வாழ்க்கையின் அனுபோகங்களில்,
சில நியாயமானவை;
மற்றவை நியாயமற்றவை.

நியாயமான அனுபோகங்களிலும்,
ஒன்றே ஒன்றுதான் அளவில்லாது அனுபவிக்கக்கூடியது;
அதுதான் வேதத் தியானம் —
சங் 119:96...*எல்லாவற்றிற்கும் எல்லை ... மகா விஸ்தாரம் ...*

நாள் முழுவதும் சாப்பிட்டுக்கொண்டோ, விளையாடிக்கொண்டோ
இருக்கமுடியுமா? வேதத்தையோ ''இரவு பகலாய்த்'' தியானிக்கலாம்
சங் 119:97

■ இன்று நாம் ''பார்க்கும்'' எதுவுமே தற்காலிகமானது —
கட்டிடங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், வாகனங்கள், ஆடைகள் ...

ஆனால் ஒன்று மட்டுமே விதிவிலக்கு —
அதுதான் ''பைபிள்''
இயேசு அப்படிச் சொன்னார் (மத் 24:35)
— இது ''வாழுமிடமாகிய'' பூமியைக் குறித்தது.
பேதுருவும் அப்படிச் சொன்னான் (1 பேது 1:24,25)
— இது பூமியில் ''வாழ்பவர்களைக்'' குறித்தது.

■ வேதம்: *நமது பாதங்களுக்குத் தீபம்,*
*பாதைக்கு வெளிச்சம்* (சங் 119:105)

நாம் இருள் சூழ்ந்த உலகில் வாழ்கிறோம்.
எங்கும் ஒரே குழப்பமும் கலவரமும்தான்.
தனி நபர்களுக்கும் அரசுகளுக்கும் தெளிவற்ற நிலை.
திருமறைக்கு நாம் திரும்பிவரும்போதுதான்
நமது கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும், புதிர்கள் தீரும்.

■ வேதத் ''தியானம்'' இன்று மறைந்துவருகிறது.
மக்கள் வேதத்தை ''வாசிக்கிறார்கள்'' அவ்வளவுதான்.
நேரமெடுத்துத் தியானிக்கக் கர்த்தர் நம்மை அழைக்கிறார் —
யோசு 1:8
சங் 1:2
சங் 119:15,23,48,78,97,99,148

■ ஒரு வேதப்பகுதியை வாசிக்கும்போது,
அது என்ன **சொல்லுகிறது** என்பதை அறிந்தால் போதாது;
அதின் **பொருள்** என்னவென்றும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.
இங்குதான் தியானிப்பது இன்றியமையாததாகிறது.

■ வெகு சில கிறிஸ்தவர்க்கு மட்டுமே ஆன்மீக வாழ்வின் துவக்கத்திலேயே வேதத்தை எப்படித் தியானிப்பதென்று கற்றுக்கொடுக்கப்படுகிறது. இதனால் பலர் வேதத் தியானம் மற்றும் வேத வியாக்கியானத்தின் சரியான முறைகளைவிட தவறான முறைகளையே கற்றுவிடுகின்றனர். எனவேதான் நமது தலைப்பு —

*''எப்படித் தியானிக்க**கூடாது**?''*

**எப்படித் தியானிக்கக்கூடாது?**

## 1. திருமறையின் எப்பகுதியையும் ஒதுக்கிவிடக்கூடாது.

Do not neglect any portion of the Bible.

■ அநேகக் கிறிஸ்தவர்கள் வேதத்திலுள்ள ஒரு சில வசனங்கள், பகுதிகள், புத்தகங்களிலேயே நின்றுவிடுகின்றனர் —

சிலருக்கு, சங்கீதங்கள்
— காரணம் அவர்கள் விரும்புவதெல்லாம் சில **தியானக்** கருத்துக்கள்தான்.

மற்றவர்களுக்கு, நீதிமொழிகள்
— **நடைமுறை** ஆலோசனைகள்

அல்லது, சுவிசேஷங்கள்
— **வரலாற்றுச்** சம்பவங்கள்

அல்லது, நிருபங்கள்
— **உபதேச** விளக்கங்கள்

சிலருக்கு, எப்பொழுதும் பழைய ஏற்பாடுதான்;
மற்றவர்களுக்கு, எப்பொழுதும் புதிய ஏற்பாடு மட்டுமே.

ப.ஏ. மட்டும் — தேவனது கண்டிப்பை வலியுறுத்தல்
பு.ஏ. மட்டும் — தேவனது கருணையை வலியுறுத்தல்

ப.ஏ. மட்டும் — பிரமாணக் கொள்கை — மகிழ்ச்சியற்ற கிறிஸ்தவன்
பு.ஏ. மட்டும் — கிறிஸ்துவில் விடுதலை — கவலையீன கிறிஸ்தவன்

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் தேவனது இரு ''உதடுகள்''
புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டில் மறைந்திருந்தது;
பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டில் மலர்ந்துள்ளது.

வேதம் புதியதும் பழையதும் நிறைந்த பொக்கிஷம் (மத் 13:52)

■ நாம் **முழு** வேதத்தையும் படிக்க அறிவுறுத்தப்படுகிறோம் —
2 தீமோ 3:16,17
*எல்லாம் ... தேர்ச்சி ... தகுதி ... எந்த நற்செயலும் ...*

நால்வகைப் பயன்கள் —

(அ) *''உபதேசம்''* — பெரும்பாலும் நிருபங்களிலிருந்து
(ஆ) *''கடிந்துகொள்ளுதல்''* — பழைய ஏற்பாட்டுச் சரித்திரம்
(1 கொரி 10:11)
(இ) *''சீர்திருத்தம்''* — பெரும்பாலும் சுவிசேஷங்களிலிருந்து
(இயேசு அர்த்தமற்ற பாரம்பரியங்களை எதிர்த்தார்)
(ஈ) *''நீதிநெறி பயிற்றுவிப்பு''* — அதிகமாக நல்லறிவு நூல்களில்
(நீதிமொழிகள், பிரசங்கி, மற்றும் பிற)

— தேவையற்றதொன்றும் பைபிளில் இல்லை —
ரோ 15:4 ... *எழுதியிருக்கிறவை* ***எல்லாம்*** ...

— இதனோடு எதையும் *''கூட்டாதே''* என்று அடிக்கடி
எச்சரிக்கப்படுகிறோம் (வெளி 22:18)

ஆனால் தியானிக்காமல் ''ஒதுக்குவது'' *(குறைப்பது)* சரியா?
19ஆம் வசனத்தைக் கவனியுங்கள்!

இரண்டாவது முதலாவதைவிடக் கேடானது!

''கூட்டினால்'' ... (1) வாதைகள் கூட்டப்படும்
''ஒதுக்கினால்'' ... (1) ஜீவப் புத்தகம் (2) பரிசுத்த நகர் (3) ஆசீர்கள்
— இழப்பு

எனவேதான் தேவனது *''முழு'' ஆலோசனையை* அறிவிப்பதில்
பவுல் கருத்தாயிருந்தான் அப் 20:20,26,27

■ சபை மேய்ப்பர், பிரசங்கிமாருக்கு ஓர் அழைப்பு:
மக்களுக்கு முழு வேதத்தையும் போதியுங்கள்; அப்பொழுதுதான்
வேதம் அறியா பேதமை சபைகளை விட்டு ஒழியும்.

பிரசங்கிமார் ''முழு'' வேதத்தையும் போதிக்காததால், நமது
கிறிஸ்தவர்களுக்குச் சில வசனங்கள்தான் தெரியும், வேதம் தெரியாது!

நாம் முழு வேதத்தையும் படிக்கும்போதுதான்
மனதுக்கும் ஆன்மாவுக்கும் **முழுமையான** உணவு கிடைக்கும்.
அப்பொழுதுதான் கிறிஸ்தவ வாழ்வில் **முழுமையான** வளர்ச்சியும்,
கணிசமான முன்னேற்றமும் காணலாம்.

இப்படித்தான் இயேசு வளர்ந்தார் (லூக் 2:52)

*ஞானத்தில்* — புத்திக் கூர்மை
*வளர்த்தியில்* — உடல் வலிமை
*தேவ கிருபையில்* — ஆன்மீக வாழ்வு
*மனிதர் தயவில்* — சமுதாய உறவுகள்

12 வயதாயிருக்கும்போதே அவருக்கு வேதத்தில் முழுமையான அறிவு இருந்ததாலேயே இது சாத்தியமாயிற்று (லூக் 2:46,47)

■ உதவிகள்:

☐ ஆண்டுக்கு ஒரு முறை அல்லது ஈராண்டுக்கு ஒரு முறையாவது முழு வேதத்தையும் வாசித்துவிடுங்கள்.
வேத வாசிப்பு அட்டவணைகளைப் பயன்படுத்துங்கள்.

☐ புரிந்துகொள்ளக் கடினமான பகுதிகள் இருக்கும் — கவலை வேண்டாம் — முதல் வாசிப்பில் எழுந்த வினாக் குறிகள் அடுத்தடுத்து வாசிக்கும்போது ஆச்சரியக் குறிகளாய் மாறிவிடும்!

மற்ற புத்தகங்களைப் போலல்லாது, எல்லா வயதினருக்கும் ஆன்மீக அளவிற்கும் பைபிள் ஒன்றே.
எனவே முதல் முறை வாசிக்கும்போதே அனைத்தும் புரிந்துவிடாது.
இது வாழ்நாள் முழுவதுக்குமானதே!

— நாம் வேதத்தில் எந்தப் பகுதியையாவது ஒதுக்கிவிட்டால், *"திருப்பிப் போடாத" அப்பம்* போலிருப்போம் (ஓசி 7:8)

இவ்வுலகில் புரியாதவை
அவ்வுலகில் புரிந்துவிடும் (1 கொரி 13:9-12)

திருமறையின் 66 புத்தகங்களுக்காய்த் தேவனைத் துதிப்போம்!

## 2. வேதத் தியானத்தில் அவசரப்படக்கூடாது.

Do not rush thro' your meditation.

■ இக்காலத்தில் எதையெடுத்தாலும் —

வேகம் ... ஓட்டம் ... ஆத்திரம் ... உடனே ...

— இது கணினி யுகம்.

— பொதுவான உணவகங்களைவிடத்

துரித உணவகங்களுக்குத்தான் கிராக்கி!

— கார்கள் ஓடினால் போதாது, பறக்கவேண்டும்!

இந்த மனப்பான்மையும் போக்கும் வேதத் தியானத்திற்கு ஒத்து வராது—

வேதம் தரும் இரு ஆசீர்வாதங்கள் —

அ) தலைக்கு அறிவு

ஆ) இதயத்திற்குச் செய்தி

''அறிவானது'' அதிவேகத்தில் கிடைத்துவிடலாம்;
கடவுளிடமிருந்து ''செய்தி'' பெறவோ நேரம் வேண்டும் —

சங் 130:5 ... *''அவரது வார்த்தைக்காய்க் காத்திருக்கிறேன்''*

வேதம் துரிதவுணவுமல்ல, நொறுக்குத்தீனியுமல்ல!

வேதத்தின் மிக நீண்ட புத்தகமாகிய சங்கீதங்களின் முதல் வரிகளே ''அவசரப்படாது'' தியானித்தலையே குறிப்பிடுகிறது —

சங் 1:1,2

அ) பரியாசக்காரருடன் *''உட்காராமல்''* — பொழுதுபோக்கு

ஆ) பரிசுத்த வேதத்துடன் *''அமர்ந்து''* — பொறுமையான தியானம்

— இதுவே பழம் தீர்க்கனாகிய எரேமியாவின் அனுபவம்:

எரே 15:16,17 அ) *பரியாசக்காரருடன் உட்காரவில்லை!*

ஆ) *உமது வசனத்துடன் தனித்து உட்கார்ந்தேன்!*

ஆனால் நமது அனுபவம் என்ன?

தொலைக்காட்சி மற்றும் பொழுதுபோக்குகளில் மணிக்கணக்காய்...
ஆனால் வேதத்தோடு அவசர அவசரமாய்!

காலை 6 அல்லது 7 மணிக்குமேல் இன்றைய உலகில் ஒரே சந்தடி.
சங்கீதக்காரன் தியானத்திற்கென அதிகாலையைத்
தெரிந்துகொண்டான் (சங் 119:147,148).

பொற்கட்டளை: *சீக்கிரம் தூங்கி சீக்கிரம் எழுந்திருங்கள்!*
Early to bed; Early to rise!

■ வேதத்தை வெறுமனே **வாசிப்பதல்ல**;
அதைத் **தியானிக்க** வேண்டும் —
கடவுளது சத்தம் உங்கள் இருதயத்தில் *''கேட்கும்வரை!''*
ரோ 10:17 *... விசுவாசம் கேட்பதினால் ... கேட்பதினால் ...*

நாம் பொறுமையாய்த் **திருவசனத்தை** வாசிக்கையில்,
கர்த்தருடைய மெல்லிய **சத்தம்** நமக்குள் தொனிக்கும்.

*கர்த்தரின் சத்தம் நம்மை கன்றுக்குட்டிகள்போல் துள்ளச்செய்யும் —*
சங் 29:6,7

''சத்தமே'' நமக்குள் ''வார்த்தையை'' நாட்டுகிறது —
(உ-ம்) சத்தமாம் யோவான் வார்த்தையாம் இயேசுவிடம்
(யோ 1:23,36)

■ இந்நாட்கள் பொதுவாக வேலைப்பளு நிறைந்தவை.
நாளின் முடிவில் ஓய்ந்துபோகிறோம்.
அதிகாலையில் எழும்புவது கடினமாகிவிடுகிறது.
நிவாரணம்: வாரயிறுதிகளில் கூடுதல் நேரமெடுத்துக்கொள்ளுங்கள்.
கூட்டம் கூட்டம் என்று அலையாதீர்கள்.
ஞாயிறன்று ஓர் ஆராதனை போதும்;
பின்னர் அவசரப்படாது சில மணி நேரம் தியானியுங்கள்.

வேதத்தை நேரமெடுத்துத் தியானிப்பதற்கென்றே
அவ்வப்போது விடுப்பு எடுத்தாலென்ன?

— திருமறையோடு தரமான நேரம் செலவிட்டால்தான்
திருவார்த்தையானது நமது இதயங்களுக்குள் **இறங்கும்.**

இதைத்தான் வசனம் *''நாட்டப்படுவது''* என்கிறது திருமறை!
(யாக் 1:21) *''கேட்கிறதற்கு''* (வச 19)

இது விதையை அப்படியே தூவுவது அல்ல!
அதை ''ஊன்றுவது!''

— திருவார்த்தையை ''உட்கொள்வது'' என்றால் இதுதான் —
யோபு 23:12

*அப்பத்தினால் மட்டுமல்ல* ... (மத் 4:4)
ரொட்டியை வெறுமனே முகர்ந்து பார்ப்பதாலோ,
துண்டுகளாக அறுப்பதாலோ என்ன பயன்?

அதைச் **''சாப்பிட''** வேண்டும்:
*''நான் அவற்றைப் புசித்தேன்!''* (எரே 15:16)

■ ஒரு தீர்மானம் எடுங்கள்: தினசரித் தியானத்திற்கு ...
வாராந்திரத் தியானத்திற்கு ...
நேரமெடுத்துப் படிப்பதற்கு ...

D. L. மூடி (1837-1899):
''பைபிள் இல்லாத நாள் பாழான நாள்!''

## 3. வேதத்தைப் படிக்கையில் சோம்பல் இருக்கக்கூடாது.

Do not be lazy while studying the Bible.

■ கல்வியுலகில் தேறவேண்டுமானால்,
அறிவுக் கூர்மையும் கடின உழைப்பும் தேவை.

வேத ஆராய்ச்சிக்கு,
அகத்தூண்டுதலும் சிரத்தையெடுத்தலும் தேவை.

நாம் வேத வாக்கியங்களை வெறுமனே ''வாசிக்க'' அல்ல,
''ஆராய்ந்துபார்க்க'' அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நீதி 2:3-5 ... *கூப்பிடு ... அழைத்து ... நாடி ...*
***புதையல்களைப்போல*** *தேடி ...*

ஆற்றோரம் கிடைப்பது ''கூழாங்கற்கள்தான்'' —
ஆழ்கடலுக்குள் சென்றால்தான் ''முத்துக்கள்'' கிடைக்கும்.
Pebbles vs. Pearls

வேத ''ஆராய்ச்சி'' தரும் நன்மைகள் கொஞ்சநஞ்சமல்ல —
ஏசா 34:16

அ) *''ஒன்றும் தவறாது''* — நிச்சயம்
ஆ) *''ஒன்றும் ஜோடி இல்லாதிராது''* — தெளிவு

திருமறையே திருமறையை விளக்கும்.

D. L. மூடி: ''வேதமே வேதத்திற்கு இணையற்ற வியாக்கியானம்.''

பெரோயாவிலுள்ள விசுவாசிகளின் அனுபவம் இதுவே —

அப் 17:10,11 ... *தெசலோனிக்கே கிறிஸ்தவரைவிட நற்குணசாலிகள்*
:12 ... *''ஆதலால் ... அநேக* ***கிரேக்கர்*** (ஞானம்)
***கனவான்களாகிய*** (செல்வாக்கு) *அநேகர்*

லூக்கா இவ்விரு குழுவினரையும் **ஒப்பிடுவதேன்?**
வெறுமனே வாசிப்பதும் கேட்பதும் போதாது என்று வலியுறுத்தவே.

■ வேதப் புத்தகம் முழுவதும் எழுதப்படுமுன்னரே *''கருத்தாய் ஆராயும் பழக்கம்''* தேவ மனிதரிடம் இருந்து வந்திருக்கிறது

(1 பேது 1:10-12; யோ 7:52)

■ தீவிர வேத ஆராய்ச்சியில் ஈடுபடுவது எப்படி —

**உதவிகள்**

அ) அடிக்கோடிடுங்கள் ... அகன்ற ஓரங்களுள்ள வேதங்கள்,
பெரிய எழுத்துக்கள்,
நல்ல பந்துமுனைப் பேனா, முதலியன

ஆ) குறிப்பெடுங்கள் ... குறிப்பேடுகள், நாட்காட்டி ஏடுகள்.
வாசிக்கும்போது, நான் குறிப்பேட்டில்
எழுதுவது எளிதில் மனனமாகிறது.

இ) ஆராய்ச்சி நூல்களைப் பயன்படுத்துங்கள்:

☐ மொழியாக்கங்கள் — பொருள் தெளிவு
NKJV / NIV / ESV / NLT / Amplified
*திருவிவிலியம்*
இணை மொழியாக்க வேதங்கள் (Parallel Bibles)

☐ வேத அகராதிகள் — பின்னணி ... கலாச்சாரம்
*Zondervan Pictorial Bible Dictionary*
*Holman Illustrated Bible Dictionary*
*Unger's Bible Dictionary*

☐ ஆராய்ச்சி வேதங்கள் — முகவுரைகள்/சுருக்கக் குறிப்புகள்/விளக்க வரிகள்

- *ஆய்வுரை வேதாகமம்*
- *நிறைவாழ்வு வேதாகமம்*
- *வாழ்வியல் விளக்க வேதாகமம்*
- *NIV Study Bible*
- *NKJV Study Bible*
- *ESV Study Bible*

☐ வேதாகமச் சொல்லகராதிகள் — இணையான வசனங்கள்

☐ வேதாகம வியாக்கியானங்கள் — விளக்கவுரை
*Matthew Henry Bible Commentary*

☐ *Encyclopedia of Bible Difficulties*

சொந்த சாட்சி: இறையியல் கல்லூரியில் பயிலாத நான்
இப்படித்தான் விவிலியத்தைப் படிக்கிறேன்.

ஒரு தவறான கருத்து:

இவ்வித ஆராய்ச்சி உதவி நூல்களெல்லாம் எனக்குத் தேவை யில்லை; எனக்கு எல்லாம் ''பரத்திலிருந்து'' வந்துவிடும்!

தவறாய் மேற்கோள் காட்டப்படும் வசனம்: 1 யோ 2:27
சூழமைவு: வச 26 ... *வஞ்சிக்கிற போதகர்களைக்* குறித்தது இது.

நமக்கு இரண்டும் தேவை —

ஆ) நீங்களாகவே படியுங்கள்
ஆ) உதவி நூல்களைப் பயன்படுத்துங்கள்

(உ-ம்) தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதியது:

அ) நீயே ஆராய்ந்து படி (1 தீமோ 4:13,15)
*''வாசித்தல் ... தியானித்தல் ...''*

ஆ) பிறரது உதவி நாடு (2 தீமோ 2:2)
*''என்னிடம் கற்றவை ...*
*பிறருக்குப் போதிக்க ... ஒப்புவி ...''*

இன்று உயிரோடிருக்கும் சபை மேய்ப்பர், பிரசங்கிமார், போதகர்
ஆகியோரைக் ''கேட்டறியலாம்.''

முற்காலங்களில் இருந்தவர்களுடையதையோ
''வாசித்தறியத்தான்'' முடியும்.

■ நம்பகமான வேத ஆராய்ச்சி நூல்களைத் தெரிந்தெடுக்க, ஆசிரியரது *“Unless someone guides me ...”*
என்ற சிறு நூலைப் படியுங்கள்.

## 4. சொந்த அறிவையே சார்ந்திருக்கக்கூடாது.

Do not depend solely on your intellect.

- திருமறையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீகப் புத்தகம் —

*பரிசுத்த மனிதர் ... பரிசுத்த ஆவியினால் ...* 2 பேது 1:20,21
அதாவது, எழுதியவர்கள் மனிதர், இயக்கியவர் கடவுள்

(உ-ம்) இது தேவனது அகத்தூண்டுதலாலேயே எழுதப்பட்ட
தென்பது இரண்டே அத்தியாயங்கள் கொண்ட ''ஆகாய்'' புத்தகத்தில்
குறைந்தது 25 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

வேதத்தின் 66 புத்தகங்களும் ஏறத்தாழ 40 ஆசிரியர்கள் எழுதியவை—
சில ஆசிரியர்களுக்கிடையே 1000 ஆண்டுக்குமேல் இடைவெளி!
அவர்களை எழுதத் தூண்டியவரும், இயக்கியவரும்,
அவர்கள் எழுதியபோது கண்காணித்தவரும் தேவனே.
எனவேதான் வேதத்திற்குள்ளே ஒன்றுக்கொன்று முரண்பாடு கிடையாது.

- தெய்வீகப் புத்தகம் தெய்வீக உதவியின்றிப் புரியாது.
எனவேதான் சங்கீதக்காரன் இவ்விதம் ஜெபித்தான் —

சங் 119:18 ... *''என் கண்களைத் திறந்தருளும் ...''*
:125 ... *''அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்''*
இவன் வேத ஆசிரியரில் ஒருவனாயிருந்தும் இப்படி ஜெபித்தான்!

*''ஏன் கண்கள் **திறக்கப்படவேண்டும்?**''*
நமது முதல் பெற்றோரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, மனுக்குலம்
அனைத்தும் ''ஆன்மீகக் குருட்டுத்தனத்திற்குள்'' மூழ்கியது —
2 கொரி 4:4 ... *இவ்வுலகின் தேவனானவன் குருடாக்கிவிட்டான்.*

நாம் கிறிஸ்துவிடம் திரும்பும்போது,
சுவிசேஷத்தைப் புரிய கண்களில் **முதல்** தொடுதல் (வச 6);
தேவ வசனத்தின் பிற சத்தியங்களைப் புரிந்துகொள்ள
**தொடர்ந்து** தேவனது பல தொடுதல்கள் நமக்குத் தேவை.

■ படித்த மேதையைப் போல

திருமறையைத் திறக்கிறவர்களை ஆண்டவர் மதிப்பதேயில்லை —

லூக் 10:21 ... எழுபது சீடர் குதூகலமாய்த் திரும்பிவந்தபோது ...
*''ஞானிகளுக்கு மறைத்து ... குழந்தைகளுக்கு வெளிப்பாடு ...''*
இச்சீடரில் பெரும்பாலானோர் படியாதவர்/பயிலாதவர்.

எல்லாம் எனக்குத் தெரியும் என்ற மனப்பான்மையில்லாது,
குழந்தையுள்ளம் இருப்பதையே தேவன் எதிர்பார்க்கிறார்.

(சிறு பிள்ளைகள் கேள்விகள் கேட்கத் தயங்குவதில்லையே;
சொல்லப்போனால், நிறைய கேட்பார்கள்!)

கீழ்ப்படிதலுள்ள பயபக்தியின் ஆவி அவசியம் —

எரே 6:10 ... *நான் பேசுகிறேன் ... அவர்கள் காதுகள் ...*
ஏசா 66:1,2 *''வானம் சிங்காசனம்...வசனத்திற்கு நடுங்கு...''*

அறிவுச் செருக்கின் விளைவு ஆன்மீக மதியீனம்தான்!

(உ-ம்) சீலோவாம் குளத்தில் கழுவிச் சுகமாக்கப்பட்ட குருடனின்
சம்பவத்தின் முடிவில், இயேசு சொன்னது —
''*காண்கிறவர்கள்* (என்று நினைக்கிறவர்கள்)
*குருடராகும்படி* ...'' (யோ 9:39-41)

*''காணாதவர்கள்''* — அறியாதவர்கள்
*''காண்கிறவர்கள்''* — அகம்பாவிகள்

எனவேதான், பைபிளைக் கூடியமட்டும் **முழங்காலில்** நின்றே
தியானியுங்களென்று இளம் விசுவாசிகளுக்கு அறிவுறுத்துகிறேன்.

■ ஆவியானவரே ஆன்மீகக் காரியங்களைப் போதிக்க முடியும் —

1 கொரி 2:13 ... *ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு*

இல்லாவிடில், நாம் வேதத்தைத் திரித்துக்கொண்டுதான் இருப்போம் —
2 பேது 3:16 ...

இன்று வேதப் போதகர்களைவிட வேதப் புரட்டர்களே அதிகம்!

■ வேதம் ஒரு புதையல் பெட்டி

*கண் ... காணவில்லை ... காது ... கேட்கவில்லை ... இதயத்தில் ... கடவுள் தமது ஆவியானவர் மூலம் ... வெளிப்படுத்தினார் ...''*

1 கொரி 2:9,10

அறிவில் எவ்வளவோ தேறினவர்களும்
தேவனது ஆழ்ந்த காரியங்களைப் புரிந்துகொள்ள முடியாது.

வழிநடத்தி விளக்கமளிக்கும் ஆவியானவரது உதவியின்றி
திருமறைக்குள் சுற்றி நடந்துவரவேண்டாம்!

பைபிளைத் திறக்கும்போதெல்லாம் செய்யவேண்டிய ஜெபம் —

*''உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படி
என் கண்களைத் திறந்தருளும்''* (சங் 119:18)

**அத்துடன்,** ஒவ்வொரு முறை தியானித்து முடிந்ததும்,
பரிசுத்தாவியானவர் தந்த உதவிக்காய்த் தேவனைத் துதியுங்கள்.

■ தரங்கம்பாடி G. சாமுவேல் ஐயர் அவர்களது பாடல்:

*வேதமே, என்ன சொல்லுவேன்?*
*நின் மாட்சியை!*

*கண்முன் நீ எழுத்தானால் கரையிலா ஞானம்;*
*காந்தி நற்பனி மழை கசிந்திடும் வானம்;*
*புண் மனமுடை யோர்க்குப் புகழருந் தானம்;*
*புசித்திட கசித்திட ருசித்திடும் பானம்!*

*சிறியவர் பெரியவர் செல்வர்கள் வலியார்,*
*தீரர்கள் வீரர்கள் சீரியர் எளியார்,*
*அறிஞர்கள் அல்லவர் ஆடவர் மெலியார்,*
*அனைவரும் அருந்திட அருந்திடச் சலியார்!*

(கிறிஸ்தவக் கீர்த்தனைகள், 249)

## 5. வசனச் சூழமைவை மறந்துவிடக்கூடாது.
Do not ignore the context of the Bible text.

- இடம் பொருள் காலம் கவனியா வசன வியாக்கியானம் மாயமே!
  A text out of context is a pretext!
- *"சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து ..."* (2 தீமோ 2:15)
  *"பகுத்து"* = கூடாரம் தைக்கத் தோல்களைச் சரியாய் வெட்டி ...
  கூடாரத் தொழிளாளி ... தோல்துண்டு ஒட்டு ...
  வெட்கப்படாதவனாய் ... தையல்காரன் ... வேதப் போதகன்
- திருமறை ஒரு பழைய புத்தகம் மட்டுமல்ல, புராதனப் புத்தகம் —
  முதல் 5 புத்தகங்கள் — கி.மு. 1400 (3400 ஆண்டுகளுக்கு முன்)
  இறுதிப் புத்தகம் — கி.பி. 90 (1900 ஆண்டுகளுக்கு முன்)
  ஏறத்தாழ 3000 ஆண்டுகள் இடைக்காலம்!
- சூழமைவுக்கடுத்த வியாக்கியானம் என்றால் என்ன?
  கேட்கவேண்டிய 5 கேள்விகள் —
  அ) அதைச் சொன்னது **யார்?** (Who?)
  (உ-ம்) நிக்கொதேமு: *"இவ்வித அற்புதங்கள் செய்யான்"* (யோ 3:2)
  — எகிப்தின் மந்திரவாதிகளும் அற்புதங்கள் செய்தனரே.
  — *கள்ளத் தீர்க்கரின் "பெரிய" அடையாளங்களைக்* குறித்த
  இயேசுவின் எச்சரிப்பு (மத் 24:24)
  — பவுல்: அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்து
  *"எல்லா வல்லமை ... அடையாளங்கள் ...*
  *பொய்யான அற்புதங்கள்"* (2 தெச 2:9)
  நிக்கொதேமு ஒரு மார்க்கத் தலைவனாயிருந்தும்,
  ஆன்மீகக் காரியங்களை *"அறியாதவனாய்"* இருந்தான் —
  இயேசு: *"நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் ...*
  இகத்தின் காரியங்களே புரியவில்லையே!" (யோ 3:10,12)

ஆ) **யாருக்கு, யாரைக் குறித்துச்** சொல்லப்பட்டது? (To whom?)

எடுத்துக்காட்டாக, திருமறையின் வாக்குகள் —
சங் 34:20 ... *''அவன(ர)து எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை''*

பொதுவாக ஆண்டவரது பாதுகாப்பை நாம் உரிமைபாராட்டலாம்; ஆனால் இந்த வாக்கு பிரத்யேகமாக மேசியாவுக்கே உரியது —

யோ 19:32 ... *மனந்திரும்பாத கள்ளன், மனந்திரும்பிய கள்ளன் ஆகிய இருவரது கால்களும் முறிக்கப்பட்டன.*
:33 ... *இயேசுவின் கால்கள் மட்டுமே முறிக்கப்படவில்லை! ஏனென்றால், வச 36!* (யாத் 12:46)

விபத்துகள், அறுவை சிகிச்சைகள், இரத்தசாட்சி மரணங்கள் ...

இ) அது **எப்பொழுது** சொல்லப்பட்டது? (When?)

(உ-ம்) *பணப்பை எடுத்துச் செல்லவேண்டாம்* —

12 சீடரைப் புறவினத்தாரிடமல்ல, இஸ்ரவேலரிடம் அனுப்புகையில் (மத் 10:9,10)

பின்னர், (லூக் 22:35,36) *பணப்பை எடுத்துக்கொள்ளுங்கள்*

ஈ) அது **எங்கு** சொல்லப்பட்டது? (Where?)

கலாச்சாரம்— *''பரிசுத்த முத்தத்துடன் வாழ்த்துங்கள்''* (ரோ 16:16)
மத்தியக் கிழக்கு நாடுகள் சிலவற்றில் இப்பழக்கம் உண்டு —
அப்படியே ஐரோப்பாவிலும் மேற்கத்திய நாடுகளிலும்.

இந்தியாவுக்கு இது ஒவ்வாது —

சில பகுதிகளில் கைகுலுக்கத் தடையில்லை.
இராஜஸ்தானிலும் இன்னும் சில இந்தியக் கிராமங்களிலும்,
ஆடவருக்கு முன் பெண்டிர் முகத்தை மூடிக்கொள்வர்!

உ) அது **ஏன்** சொல்லப்பட்டது? (Why?)

(உ-ம்) *''நமது குடியிருப்போ பரலோகிலிருக்கிறது''* என்று பிலிப்பியருக்குப் பவுல் ஏன் எழுதினான் (பிலி 3:20)?

— இத்தாலியிலுள்ள ரோம் நகரில் பிலிப்பி நகர் ஓர் அகதி முகாம்; பிலிப்பியருக்கு ரோம வசதிகள் உண்டு, வாக்குரிமை கிடையாது.

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் போல.

தவறான வியாக்கியானம்:

பிலி 3:20ஐ மேற்கோள் காட்டி யேகோவா சாட்சிக்காரர் தேசியக் கொடிக்கு வணக்கம் (salute) செலுத்த மறுத்தனர்.

கிறிஸ்தவர்கள் தேசியவாதிகளாய் இல்லாவிட்டாலும்; நாட்டுப்பற்றுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

■ இவ்விதம், சூழமைவைப் புரிந்துகொள்ள ஐந்து கேள்விகள்:

1. எவர் சொன்னது — நபர்கள் (Persons)
2. எவரிடம் சொன்னது — நபர்கள் (Persons)
3. எப்பொழுது சொன்னது — காலம் (Period)
4. எங்கு சொன்னது — இடம் (Place)
5. எதற்காகச் சொன்னது — நோக்கம் (Purpose)

இதைக் கண்டுபிடிப்பது எப்படி?

அ) கடின வசனங்களுக்கு அந்த முழு அத்தியாயம் அல்லது முழுப் புத்தகத்தையும் வாசியுங்கள்.

ஆ) ஆராய்ச்சி வேதங்களிலுள்ள புத்தக அறிமுகவுரைகளைப் படியுங்கள்.

இவ்விதம் வேதத்தைப் படிக்கத் துவங்குங்கள் —
அது மிகுந்த பரவசமும் பக்திவிருத்தியுமான அனுபவமாயிருக்கும்!
பைபிள் இல்லாது **இருக்க முடியாது** என்றாகிவிடுவீர்கள்!

*''அவரது வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அதில் தியானமாயிருக்கிறவன் பாக்கியவான்''* (சங் 1:1,2)

## 6. வேதத்தைவிட அனுபவங்கள் முக்கியமாகக்கூடாது.

Do not place experiences above the Scriptures.

■ உங்களுக்குப் பொருந்துமாறு திருமறையைத் திரிக்கக்கூடாது.

— உங்கள் அனுபவங்களுக்கு நிரூபணமாயிருப்பதற்காக
வேத வசனங்களைத் தேடக்கூடாது;
மாறாக, வேதத்தை வைத்து அனுபவங்களைச் சோதித்தறியுங்கள்.
வேதமே உரைகல்! (touchstone)

— எந்த அனுபவத்தையும் வைத்துக்கொண்டு
ஒரு சத்தியத்தையோ உபதேசத்தையோ நிலைநாட்டக்கூடாது;
மாறாக, வேதம் அங்கீகரிக்கும் அனுபவங்களையே ஊக்குவியுங்கள்.

முக்கிய சட்டம்: அனுபவத்திலிருந்து சத்தியமல்ல,
சத்தியத்திலிருந்து அனுபவம்

— ''வார்த்தைதான்'' ''மாம்சமாக'' வேண்டும்;
மாம்சமல்ல வார்த்தையாகவேண்டியது!
*''ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கும்''* (யோ 3:6)
அதுதான் திருவசனம் —
*''நான் சொல்லிய வார்த்தைகள்... ஆவியாயும் ஜீவனாயும்''* (யோ 6:63)
*''மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாய்த்தானிருக்கும்!''* (யோ 3:6)

■ இச்சத்தியத்தை விளக்கச் சில கருகலான எடுத்துக்காட்டுகள் —

☐ மறுரூப மலையில் பேதுருவின் அனுபவம் 2 பேது 1:16-21
ஒரு நிசமான அனுபவம்; ஆனாலும் *''அதிக உறுதியான வசனம்''*

☐ மூன்றாம் வானம் வரை பவுல் எடுத்துக்கொள்ளப்பட்டது
2 கொரி 12:1-4 ... *''நான் அறியேன்''* (மும்முறை)

அவன் வேதத்தின் சத்தியங்களைப் போதிக்கும்போதோ —
கலா 1:11,12... *மனிதனால் பெற்றதுமில்லை... கற்றதுமில்லை*
— அவ்வளவாய் அடித்துச் சொல்லுகிறான்!

☐ சொப்பனங்கள், தீர்க்கதரிசனங்கள் (எரே 23:28,29)

*''தீர்க்கதரிசி ... சொப்பனம் ... என் வார்த்தை ... கோதுமை ... பதர் ... அக்கினி ... சம்மட்டி ...''*

☐ பழம்பெரும் பாரம்பரியங்கள் vs. சத்தியம்

மாற் 7:9-13...*''தேவனுடைய கற்பனை ... பாரம்பரியங்கள்''*

*''கொர்பான்''*

■ நமது வாழ்விற்கும் ஊழியத்திற்கும் *''தூக்குநூல்''* விவிலியமே.

(உ-ம்) *''மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி ...''*
(2 தீமோ 2:5)

நாம் அநேகக் காரியங்களை
வைராக்கியத்தாலும், மனவுற்சாகத்தாலும் செய்துவிடுகிறோம்;
ஆனால் திருவசனமே — *''அறுவை சிகிச்சைக் கத்தி''* —
*ஆத்துமாவையும் ஆவியையும்கூட பிரித்துவிடுவது*

■ திருமறைக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள், வெளிப்பாடுகள் குறித்து எச்சரிக்கை —

1 கொரி 4:6 ... *''எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாமல் ...''*

மாறாத சட்டம்: வேதத்தோடு கூட்டாதே; அதிலிருந்து குறைக்காதே!

திருமறை பிரதானமானது மட்டுமல்ல; போதுமானதும் (யோ 20:30,31)
*''நித்திய ஜீவன்''* பெற அது போதும்.

ஒரு சொப்பனம், தரிசனம் அல்லது அனுபவம் முழுக்க முழுக்க திருமறைக்கு இசைவாயிராவிடில்,

அதைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளாதிருங்கள்;
அது உங்களோடேயே இருக்கட்டும்.

■ பிரசங்கியார் பவுலானாலும் பெரோயரைப் போலிருங்கள் (அப் 17:11). பவுலே சொன்னதைக் கவனியுங்கள்:

*''நாங்களோ ஒரு தேவ தூதனோ வேறே சுவிசேஷம் ...''* கலா 1:8
அதாவது, மூல வெளிப்பாட்டிற்கு மாறுபட்ட சுவிசேஷம்

## எப்படித் தியானிக்கக்கூடாது?

### 7. மறைவானவற்றைத் தோண்டித் துருவக்கூடாது.

Do not probe into the secret things.

- சில காரியங்கள் வேதத்தில் வெறுமனே ''சொல்லப்பட்டுள்ளன,'' ஆனால் போதுமான அளவு ''விளக்கப்படவில்லை.''

  இவ்விதக் காரியங்களில் அளவுக்குமீறி ஆர்வம் கூடாது.

  *''மறைவானவை ... கர்த்தருக்கு உரியவை''* (உபா 29:29).

  திருமறை நிறுத்துமிடத்தில் நீங்களும் நிறுத்திவிடுங்கள்;
  அது அமைதியாயிருக்குமிடத்தில் நீங்களும் அமைதியாயிருங்கள்.

  கடவுளுக்கடுத்த காரியங்களில் *''பசி தாகம்''* இருக்கவேண்டும்;
  ஆனால் ஒரு சிலவற்றில் அளவுக்கு மீறிய ஆர்வம் ஆபத்து —

  கொடுக்கப்பட்ட நன்மைகளை அனுபவிப்பதற்குப் பதிலாக
  விலக்கப்பட்டதைக் குறித்து மனிதனின் ஆர்வம்
  துவக்க முதலே இருந்துவந்திருக்கிறது (ஆதி 3:11)

  (உ-ம்) நாளுக்கொரு புதுக்கனி என்றாலும் அத்தனைவிதக்
  கனிகளையும் ருசிக்க ஆதாமுக்கு 1000 ஆண்டுகள் போதாதே!

- பவுலின் முள் — 2 கொரி 12;7

  இதைக் குறித்து நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருப்பது —

  அ) அந்த முள் எங்கே இருந்தது? *''மாம்சத்தில்''* (உடலில்)

  ஆ) அந்த முள் ஏன் கொடுக்கப்பட்டது? *''தன்னை உயர்த்தாதபடி''*

  இ) அந்த முள் எத்தகையது? *''சாத்தானின் தூதன்''*

  இவ்வளவுதான் —

  அந்த முள் **''என்ன''** என்று நமக்குச் சொல்லப்பட**வில்லை.**

  அது என்னவென்று கண்டுபிடிக்க ஜெபித்தெல்லாம் பார்க்காதீர்.
  அதின் படிப்பினைதான் முக்கியம்: *''கடவுளின் கிருபை போதும்!''*

■ **எப்பொழுது** இயேசு வருவார் என்பது இன்னோர் எடுத்துக்காட்டு.
அந்தக் காலம் **எப்படி** இருக்கும் என்றே இயேசு சொல்லியுள்ளார் —

மத் 24:3 ... *உமது வருகைக்கு அடையாளம்?*
*''எப்பொழுது''* என்றும் கேட்டார்கள்.

அவர் எவ்வித அடையாளங்களும் நிலவரங்களும் இருக்கும் என்றார்:

— *வஞ்சிக்கப்படுதல்* (வச 4,5)
— *யுத்தங்கள்* (வச 6,7)
— *சந்திரன் ... சூரியன் ... நட்சத்திரங்கள்* (வச 29)

***''ஆனால்** அந்த நாளையும் வேளையையும் எவரும் அறியார்''* (வச 36)
*''மனுமைந்தனுக்குக்கூடத் தெரியாது''* என்கிறது ஒரு மொழியாக்கம்.

பரமேறுதலுக்கு முன்னரும் இயேசு இதைத் திரும்பச் சொன்னார் —
அப் 1:6,7
*''நீங்கள் அறியவேண்டியது **இல்லை!**''* (தேவையில்லை!)

முக்கியமானது என்னவென்றால் ஆயத்தமே!
''நாள்'' குறிக்கக்கூடாது; பணிக்குக் ''குறி'' நியமிக்கவேண்டும் (1:8).

■ ''கடைசிக் கால'' வெளிப்பாடு என்றெல்லாம் பேசுகின்றனர் —
வேதத்தின்படி அந்த வெளிப்பாடு என்ன?

அ) அது இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு
— எபி 1:1,2

கிறிஸ்துதான் மனுக்குலத்திற்குத் தேவனது இறுதி வெளிப்பாடு —
(உ-ம்) பேதுரு: *''ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்''*

பரிசுத்த ஆவியானவரும்கூட தாமாக ஒன்றும் பேசமாட்டார்;
கிறிஸ்துவினுடையதில்தான் எடுத்து அறிவிப்பார் (யோ 16:13,14).

உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் —
*''வேதத்தில் தம்மைக் குறித்துச் சொல்லப்பட்டவை''* (லூக் 24:27)

இன்னொரு வெளிப்பாடு —

ஆ) புறவினத்தாரும் திருச்சபையில் அங்கமாவர் —
*''உடன் பங்காளிகள்''* (எபே 3:3-6)

இத்தனை ஆண்டுகள் நமக்குக் கடவுள் சொல்ல மறந்துவிட்டார்;
திடீரென அவருக்கு ஞாபகம் வந்துவிட்டது — அப்படியா?

■ நமது அறிவு குறைவுள்ளது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும் —
1 கொரி 13:9,10
*''நிறைவானது''* இனிதான் வரவிருக்கிறது.
கிறிஸ்துவே நிறைவானவர்.
நமது ஆவி, ஆன்மா, உடல் பூரணப்படுத்தப்படும் (1 தெச 5:23).
பழைய வானம் பழைய பூமி அகற்றப்படும்.
— பரிபூரண புதிய வானம் புதிய பூமி உண்டாகும் (2 பேது 3:10-13)
*எல்லாம் சீர்திருத்தம் பெறும்* (அப் 3:20,21)

■ வெளிப்படுத்தப்பட்டவைகளை அப்பியாசிக்க முயலுங்கள்.
மீதியானவற்றை ஆண்டவரிடம் விட்டுவிடுங்கள்.
வரம்புகளை மீறி விலக்கப்பட்ட பகுதிகளுக்குள் சென்றுவிடாதீர்கள்.
(உ-ம்) பரலோகையும் நரலோகையும் பற்றி நாம்
அறியவேண்டிய யாவும் வேதத்தில் கொடுக்கப்பட்டாயிற்று.
*கண் காணவில்லை ... கர்த்தரோ வெளிப்படுத்தினார்*
(1 கொரி 2:9,10)
பரலோகம் சென்றுவந்தேன் என்போர் பின்னால் போகாதீர்!

*''மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்ட''* பவுல்கூட
எங்கும் அதையே சொல்லித் திரியவில்லை!

2 கொரி 12:3,4 ... *பரதீசு ... சொல்லக்கூடாத வார்த்தைகள் ...*
சுவிசேஷத்தை மட்டும் பிரசங்கித்து அலைந்தான்.

இரட்சண்ய சேனை நிறுவனர் வில்லியம் பூத் (1829-1912):
''நமக்குத் தேவை பரலோகக் காட்சியல்ல, நரகத்தின் காட்சியே!''

அப்படிக் கிடைத்தால் இதுவரையில்லாத அளவு
நற்செய்திப்பணியில் விறுவிறுப்பும் தீவிரமும் காட்டுவோம்!

— பரலோகத்தைப் பற்றியல்ல, நரகத்தைப் பற்றியே
இயேசு அதிகம் பேசினார்!

## 8. ஜெப வாழ்வை அலட்சியப்படுத்தக்கூடாது.

Do not neglect prayer life.

■ சிலர் அதிக நேரம் வேத ஆராய்ச்சியிலும்,
ஜெபத்திலோ குறுகிய நேரம் மட்டுமே செலவழிப்பர்;

மற்றும் சிலர் அதிக நேரம் ஜெபத்திலும்,
வேத ஆராய்ச்சியிலோ கொஞ்ச நேரமே செலவிடுவர்.

இரண்டு ஓரங்களும் தவிர்க்கப்படவேண்டியவை.
இவ்விரு பயிற்சிகளும் சமநிலைப்படுத்தப்படவேண்டும்.

□ ஒரு சிறந்த எடுத்துக்காட்டு —

நெகே 9:3 ... எஸ்றா, நெகேமியா காலச் சீர்திருத்தம்.
எருசலேம் மதில்கள் திரும்பக் கட்டப்பட்டன.
இறைமக்களின் பெரிய கூடுகை (வச 1)
3 மணி நேரம் வேத வாசிப்பு
3 மணி நேரம் தொழுகை

தேவன் பேசுவதைக் கேட்கவும்,
தேவனோடு பேசவும் தங்கள் நேரத்தைச் சமமாய்ப் பங்கிட்டனர்.
தேவனோடு உறவாடும் இருவழிப் பாதை அனுபவம்!

இது ஒரு **கூடுகையைப்** பற்றிய எடுத்துக்காட்டு.

□ தனி நபரின் அனுபவத்திற்கு எடுத்துக்காட்டு உண்டா?

தானி 9:2,3 ... *"புத்தகங்களால் அறிந்து ... ஜெபம் ... வேண்டுதல்"*

எஸ்றா 7:10 ... *வேதத்தை ஆராய எஸ்றாவின் இருதய ஆயத்தம்*

எனவேதான், வேதத்தை முடிந்த வேளைகளிலெல்லாம்
முழங்காலில் நின்று தியானிக்க மக்களுக்கு அறிவுறுத்துகிறேன்.

(உ-ம்) இங்கிலாந்து நாட்டு ஜார்ஜ் முல்லர் (1805-1898)— 93 வயது.
48 முறை வேதத்தை முழங்காலில் வாசித்திருக்கிறார்.

- வேதத்திலுள்ள எப்புத்தகத்தையும் ஜெப சிந்தையோடு படித்தால் கடவுளின் குணாதிசயங்களைக் கூடுதல் அறிந்துகொண்டு அவரை அர்த்தத்துடன் தொழுதுகொள்ளத் துவங்குவோம் —

(உ-ம்) தானியேலின் புத்தகம்

தேவன் ...

(a) *மகத்துவமானவர்* — 9:4 (b) *நித்தியமானவர்*— 4:3,34; 6:26; 12:7
(c) *மன்னிப்பவர்* — 9:10 (d) *பெரியவர்* — 2:45; 9:4
(e) *ஜீவிக்கிறவர்* — 6:20,26 (f) *இரக்கமுள்ளவர்* — 9:10,18
(g) *வல்லவர்* — 4:3; 9:15 (h) *பலமுள்ளவர்* — 2:20
(i) *நீதிபரர்* — 9:7,14,16 (j) *ஏகாதிபத்தியர்* — 4:17; 5:21
(k) *ஞானமுள்ளவர்* — 2:20

- படித்துக்கொண்டு மட்டுமிருந்தால்,
வறண்டுபோவீர்கள் — தலையறிவு
ஜெபித்துக்கொண்டு மட்டுமிருந்தால்,
கால் தரையில் நிற்காது — கேள்விக்குரிய வெளிப்பாடுகள்

ஊழியர் பலர் நீண்டகால உபவாசத்திற்குப் பின்னர் கேள்விக்குரிய வெளிப்பாடுகளோடு வெளிவருவதேன் என்பதற்கு இங்குதான் பதிலிருக்கிறது.

ஆனால் 40 நாடகள் உபவாசத்தின்போது இயேசு —
*" ... தேவனுடைய வாயிலிருந்து ... ஒவ்வொரு **வார்த்தை**"* (மத் 4:4)

வேதத் தியானம் ஜெப ஆவியில் நனையும்போதுதான்
தலையறிவு இதய அனுபவமாய் மாறும் —
லூக் 24:27,32
இயேசுவின் பிரசன்னத்தில் மறைநூலைப் படித்தல் —
*"... இதயங்கள் கொழுந்துவிட்டு எரிந்தன ..."*

☐ எனது சொந்த சாட்சி —

வேதத் தியானத்திற்கும் ஜெபத்திற்கும் பாதி பாதி நேரம் என்று கண்டிப்பான சட்டம் வைத்துக்கொள்வதில்லை.

சில நாட்கள் நெடுகவே வேதத் தியானம்;
பின்னர் சில நாட்கள் நெடுகவே ஜெபத்தில் தரித்திருப்பு.

எப்படியாயினும், கருகலான வேத ஆராய்ச்சியாயிருந்தாலும் **ஜெப ஆவியைத்** தக்க வைத்துக்கொள்ள முயலுகிறேன்.

திருவசன அறிவும் ஆன்மீக அகத்தூண்டுதலும் எப்பொழுதும் இணையாகவே செல்லவேண்டும்.

- ஒரு நடைமுறை ஆலோசனை —

  வேதத் தியானத்தில் கிரமமாயிருந்தும் ஆன்மீக வாழ்வில் **வறட்சியை** உணர்ந்தால் ஜெப வேளையை அதிகரியுங்கள்.

  ஆன்மீக வாழ்வில் **பலக்குறைவு** காணப்பட்டால் வேதத் தியானத்தைக் கூட்டுங்கள்.

  இவையிரண்டும் நீங்கள் பறக்க இரு இறக்கைகள்!

- ஒரு கல்லூரி மாணவனாக (1962-1970) திருமறையுடன் நெடுநேரம் உபவாசத்திலும் ஜெபத்திலும் காடுகளில் செலவழிப்பேன். அப்பொழுதுதான் முக்கியமான வேத சத்தியங்களில் எனக்குப் பிடிப்பு கிடைத்தது.

- வேதத்தின் வசனங்களையே பயன்படுத்தி ஜெபிக்கப் பழகுங்கள் —
  (உ-ம்) யோனாவின் ஜெபங்களும் சங்கீதமும் —
  சங் 3:8; 5:7; 18:4-19; 30:2,3; 31:6,22; 39:9;
  42:6,7; 59:17; 69:1,2; 120:1; 142:3; 144:2

- **முடிவுரை**

உங்கள் வேதத் தியானம் ஜெபத்தினால் நிறைந்திருக்கட்டும்;
உங்கள் ஜெபம் வேதத்தினால் நிறைந்திருக்கட்டும்.
வேதத் தியானமும் ஜெபமும் ஒன்றுக்கொன்று அனலூட்டும்.

## 9. கீழ்ப்படியத் தாமதிக்கக்கூடாது.

Do not delay obedience.

- கிறிஸ்தவர்களாகிய நமக்கு இன்றையத் தேவை
  கூடுதல் வெளிப்பாடல்ல, கூடுதல் கீழ்ப்படிதலே!

தாமதமான கீழ்ப்படிதல் —

சங் 119:60 ... *"நான் விரைகின்றேன்"*

என்னே சாட்சி!

ஆதி அப்போஸ்தலரும் சீடரும் இதை வலியுறுத்தினர் —

(உ-ம்) திருமுழுக்கைக் குறித்து சவுலான பவுலிடம் அனனியா:

அப் 22:16 ... *"நீ தாமதிக்கிறதென்ன?"*

எனவேதான், அவர்கள் *"நள்ளிரவில்"*கூட திருமுழுக்கு கொடுத்தனர்

— பிலிப்பிய சிறையதிகாரி (அப் 16:33)

*"வனாந்திரம்"* என்றும் பார்க்காது திருமுழுக்கு கொடுத்தனர்

— எத்தியோப்பிய மந்திரி (அப் 8:38)

- விதைக்கிறவனுடைய உவமையைத் தொடர்ந்து,
  உடனே இயேசு எச்சரித்தது —

*"நீங்கள் கேட்கிற **விதம்** குறித்துக் கவனியுங்கள்!"* (லூக் 8:18)

பொதுவாக இவ்வுவமையை நற்செய்தியறிவிப்புக்கே பயன்படுத்துகிறோம்.

ஆனால் இயேசு இதைத் "தமது சீடரிடமே" சொன்னார் (வச 9,18)

திடீரென்று வேத ஆராய்ச்சியில் நமக்குப் புத்துணர்வும்
பரவசமும் குறைவதற்குக் காரணம் இங்குதானிருக்கிறது —

*"உள்ளவன் (கீழ்ப்படிகிறவன்) எவனோ,*
*அவனுக்குக் கொடுக்கப்படும்"*

இதைத் தொடர்ந்துவரும் சம்பவம் —

*"அவரது தாயாரும் சகோதரரும் ... கேட்டு **செய்பவர்**"* (வச 19-21)

கீழ்ப்படிதலில் தேக்கம்!
பரீட்சைகளில் தோல்வியடைவோர் மேல் வகுப்பிற்கு
அனுப்பப்படுவதில்லை!

கீழ்ப்படிய மனமற்றவர்களோடு ஆண்டவர் தமது நேரத்தையும்
வெளிப்பாடுகளையும் வீணடிப்பாரோ?
அவர் நம்மைக் கடந்து சென்றுவிடுவார்! (ரோ 10:20.21)
சரித்திரத்தில் எத்தனையோ பேரை அவர் கடந்து சென்றுள்ளார் —
(உ-ம்) சவுலரசன் (1 சாமு 15:28)

- கீழ்ப்படிதலின் மனப்பான்மை இருக்கும்போதுதான்
இறைவார்த்தையைப் புரிந்துகொள்ளுதல் ஆழப்படும்.

யோ 7:17 — *''**செய்ய** மனதுள்ளவன் அறிந்துகொள்வான்!''*
வெறுமனே **அறிய** மனதுள்ளவன் அல்ல!

வசனத்தைப் பகுத்துக் கூறுபோட்டுக்கொண்டிருப்பதால் அல்ல,
அதற்குக் கீழ்ப்படியும்போதுதான் அது நன்கு புரியும்!

திருவசனம் நமக்கு விளங்காவிட்டாலும்,
அதற்குக் கீழ்ப்படிவதே நமக்குப் பேராசீர்வாதம் கொண்டுவரும் —
வெளி 1:3 ... *''வாசிக்கிறவன் ... கேட்கிறவன் ...
கைக்கொள்ளுகிறவன்''*

அக்காலத்தில் எல்லாருக்கும் வேதாகமப் பிரதி இல்லாததால்,
ஒருவன் ''வாசிக்க'' மற்றவர்கள் ''கேட்பார்கள்!''

''வாசிப்பதற்கும்'' ''கைக்கொள்ளுவதற்கும்'' இடையில்
''புரிந்துகொள்ளுதல்'' எனும் சொல் இல்லை என்பதைக் கவனிக்க!

யாக் 1:25... *''வசனத்தைக் கைக்கொள்ளுவோர் ... ஆசீர்வாதம்''*

கீழ்ப்படியாமை ஆபத்து ... அது *''வஞ்சகத்திற்கு''* நடத்தும் (வச 22)

கீழ்ப்படிதலுக்கு ஓர் உயரிய எடுத்துக்காட்டு: மரியாள்
*''இது எப்படி ஆகும்?''* லூக் 1:34,35,38

இறைவார்த்தையைப் புரியுமுன்னரே அதை ஏற்றுக்கொண்டாள்!
விளைவு: 10 மாதங்கள் இயேசுவைக் கருவறையில் கொண்டிருந்தாள்!

- சங்கீதப் புத்தகத்தில்தான் திருவசனத்தைக் குறித்த அதிகம் குறிப்புகள். அவற்றில் ''கீழ்ப்படிதலைக்'' குறிப்பவை மற்றெல்லா வற்றையும்விட அதிகம் —

(உ-ம்) திருவசனம் நேசிக்கப்படவேண்டும்: 21 வசனங்கள்
திருவசனம் அறிவிக்கப்படவேண்டும்: 20 வசனங்கள்
திருவசனம் **கீழ்ப்படியப்படவேண்டும்:** 52 வசனங்கள்

- வேறெந்தத் தலைமுறைக்கும் இத்தனை வேத ஆராய்ச்சி நூல்கள் இருந்ததில்லை —

இந்தச் **சிலாக்கியத்திற்காய்க்** கர்த்தரைத் துதிப்போம்;
ஆனால் சிலாக்கியங்களோடு **பொறுப்புகளும்** உண்டு —

லூக் 12:47,48 ... *''எவனுக்கு அதிகம் கொடுக்கப்படுமோ ...''*
கீழ்ப்படியாவிடில் *''அதிக அடிகள்''*
அதாவது, சிட்சை ... சங் 119:67,71

முடிந்த அளவு ஆராய்ச்சி வேதங்கள், நூல்களை வாங்குங்கள்;
**அத்துடன்** அவற்றைப் படியுங்கள்;
மட்டுமல்ல, காரியத்தின் முடிவை மறந்துவிடாதீர்கள் —
பிர 12:9-13 ... *அநேக நீதிமொழிகள் ... அநேகப் புத்தகங்கள் ... முடிவுரை ... கடமை ... கைக்கொள் ...*

- J.D. Burns (1823-1864) அவர்களது ஜெபப் பாடல்:

*தேவா, சாமுவேலின் சிந்தை தாரும்,*
*முறுமுறுக்காத இனிய விசுவாசம் வேண்டும்;*
*வாழ்விலும் இறப்பிலும் உமக்கே*
*கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்;*
*ஞானிகளுக்கும் மறைக்கப்பட்ட சத்தியங்களை*
*குழந்தைபோல் ஏற்கும் மனது தாரும்!*

- *''கீழ்ப்படிதலே மேல்படி''* என்ற எனது நூலை வாசியுங்கள்.

## 10. வேத அறிவு உங்களிடம் தேங்கிவிடக்கூடாது.

Do not stagnate with your knowledge.

■ நீங்கள் கற்பவைகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளுங்கள் —

கொலோ 3:16 ... அ) *''உங்களில்'' வாசமாயிருப்பதாக*
ஆ) *''ஒருவருக்கொருவர்'' போதித்து ...*

உள்ளே வந்துகொண்டிருக்கும் அளவுக்கு
வெளியே வழிந்துசெல்லாவிடில் தேக்கம் உண்டாகும்.

தொடர்ந்து உள்ளே ஓடி வருவதைத் தேக்கம் தடுக்கும்.
மாறாக —

லூக் 6:38 ... *கொடுங்கள் ... உங்களுக்குக் கொடுக்கப்படும் ...*
நீதி 11:25,26 ... *தானியம் ... நீர்ப்பாய்ச்சுதல் ...*
விவசாயம்: நற்செய்தியறிவிப்புக்கு எடுத்துக்காட்டு

நடைமுறையில் சொன்னால்,
நாம் படித்தவற்றைப் பிறருடன் பகிரும்போதுதான்
நமக்கு அவற்றில் கூடுதல் தெளிவும் வெளிப்பாடும் கிடைக்கும்.

சொந்த சாட்சி:
பைபிளைப் படிக்கும்போது எனக்கு 50% புரிகிறது;
அதைப் பகிரும்போதுதான், படிப்படியாக, மீதம் புரிகிறது.

■ இத்தத்துவம் இரு ஏற்பாடுகளிலும் போதிக்கப்பட்டிருக்கிறது —

☐ ஆபிரகாம் — ஆதி 18:17,19
தேவன்: *''அவன் போதிப்பான் என்று **நானறிவேன்**''*

☐ பவுல் & தீமோத்தேயு — 2 தீமோ 2:2
தான் கற்றவற்றைப் பிறர்க்குத் தீமோத்தேயு *உண்மையாய்க்*
கற்பிப்பானென்று பவுலுக்குத் தெரிந்திருந்தது!

அப்படியே, தங்கள் பிள்ளைகளுக்கு அழியாத சத்தியங்களைக்
கற்பிக்கும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு —

''எளிய'' முறையில் ... ''காலத்திற்கு'' ஏற்றாற்போல்
(நீதி 4:1-4)

(உ-ம்) ஒரு *''பாட்டியின்''* பெயர் சொல்லப்பட்டிருக்கிறது!
2 தீமோ 1:5 *''லோவிசாள்''*

(பிள்ளைகளைப் பள்ளிப் பாடங்கள் படிக்கவைக்க
எவ்வளவு நேரம் செலவழிக்கிறோம்!)

■ ''பிரசங்க பீடத்தையே'' எதிர்பார்த்துக்கொண்டிராதீர்கள்!
சிறு சிறு குழுக்களில், ஒவ்வொருவருக்காய், போதிக்கலாம்.
(தீமோத்தேயு: *''ஒப்புவி''*— ''பிரசங்கி'' என்று இல்லை)... (2 தீமோ 2:2)

(உ-ம்) 1962இல் எனது மறுபிறப்பையடுத்து நான் இப்படித்தான் துவங்கினேன் —

1963-1970: கல்லூரி வளாகத்தில் 5 முதல் 10 மாணவருக்கு நான் தியானித்தவற்றைத் தினமும் பகிர்ந்துகொண்டேன்.

*''கொஞ்சத்தில் உண்மை''* (மத் 25:14-30)

5 தாலந்து — இன்னும் 5 + 1
2 தாலந்து — இன்னும் 2
*''உள்ளவனுக்குக் கூடுதல் கொடுக்கப்படும்''*

அதாவது, **''கொடுப்பவனுக்கு''** (''பெருக்குகிறவனுக்கு'')

கிறிஸ்தவரில் பெரும்பாலானோர் ஒரு தாலந்து நபரைப் போலத்தான்—
5 அல்லது 2 தாலந்து பெற்ற பிரசங்கிமாரோடேயே
தங்களை ஒப்பிட்டுக்கொண்டிருப்பார்கள்.

பிறர்க்குப் போதிக்குமளவு தங்களுக்குத் தெரியாது என எண்ணுவர்—
உங்களிடம் **உள்ளதைக் கொடுங்கள்!**

நீங்கள் வேதத்திலிருந்து கற்பவைகளை அவ்வப்போது பகிர்ந்துகொள்ள ஒரு சில நண்பரைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

ஒரு கன்வென்ஷன் அல்லது முகாமிலிருந்து திரும்பி வரும்போது, ஒரு சிலரைக் கூட்டி நீங்கள் கற்றவற்றையெல்லாம் பகிருங்கள்.

எந்தெந்த **வேத ஆராய்ச்சி நூல்கள்** உங்களுக்குப் பயனளித்திருக்கின்றன என்று அவற்றையும் அறிமுகம் செய்யுங்கள்.

*''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!''*

## ■ முடிவுரை

இந்த 10 படிப்பினைகளையும் நீங்கள் கைக்கொண்டால், திருமறைத் தியானமே உங்கள் வாழ்வில் அதிவுன்னத அகமகிழ்வைத் தந்துகொண்டிருக்கும் —

*''கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து,*
*இரவும் பகலும் அதைத் தியானிக்கிற மனிதன்*
***பாக்கியவான்*** *(= ஆனந்தன்)''* (சங் 1:2)

## பைபிள் ஒரு பிருந்தாவனம்!

*"Thy Word is like a garden, Lord,"*

*ஆண்டவரே, உம் வார்த்தை ஒரு தோட்டம்;*
*எத்தனைப் பூக்கள், எத்தனை வண்ணங்கள்!*
*உள்ளே நுழையும் எவரும்*
*மாலை மாலையாய்த் தொடுக்கலாம்!*

*ஆண்டவா, உம் வார்த்தை ஒரு சுரங்கம்;*
*எத்தனை மணிகள், எத்தனை மாணிக்கங்கள்!*
*உள்ளே செல்லும் எவரும்*
*பெட்டி பெட்டியாய் அள்ளலாம்!*

*ஆண்டவா, உம் வார்த்தை ஒரு விண்மீன் கூட்டம்;*
*எத்தனை அழகு, எத்தனை வெளிச்சம்!*
*உலகில் பயணிக்கும் எவரும்*
*தட்டித் தடுமாறாமல் நடக்கலாம்!*

*ஆண்டவா, உம் வார்த்தை ஒரு பாடகர் குழு;*
*எத்தனை மெட்டு, எத்தனை கீதங்கள்!*
*மொழிகள் பல, விதங்கள் பல,*
*பாடலோ ஒன்றே அல்லோ?*

*ஆண்டவா, உம் வார்த்தை ஓர் ஆயுதக்கிடங்கு;*
*எத்தனை ஆயுதங்கள், எத்தனை வகைகள்!*
*போராட்டம் எதுவாய் இருக்கட்டும்;*
*குவிப்போம் வெற்றி நிச்சயம்!*

*ஆண்டவா, நேசிப்பேன் உம் வார்த்தையை ...*
*தேடுவேன் அதின் மணிகளை ...*
*பறிப்பேன் அதின் பூக்களை ...*
*நடப்பேன் அதின் ஒளியினில் ...*

*— Edwin Hodder, 1837-1904*

# 5

# ஆராதனை

# WORSHIP

# 5

## எப்படி ஆராதிக்கக்கூடாது?

HOW NOT TO WORSHIP

**1**

நமது சொந்த இன்பத்திற்கென்று ஆராதிக்கக்கூடாது.

**2**

ஆவி ஆவி என்று திருவசனத்தை விட்டுவிடக்கூடாது.

**3**

கருத்துச் செறிவுக்காக ஆவியானவரை விட்டுவிடக்கூடாது.

**4**

பரம பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.

**5**

தனித்து ஆராதிப்பதை அசட்டை செய்யக்கூடாது.

**6**

ஆராதனையிலிருந்து வாழ்க்கையைப் பிரிக்கக்கூடாது.

**7**

பொருட்கள், இடங்கள், நபர்களை விக்கிரகமாக்கக்கூடாது.

**8**

ஒழுங்கும் கிரமமுமின்றி நடந்துகொள்ளக்கூக்கூடாது.

**9**

மற்ற ஆராதனை முறைகளைப் பழிக்கக்கூடாது.

**10**

ஆராதனையின் மறுபக்கத்தை மறந்துவிடக்கூடாது.

# 5

# எப்படி ஆராதிக்கக்கூடாது?

## அறிமுகவுரை

- பரலோகில் ''பிரசங்கம்'' இருக்காது;
